
www.tamilarangam.net

# தேடல்




## வீட்டை எரிப்பவர்களே நெருப்பணைக்கவும் வருகிறார்கள்






தேடல் 11

தமிழர் வகைதுறைவள நிலையம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# செந்தாமரையும் தேடகமும்

செந்தாமரியில (14-1-93) "ஸ்ரீஸ்கந்தனுல்" தேடக நூல் நிலையம் பற்றி ஆதாரமற்ற செய்தியொன்று சொல்லப்பட்டுள்ளது.

தேடக நூல் நிலையத்தில் கனடா, இந்தியா, இலங்கை மற்றும் புலம்பெயர்ந்த நாடுகளில் இருந்து வெளிவரும் எமக்கு கிடைக்கக் கூடிய அனைத்துப் பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் கருத்து வேறுபாடு இன்றி தேடகத்தின் ஆரோக்கியமான வளர்ச்சியை காட்டி நிற்கும் வகையில் போடப்பட்டு வருகின்றது. பல்வேறுபட்ட கருத்து உடைய வர்களும் இந் நூல் நிலயத்தின் வாசகர்களாக உள்ளனர்.

இந் நிலையில் நூல் நிலையம் பற்றி பிரசுரிக்கப்பட்டுள்ள செய்தியானது செந்தாமரையின் ஆரோக்கியமற்ற தன்மையையே காட்டி நிற்கிறது. இவ்வாறன ஆதாரபூர்வமற்ற செய்திகளை வெளியிடுவதனுல் தேடகத்தின் உண்மை நிலையை அறிந்த வாசகர்கள் செந்தாமரையில் வெளிவரும் ஏனைய செய்திகளையும் சந்தேகக் கண்ணோட்டத்துடன் பார்க்க வேண்டிய நிலையே ஏற்பட்டுள்ளது

தேடகத்தின் உண்மை நிலையை அறிந்த, ஆசிரியத்துறையில் அனுபவம் வாய்ந்த 'டீ.பி.எஸ். ஜெயராஜ்' ஆல் வழிநடத்தப்படும் 'செந்தாமரை'யில் இத்தகைய செய்திகள் வருவதென்பது ஆசிரியரை அறிந்த நண்பர்களுக்கு ஆச்சரியத்தையே தருகிறது.



தொடரும் இனவெறி

20/05/93 அன்று 26 வயது இளைஞரான கணேசமூர்த்தி விக்கினேஸ்வரமூர்த்தி வெள்ளை நிறவெறியரால் தாக்கப்பட்டார். நண்பர்களின் வீட்டிலிருந்து திரும்பும் வேளையில் பஸ் தரிப்பு நிலையத்தில் வைத்து இத் தாக்குதல் நடைபெற்றது. கடந்த வாரங்களில் இலங்கையர் மீது நடைபெற்ற மூன்றாவது தாக்குதல் இது வாகும்.

www.tamilarangam.net

R. Pathmanaba Iyer
27-B High Street
Plaistow
London E13 0AD
Tel: 020 8472 8323

**தேடல் 11**

தொடர்புகட்கு,

**தேடல்**

566, பாராளுமன்ற வீதி,
றொரன்ரோ, ஒன்ராரியோ
கனடா M4X 1P8

**THEDAL 11**

For More Info

**THEDAL**

566, Parliament St.,
Toronto, Ont.,
Canada M4X 1P8

**(416) 929 - 7612**

# வாழ்வோம்

எனது தேசத்தில் மௌனம் மட்டுமே
எழுதுகவென விதிக்கப்பட்டது.
ஆயினும் எம் தோழர்கள்
மொழியெழுத விழைகையில்
கைகளிலிருந்த பேனாக்கள் பறிக்கப்பட்டது
அவர்தம் படைப்புக்கள் கருக்கப்பட்டது
பின் அவர்கள் கடத்தப்பட்டனர்.

மரண ஓலமும் மௌனமும் கவியும்
ஓர் இருள் படர்ந்த காவல் அறையுள்
விலங்கிடப்பட்டு இருப்பீர் என்ற
நம்பிக்கையுள்
உம் விடுதலை பற்றி கோருகிறேன்
'எம் தோழரை விடுதலை செய்'

கொலையுள் முடிவுறும் மனித வாழ்வென
அவர் நினைப்பர்
அவர்களிடம் சொல்க தோழரே
மனிதர் பற்றி மனித வாழ்வு பற்றி
மானிட இருப்பு பற்றி நேயம் பற்றிய
மகத்துவத்தை அவர்களிடம்
சொல்க தோழரே
எம் தேச இழப்பினுள் வாழ்வு பற்றிச் சொல்க
அடக்குமுறைக்குள் நிமிரும்
எம் கரங்கள் பற்றிச் சொல்க
மீள மீள எழுதல் பற்றிச் சொல்க
எம் வாழ்வு கொலையுள் முடிவுறாவென
உரக்கச் சொல்க

**தோழர்களே!**
எம் தேசத்தின் எதிர்காலம் பற்றிய
வாழ்வின் சத்தியத்தை எழுதுகிறேன்
"எதிர்கால ஓர்பொழுது
மனித வாழ்வின் மீதான அழுத்தங்களுக்கு
தண்டனை விதிக்கும்."

**பா.அ.ஜயகரன்**

www.tamilarangam.net

# எங்கிருந்தாலும் மௌனமாயிரு! உடைபடவேண்டியதே!

சமீப காலங்களில் புகலிடமான கனடாவில் வாழும் தமிழர்கள் மத்தியில் ஆயுத வன்முறையானது தனது பிம்பத்தை வெளிக்காட்ட ஆரம்பித்தது. இதுவரை ஒரு கொலையும் நான்கு, ஐந்து கொலை முயற்சிகளும் சில துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களும் நடத்தி முடிக்கப்பட்டன.

முன்னர் விளையாட்டு மைதானங்களில் உதைபந்தாட்டத்தின் இறுதியில் ஓர் மாறுதலுக்காக மனிதர்கள்? தமக்குள் மாறிமாறி உதைக்கப்பட்டார்கள். அப்போது கத்தி, பொல்லு, பேஸ்பொல் மட்டை என்று உயிர்த்தெழுந்த பாரம்பரிய ஆயுதங்கள். பின்னர் வானொலி நிகழ்ச்சி நடத்திய இளையபாரதி என்ற நபர் மீது துப்பாக்கிப் பிரயோக முயற்சியுடன் ஓர் ஸ்தாபன வடிவம் பெற்றது; இங்கு கத்தி, பொல்லு, பேஸ்போல் மட்டை என்பவற்றிலிருந்து துப்பாக்கி என்னும் கலாச்சாரம் தொடங்கப் பெற்றது.
தமிழர் வாழும் சர்வதேசச் சூழலில் கருத்துப்பரிமாற்றமும், அரசியல் விமர்சனங்களும் வளர்ந்துவரும் இன்றைய நிலையில் (ஊரில் இல்லாததால்) எதற்காக ஆயுதக் கலாச்சாரம் ஆரம்பிக்கின்றது? கருத்து வெளிப்பாடு, கலாச்சார நிகழ்வுகள், பத்திரிகைகள் என்ற அளவுடனிருந்த தமிழ்ச் சமூகத்தின் நடவடிக்கைகள், அதாவது அரசியல்ப் போராட்டம் என்பது ஆயுத வகைப்பட்டதாக அமையவேண்டிய அவசியமற்ற கனடிய சூழலில் வன்முறை எப்படித் தோன்றியது என்பது கேள்விதான்.

அரசியல் காரணங்களால் புகலிடங்களில் வாழவேண்டிய புதிய மக்கள் சமூகங்கள் அந்தந்த மக்களின் கலாச்சார விழுமியங்களுடன் இரண்டறக் கலப்பதற்கு கணிசமான கால இடைவெளி தேவைப்படுகிறது. இவ்விடைப்பட்ட காலப்பகுதியில் புதிய சமுகத்தின் மக்கள் தமது சொந்தக் கலாச்சாரங்களையும் பேணிக் கொள்வதற்காக சங்கங்களையோ அல்லது கலாச்சார நிலையங்களையோ அமைத்து தமது தனித்துவத்தைப் பேணிக் கொள்வது மரபுத்தனமானதோ பிழையானதோ இல்லை. இப்படித் தோன்றுவது இயல்பானதும் கூட. ஆனால் இச்சங்கங்கள் குறுகிய முறையில் பிழையான ஊர் வாதம் கூறும் பிரதேச அடிப்படையில் அமைவதும், பின்னணியில் வேறு நோக்கங்களைக் கொண்டிருப்பதும் தவறானது.

இவ்வகையில் ஊர்ரீதியாக வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி என்று மோதுவது அவர்களின் குறுகிய சிந்தனையே காட்டுகிறது. இம்மோதல்களின் மூர்க்கத்தன்மையை பார்க்கும் போது ஊர்வாதத்திற்கும் அப்பால் அரசியல் அமைப்புகளின் பின்னணி உண்டோ என்றும் எண்ணத் தோன்றுகிறது. இக்கருத்தோட்டத்தின் அடிப்படையில்தான் கனடா வாழ் தமிழ் மக்களும் இவற்றுக்கு எதிராக கருத்து வெளியிடாமல் வாய் மூடி மௌனிகளாக இருக்கின்றனர். வாராந்தம் பத்திரிகைகள், செய்திகளைப் பார்க்கும் போது மக்கள் மனதில் அச்சமே வளர்கின்றது. ஆயுதமென்பது மக்களைப் பார்த்து எங்கேயிருந்தாலும் "மௌனமாக இரு" என்று கூறுவதைப் போல உள்ளது.

மேலும் கனடாவிலுள்ள சில தமிழர்களின் சங்கங்கள் அடிபாடு, கொலை முயற்சியில் கனடா பொலிசில் பிடிபடுவர்களை பிணையில் விடுவிப்பதாகவும் கேள்விப்படும் போது எத்தகைய நோக்கங்களை இச்சங்கங்கள் பின்னணியில் கொண்டவை என்பது மர்மமாய் உள்ளது. அரசியல் கருத்துகள், பத்திரிகைகள், தொடர்பு சாதனங்கள் போன்றவற்றின் மீது தொடர்ச்சியான பயமுறுத்தல்களும் தாக்குதல்களும் நடாத்தப்படுகின்றன.

இவற்றிற்கு எல்லாம் காரணமாக குறிப்பாக தமிழ் மக்களிடையே வளர்க்கப்பட்டுள்ள ஊர்வாதம், குழுவாதம் இயக்கவாதம் என்பவை பக்க காரணங்களாக அமைவதைக் காணலாம். குறிப்பாக இவை யாழ்ப்பாண சுபாவத்தில் அமைந்தவை.

கனடா வாழ் தமிழர் மத்தியில் நடைபெறும் சில சம்பவங்களைப் பார்க்கும் போது கண்டங்களையும் சமுத்திரங்களையும் தாண்டி பிழையான வகையில் வளர்க்கப்பட்ட தமிழ்த் தேசிய வாதத்தின் சில பிரதிநிதித்துவங்களின் சீரழிந்த பிம்பங்கள் போலவே தோன்றுகிறது.

**ஆசிரியர் குழு**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மயிர் பிடுங்கிகளின் காலம்

தமிழர் வகைதுறைவள நிலையத்தினால் நடாத்தப்பட்ட "சொல்லாத சேதிகள்" பற்றி கனடாவிலிருந்து வெளிவரும் "செந்தாமரை"யில் (கார்த்திகை 27, 1992) வெளிவந்த விமர்சனம் பற்றிய எங்களுடைய குறிப்புகள்:

மீனுக்கு வாலும், பாம்புக்குத் தலையுமாக ஜனநாயகத்திற்கு வாலைக் காட்டி, அராஜகத்திற்கு தலையைக் காட்டி பிழைப்பவர்களே, திறமையாக மக்களை ஏய்க்கும் வியாபாரிகளாகத் திகழ்கிறார்கள், என்பதற்கு ப. ஸ்ரீறிஸ்கந்தன் எழுதிய "விமர்சனம்" நல்ல உதாரணமாக இருக்கிறது.

"முன்னைநாள் தேடகம், இந்நாளைய தமிழர் வகைதுறைவள நிலையம்" என்று அவர் விமர்சனத்தின் ஆரம்பத்தில் குறிப்பிடுவதிலிருந்தே அவருடைய அடிப்படை விளக்கமின்மை புரிகிறது. ஏனெனில் தமிழர் வகைதுறைவள நிலையம் என்னும் வெகுஜன அமைப்பு நடாத்தும் நூல்நிலையம்தான் தேடகம்; இவ்வமைப்பினால் வெளியிடப்படும் சஞ்சிகைதான் தேடல்; இவ்வெகுஜன அமைப்பின் முன்னைய பெயர்தான் கலை இலக்கிய மன்றம். தேடகத்திற்கு வரும் வாசகர்களுக்கு தெரிந்த இவ்விடயம் விமர்சனக் கற்றுக்குட்டிகளுக்கு தெரியாதில்தான் ஆச்சரியம்!

நிலையத்தினரால் ஒழுங்கு செய்த சொல்லாத சேதிகள் வோபேர்ன் கல்லூரியில் நடத்தப்பட்ட போது ஏறக்குறைய முழு மண்டபமும் நிறைந்திருந்தது. விமர்சனமும், விமர்சிக்கும் மனேபாவமும் நேர்முகமாக சீரிய தன்மையுடன் இல்லாததால் வேண்டுமென்ற ஒரு பொய்! மண்டபம் பாதிக்கும் குறைவான பார்வையாளரைக் கொண்டிருந்ததாம். இரண்டாவது மேடையேற்றம் நடைபெற வேண்டும் என்பதற்காக தாமதித்தே விமர்சனம் எழுதியதாகவும் கூறப்பட்டு இருந்தது. இது ஆற்றாமையின் வெளிப்பாடே.

> அந்த சிங்கள நங்கையின் பைலாப் பாட்டைப் போட்டு ரசிகர்களைக் கிளுகிளுப்பூட்ட வேண்டும் என்ற எண்ணம் ஏன் தமிழர் வகைதுறைவள நிலைய நண்பர்களுக்கு ஏற்பட்டது.

தமிழ் சிங்கள மெல்லிசையின் போது சிங்களப் பாடகியின் "பைலா" வைக் கிளுகிளுப்பூட்டும் நடனமென வக்கிரமாக விமர்சிக்கப்பட்டிருந்தது. நிகழ்ச்சியில் பாடப்பட்ட பாடல்கள் இலங்கையில் பிரபலமானவை. ஒன்று தமிழ் சிங்கள இருமொழிப்பாடல். யுத்தம், அழிவு என்பவற்றிற்கு எதிரான பாடல். மற்றையவை ஏகாதிபத்தியம், நவகாலனித்துவம், அடக்குமுறை என்பவற்றிற்கு எதிராக நந்தாமாலினி, சுனிலா, அபயசேகரா போன்றோரினால் பாடப்பட்டவையாகும்.

பாடகர்களில் ஐந்து பேரிலும் சிங்களப் பாடகி ஒருவரைத்தான் கிளுகிளுப்பாக ரசித்திருக்கிறார் ப. ஸ்ரீறிஸ்கந்தன். மேலும் பாடியவர்களில் தமிழ் இளைஞர் ஒருவரும் சிங்கள இளைஞர் ஒருவரும் பெண் பாடகியும் தாளத்திற்கேற்ற வகையில் உடலை அசைத்தே பாடினார்கள். ஆனால் பெண்ணை மாத்திரமே வக்கிரமாக ரசித்து விமர்சிப்பது ஏற்கனவே ஊறிப்போன ஆண்மேலாதிக்க சுபாவத்தையே பிரதிபலிக்கிறது. முக்கியமாக பெண்கள் உடலை அசைத்துப் பாடுவது ஆண்களை கிளுகிளுப்பூட்டுவதற்கே என எண்ணும் மனோபாவம் பெண்ணை வெறும் தசைப்பிண்டமாக கருதும் நிலையில் இருந்துதான் தோன்றியது..

"மறைந்த சிவரமணியின் 'சொல்லாத சேதிகள்' என்ற கவிதைத் தலைப்பை இதற்கும் இட்டுள்ளார்களே. நிறையவே விஷயம் இருக்குமென்ற நினைத்த எனக்கு ஏமாற்றம்தான்." என்று அவர் எழுதும்போது பெண்களுக்கு மேலுள்ள அடக்குமுறை சம்பந்தமாக அதிகமாகவே தான் எதிர்பார்த்ததாகக் காட்டியுள்ளார். ஆனால் ஒரு இடத்தில் "ஏதோ வாழும் சூழல், சமுதாயம், மனோவியல் " என்று வளவளத்துச் செல்கிறார். இந்த இடத்தில் சமூக அமைப்பு முறையை சரியானதாக ஏற்றுக் கொண்டு பெண் அடக்குமுறை என்பதை ஏதோ இச்சமூகத்தின் சிறு குறைபாடாகவே கண்டுள்ளார். இதுவே பல ஆணாதிக்கவாதிகளின் பரவலான கருத்தாகும்.

பொதுவாக மற்றையை நிகழ்ச்சிகளைப் போன்று எல்லாவகையான அம்சங்களிலும் அதாவது ஒழுங்கமைப்பு, நடனம், கலையம்சம், கருத்துக்கூறப்பட்ட விதம், ஜனரஞ்சகத் தன்மை போன்றவற்றில் சிறப்பாக அமைந்தது வசந்தா டானியலின் நெறியாள்கையில நடந்த"சொல்லாத சேதிகள்" நாட்டிய நாடகம் என்பது பார்வையாளர்களரது கருத்து. இது எம்மால் சொல்லாத சேதிகள் விமர்சனக கூட்டத்தில் அறியக்கூடியதாய் இருந்தது.

சொல்லாத சேதிகள் என்னும் கவிதைத் தொகுப்பு பத்து ஈழத்துப் பெண் கவிஞர்களின் கவிதைகளை தாங்கி வெளிவந்த நூல். இக்கவிஞர்களில் ஒருவரான சிவரமணி சூழலின் கைதியாகித் தற்கொலை செய்து கொண்டார். அதில் இன்னொரு கவிஞரான செல்வி இன்று புலிகளின் சிறையில் வாடுகிறார். சொல்லாத சேதிகளின் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் விமர்சித்தபோது இலக்கிய கர்த்தாக்களுடன் தனது பரிச்சயம் பற்றிப் பீற்றிக் கொண்ட இவர், இச் "சொல்லாத சேதிகள்" கவிதைத் தொகுப்பின் கவிஞர்களில் ஒருவரும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெண்நிலைவாதியும், சமூகப் பிரக்ஞை மிக்கவருமான செல்வி புலிகளின் சிறையில் இருப்பதை திட்டமிட்டு இருட்டடிப்பு செய்துள்ளார். இங்கு இவர் புலிகளின் ஜனநாயகமறுப்புச் செயல்களை மூடிமறைப்பதன் மூலம் புலிகளுக்கான ஜால்ரா அடிப்பவராகத் திகழ்கின்றார்.

'சொல்லாத சேதிகள்' எனும் கவிதைத் தொகுப்பு பெண்களால் பெண்கள் பிரச்சினை பற்றி பல்வேறு கோணங்களிலிருந்தும் எழுதப்பட்ட கவிதைகளைக் கொண்டு தொகுக்கப்பட்டிருந்தது. இக் கவிதைத் தொகுப்பின் அரங்குக் கலை வடிவமே இந்நாட்டிய நாடகம். இந்நாட்டிய நாடகத்தை வசந்தா டானியல் அவர்களின் நெறியாள்கையில் அவரது மாணவிகளால் நிறைவேற்றப்பட்டது.

இக்கவிதைத் தொகுப்பு எழுதப்பட்டபோது இருந்த சமூக சூழ்நிலையே இன்று கனடாவில் வாழும் இலங்கைத் தமிழ்ப் பெண்கள் மத்தியிலும் நிலவுகிறது. பெண்களின் அடக்குமுறை பற்றி சமூகத்தில் விழிப்புணர்வூட்டவே இவ்வகையான கலை நிகழ்வுகள் நிலையத்தினரால் நடாத்தப்பட்டு வருகின்றன. சாதாரணமாக விழாக்களில் நாட்டிய நாடகமென்றவுடன் பெண்களின் ஆட்டம் என்றும் மகாபாரதம், கண்ணன் — ராதா, சக்தி — சிவன், சிலப்பதிகாரம் அல்லது கற்பில் சிறந்தவள் கண்ணகியா மாதவியா? இல்லையேல் பெண்ணின் மயிருக்கு மணம் உண்டா இல்லையா? என்று விவாதமும், பட்டிமன்றமும் பார்த்துப் பழகியவர் எங்கள் ஆண்கள், ஒரு கையில் தமது அடிமை மனைவியை அணைத்தபடி மறுகையில் ஓம் முருகா சங்கிலியை கையில் வைத்து விளையாடியபடி நிகழ்ச்சியை ரசிக்க வந்த ஒரு ஆண்மகனுக்கு இந்த "சொல்லாத சேதிகள்" என்னும் கலை நிகழ்வு தனது முகத்தில் ஓங்கி அறைந்ததாகவோ அல்லது செருப்பால் அடித்ததாகவோ உணர்ந்தார்களாயின் இதற்காக ஒருமுறையல்ல நாம் நூறுமுறை சந்தோஷிக்கிறோம். இதற்கான முழுப் பெருமையும் கவிதைத் தொகுப்பை எழுதிய கவிஞர்களையும், இந் நாட்டிய நாடகத்தை அளித்த மாணவிகளையும் கலைஞர்களையும் சாரும்.

பலிக்கடாக்கள் நாடக விமர்சனத்திற்கான விளக்கத்திற்கு முதல் நாடகத்தின் நோக்கம் பற்றிக் கூறுவது நல்லது. முக்கியமாக இந்நாடகத்தில் விடுதலைப் போராட்டத்தை நாம் கொச்சைப்படுத்தவில்லை. மேலும் தற்கொலைப் போராளிகளின்(கரும் புலிகள்) சமூகம் சார்ந்த தியாக உணர்வுகளை மதிக்கிறோம். பிழையான வழியில் இத்தியாக உணர்வுகளை அரசியல் வியாபாரமாக்கும் தலைமைகளையே நிராகரிக்கிறோம். **எந்த இயக்கத்தில் என்றாலும்** தம்மை இணைத்து அர்ப்பணித்த தேசிய விடுதலைப் போராளிகளின் விடுதலை உணர்வுக்கு தலைவணங்குகிறோம். (நாடகத்தின் இறுதியில் கூறப்பட்ட கருத்துக்களை; அவதானித்திருந்தால் புரிந்திருக்கும்!)

நாடகத்தின் பிரதான நோக்கம் தமிழ்ப் பேசும் பிரதேச இன்றைய அரசியலை அரங்கேற்றுவதாகும்.

அதில் தனிநபர் துதிபாடும் தலைமை மயக்கத்தை பல உணர்வுமிக்க போராளிகள் வெறுக்க ஆரம்பித்து விட்டார்கள் என்னும் உண்மை கூறப்படுகிறது.
இயக்கத்திற்கும் போராளிகளுக்கும் தற்பாதுகாப்பு என்னும் போர்வையில் பாசிசத்தை வளர்க்க உதவும் கருவியான சயனைட் குப்பி நிராகரிக்கப்படுகிறது.
போராளிகளை தற்கொலைக்குத் தள்ளிவிடும் "மூளைச் சலவை" முறையினை அம்பலப்படுத்தப்படுகிறது.
மாற்றுக் கருத்துள்ளவர்களையும் ஜனநாயக சக்திகளையும் துரோகிகளாக காட்டி வதைமுககாம்களில் அடைத்தல், கொலை செய்தல் என்பன அம்பலப்படுத்தப்படுகின்றன.
தேசிய விடுதலைப் போராட்டத்தில் கோழைத்தனத்தின் உச்சக்கட்டத்தை பிரதிபலித்த முஸ்லீம் மக்களின் வெளியேற்றத்தை நாடகம் வெளிப்படுத்தியது
இப்பிரதான நோக்கங்களுக்காக நிலையத்தினால் மேடையேற்றப்பட்டது இந்நாடகம். பிழையான அரசியல் நோக்கங்களையும், மக்களுக்கு எதிரான அராஜகங்களையும் தயவு தாட்சண்யமின்றி பிழையென்று கூறுவதில் எம்மிடையே தயக்கம் கிடையாது. அராஜகம் வியாபித்துப் போயுள்ள இன்றைய நிலைமைகளில் அதற்கு எதிரான வேலைகள் நீறுபூத்த நெருப்பாகத்தான் கனன்று கொண்டிருக்கிறது. ஆனால் மக்களின் தலைவர்களாக விடுதலை சக்திகளாக நடித்து வரும் பாசிஸ்டுகளும், சர்வாதிகாரிகளும் மக்களால் துரத்தியடிக்கப்பட்ட வரலாறுகள் பல உண்டு என்பதை நாம் நினைவு படுத்த வேண்டும்.

இப்போலித் தலைமைகளை வைத்து **கொளுத்துகிற** காட்சி மேடைகளில் மட்டுமல்ல நிஜ வாழ்க்கையிலே, அரசியலிலே காணத்தான் போகிறோம். இவர்கள் மக்களால் துரத்தியடிக்கப்படத்தான் போகிறார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உலக அரசியல் வரலாற்றில் இடம் பெற்ற பல சரித்திர சம்பவங்களுக் குரிய உண்மையான காரணங்கள் இன்னமும் கேள்வியாக, ஊகங்களாக இருக்கின்றன. அந்த வகையில் எமது போராட்டத்திலும் முஸ்லீம்களின் வெளியேற்றம், ஒரு சில கைதுகளைச் சொல்லலாம்.

ஹிட்லர் யூதர்களைக் கொடுமைப்படுத்தியபோது "இனச் சுத்திகரிப்பு" என்னும் தத்துவத்தை நாசிகள் மூலம் எப்படி நடத்தி முடித்தானோ அதைவிடக் கேவலமாக புலிகளின் முஸ்லீம் மக்களை வெளியேற்றும் நடவடிக்கை அமைந்தது. இதனை விமர்சனத்தில் கைத்தூக்கலாகவே கூறியதுடன் இவற்றினை "வரலாற்றின் கேள்விக்குறிகள்" எனவும், சில கைதுகள் எனவும் சடைந்துள்ளார். இவற்றையும் மாற்றுக் கருத்துள்ளவர்களை அழித்ததையும் பிழைகளெனக் கண்ட பின்பு, மனச்சாட்சிக்கு விரோதமான முறையில் இதிலிருந்து நழுவியுள்ளார். அப்படியாயின் 83 ஆடிக் கலவரத்திலும் மற்றும் தொடர்ந்த சம்பவங்களிலும் சிங்கள அரசின் உதவியுடன் காடையர்களால் பாதிக்கப்பட்ட தமிழ் பேசும் மக்களின் ஒடுக்குமுறைகளை வரலாற்றின் கேள்விக்குறிகளாக எம்மால் பார்க்க முடியுமா?

மற்றைய இனத்தின் இரத்தத்திலும் கண்ணீரிலும் தமது "இனத்தினை சுத்திகரிப்பு" செய்தவர்களுக்கு இப்படியான கூற்றுகளே துணைபோகின்றன. இப்படியான விமர்சகர்களே வக்காலத்து வாங்குகிறார்கள்.

"நாடக இறுதியில் ஒருவர் தனது சயனைற் குப்பியைத் தூக்கி எறிகிறார். அதாவது விடுதலைப் புலிகள் தூக்கி எறியப்பட வேண்டும் என்பது போல் தலைவருக்காக அல்லது இனத்துக்காக, போராட வேண்டும் என்று அரசியல் ஞானோதயம் பெறுகிறார். குழப்பமாக இருக்கிறது."

"நாடக இறுதியில் ஒருவர் தனது சயனைற் குப்பியைத் தூக்கி எறிகிறார். அதாவது விடுதலைப் புலிகள் தூக்கி எறியப்பட வேண்டும் என்பது போல் தலைவருக்காக அல்லது இனத்துக்காக, போராட வேண்டும் என்று அரசியல் ஞானோதயம் பெறுகிறார். குழப்பமாக இருக்கிறது." இன்று ஓர் விடுதலை போராளியை எடுத்துக் கொண்டால் அவனது போர்ச் சூழலும் அவனது வயது எல்லைகளும் அவனைக் போர்க்களம் நோக்கியே வைத்திருக்கிறது. அவனை அவனது சமூகம் சம்பந்தமாகவும் அவனது போராட்டத் தலைமை சம்பந்தமாகவும் சிந்திக்க முடியாதவாறு போரின் நெருக்குவாரத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறான். அவன் தன்னை நாட்டுக்காக அர்ப்பணிக்கும் போது அவனது தலைமை தனது சுயநலத்திற்காகவும் தனது பேரம் பேசலுக்காகவும் இவர்களது தியாகங்களை அடகு வைக்கிறது. தலைமைகளின் ஒவ்வொரு அடகுவைக்கும் நடவடிக்கைகளாலேயே, அவன் தலைமைகளின் அரசியல் வங்குரோத்தைப் புரிந்து கொள்ளுகிறான். இவ் அடகுவைக்கும் நடவடிக்கைகளின் பின் அமைப்புகளிலிருந்து காலத்துக்கு காலம் போராளிகள் கணிசமான தொகையில் வெளியேறியதும் வெளியேறிக் கொண்டிருப்பதும் தெரிந்ததே.

மேலும், "தலைவருக்காக அல்ல, இனத்துக்காக போராட வேண்டும் என்று அரசியல் ஞானோதயம் பெறுகிறார். குழப்பமாக இருக்கிறது". ஒரு போராளி தலைவருக்காக அல்ல மக்களுக்காகவே போராட்டம் என்ற கருத்துநிலையை வந்தடைதல் இவ்விமர்சகருக்கு குழப்பமாக இருக்கிறதாம். இந்நிலையில் அவர் இரண்டு நிலைகளைத் தானே தெளிவுபடுத்துகிறார். ஒன்று தான் சார்ந்த அரசியல் ஸ்தாபனத்தின் கருத்து நிலையையும், தனது கருத்து நிலையையும். இப்படி மிக இலகுவாக அம்பலப்படுத்திய பெருமை ப. ஸ்ரீஸ்கந்தன் அவர்களையே சாரும். எம்மைப் பொறுத்தமட்டிலே இங்கும் ஒரு பலிக்கடாவையே காணுகிறோம்.

எமக்கு முன்னால் இருக்கும் பல பலிக்கடாக்களை பார்க்கும் போது இப்படியான பல கலை நிகழ்வுகள் அவசியம் பற்றி உணருகிறோம். இக்கலை நிகழ்வினில் "மூங்கில்கள் எரியும் கரையினில்" பங்கு பற்றிய தமிழ் — சிங்கள, கலைஞர்கள், "ஆபிரிக்க நிகழ்சியை" நடாத்திய 'கென்ய மனித உரிமைகள்' அமைப்பு, "சொல்லாத சேதிகள்" நாட்டிய நாடகத்தை நிகழ்த்திய 'நாட்டியக் கலாலய' மாணவிகள், "பேசுதல்" கவிதா நிகழ்வு கலைஞர்கள், "பலிக்கடாக்கள்" நாடகக்கலைஞர்கள், "எந்தையும் தாயும்" நாடகக் கலைஞர்கள் இவற்றைவிட முக்கியமாக இக்கலா நிகழ்வில் பங்கு பற்றிய எல்லா பெண் கலைஞர்கள் அத்துடன் தங்கள் உழைப்பை வழங்கிய நண்பர்கள் போன்றோரின் சிந்தனை பூர்வமான இணைவினால்தான் "சொல்லாத சேதிகள் " என்னும் கலை நிகழ்வினை தமிழர் வகைதுறைவள நிலையத்தினால் நிகழ்த்திக் காட்ட முடிந்தது. மேலும் இங்கு காணப்படும் சிந்தனை வறுமை உடைத்தெறியும் தேவையும் எம்முன்னே உள்ளது. மேற்கூறிய அர்ப்பணிப்பு உள்ள கலைஞர்களின் உதவியுடன் தமிழர் வகைதுறைவள நிலையம் இது போன்ற பல நிகழ்வுகளை நிகழ்த்திக் காட்டும் என்பதில் சந்தேகமில்லை.

"இந்நாடகத்திற்கு நேரடியாகவும், மறைமுகமாவும் விடுதலை இயக்கங்களிலிருந்து வெளியேறிய (சிலர் காசு கொடுத்தும் போய்த் தொலை என்று அனுப்பப்பட்டவர்கள்) சிலர் பங்கு கொண்டுள்ளனர் என அறிகிறேன். இவர்களுக்கு உறைக்கும்படி சொல்வதென்றால் உங்கள் இந்த செயல்பாடுகள் மண்டையில் போடுவதை நியாயப்படுத்தாதா?"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

> உங்கள் அங்கத்தினர் ஒருவர் எழுதும் நாட்குறிப்பில் புலிகளை அவர்கள் என்றுதான் எழுதுகிறார். எழுத்து நயம் தெரிந்தவர்.

"இந்நாடகத்திற்கு நேரடியாகவும், மறைமுகமாவும் விடுதலை இயக்கங்களிலிருந்து வெளியேறிய (சிலர் காசு கொடுத்தும் போய்த் தொலை என்று அனுப்பப்பட்டவர்கள்) சிலர் பங்கு கொண்டுள்ளனர் என அறிகிறேன். இவர்களுக்கு உறைக்கும்படி சொல்வதென்றால் உங்கள் இந்த செயல்பாடுகள் மண்டையில் போடுவதை நியாயப்படுத்தாதா?"மனிதன் ஓர் சமூகப்பிராணி எனவே அவனது மொழியும் அவன் சார்ந்த சூழல் சார்ந்ததே. குறிப்பாக 1983க்குப் பிற்பட்ட சூழலில் தமிழ் மொழியும் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு புதிய சொற்றொடர்களை உள்வாங்கியது. கழுத்தை நெரித்தான், கோடரியால் வெட்டினான்.. என்றசொற்றொடர்கரள் மறைந்து போஸ்ட்டில் கட்டுதல், காதுக்குள் வைத்தல், மண்டையில் போடுதல், துண்டு கொடுத்தல், போன்ற எண்ணிலடங்கா சொற்றொடர்களை உள் வாங்கியது, இவை தமிழ் மக்கள் வாழும் சூழலில் ஏற்படுத்திய தாக்கம்(பயம்) சொல்லிலடங்கா. 1983ல் ஆரம்பித்த துரோக அழிப்பு (கள்ளன்,துரோகி,விபச்சாரி) வேலைகளுக்காக எமது பிரதான ஐந்து இயக்கங்களும் மின்கம்பத்தையே பங்குபோட்டுக் கொண்டன. ஆரம்பகாலத்தில் இதன் பயபீதியில் மக்கள் தவித்தாலும் கால ஓட்டத்தில் இதுவும் அன்றாட வாழ்வில் ஒன்றாகக் கலந்தது. இதன் பின்னர் 1984ல் எழுந்த உட்கட்சி ஜனநாயக மறுப்பு பிரதான ஐந்து இயக்கங்களையும் தாக்கிய போது இயக்கங்களில் ஆகக் குறைந்த ஜனநாயகம் மற்றும் புதிய சிந்தனைகளுக்காக போராடியவர்கள், குரலெழுப்பியவர்கள் கொலை செய்து மண்ணில் புதைக்கப்பட்டனர். இதில் இலங்கை, இந்தியா, கடல், நிலம் என்ற பாகுபாடின்றி வசதிக்கேற்ப நடந்தேறியது. இந்த உட் கட்சி போராட்ட சூழ்நிலையிலேயே மண்டையில் போடுதல் என்ற சொல் பரிணமித்தது. இந்த உட்கட்சி அராஜகம்தான் தான் சார்ந்த அரசியல் சார்ந்த ஸ்தாபனம் என்ற நிலை தெளிவாகியவுடன் ஒவ்வொரு போராளியும் தனக்குத் தெரிந்த திசைவழியே தப்பியோடினார்கள். இலங்கையின் தமிழ்ப் பிரதேசங்கள் தவிர்ந்த சர்வதேசமெங்கும் இவர்கள் சிந்திக் கிடக்கின்றனர். ஒவ்வொரு இயக்கத் தலைமையும் தனது தலைமையை கட்டிப் பாதுகாப்பதற்காக உளுத்துப்போன உத்திகளை (காசு களவெடுத்திட்டான், சண்டைக்குப் பயந்து ஓடிவிட்டான், தாங்கள்தான் விலத்தியது, வெண் தொடர்பு போன்று இன்ன பல) இத்தப்பியோடிய போராளிகளின் மேல் பாவித்தனர். இந்த உளுத்த உண்மையை ? இவ்விமர்சகரும் உள்வாங்கி வைத்திருக்கிறார்.

> கரும் புலிகளின் அந்த வாக்குமூலம் கிண்டல் செய்யப்படுவதற்குரிய ஒரு சாதாரண வசனமாக எடுத்துக் கொண்டு அதனை உபயோகித்தது மனிதமற்ற ஒரு நாடகப் பொறுக்கியால்தான் முடிந்த காரியம் என நம்புகிறேன்.

புகலிடம் புகுந்த ஜனநாயக சக்திகள் தங்களது அரசியல் நிலைப்பாட்டிற்கு ஏற்ப சிறு சஞ்சிகைகள் அல்லது சிறு குழுக்களாகவோ தமது தளங்களில் மனித உரிமைகளுக்கும் தமிழ் மக்களின் அரசியல்த் தீர்வுக்காகவும் போராடிவருகின்றனர். இங்குமவர்களுக்கு தாக்குதல்கள் கொலை மிரட்டல்களும் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன. இதற்கு கனடாவும் விதிவிலக்கல்ல. இவை அனைத்துக்குள்ளும் அகதியாய் வாழும் போராட்ட சக்திகள் கட்டுண்டு கிடக்கின்றனரா என்றால் இல்லை. அகதி வாழ்வின் அவலம், பொருளாதாரச் சுமை, துரத்திக் கொண்டிருக்கும் மண்டையில் போடும் பயபீதி இத்தனையும் தாங்கி ஒவ்வொரு தமிழ் அகதியும் ஒவ்வொரு நாளையும் கடத்திக் கொண்டேயிருக்கின்றனர். இப்போராட்ட சக்திகள் மேலும் வலுப்பெறுவதைப் தவிர்ப்பதற்கு, அராஜக அமைப்புகள் பயன்படுத்தும் அதே 'மண்டையில் போடுதலையே' ப. ஸ்ரீறிஸ்கந்தன் என்ற பொறுக்கி (அவர்கள்) பயன்படுத்தி. "செந்தாமரை" யினூடு விட்ட உறுமலே "சொல்லத சேதிகள்" பற்றிய விமர்சனமாகும்.

பி.கு. பெட்டிக்குள் போடப்பட்டவை சொல்லாத சேதிகள் பற்றி செந்தாமரையில் வந்த ஸ்ரீறிஸ்கந்தனின் கருத்துக்கள்.

தேடல் .ஆசிரியர் குழு

### காட்சிகள்

ஓடையிலே நீரது ஓடும் வேளைதனில்
ஓலையும் சருகுடன்
ஓரடித் தடியும் ஓடும்

ஆனந்த ராகமது இனிதாக
அரங்கினில் இசைத்திடும் வேளை
மூலையிலே சிலர் இருந்து
முகம் சுளித்து முணுமுணுப்பர்

அழிகின்ற மனிதத்துவத்தின்
அந்தரங்க சாட்சியாக
அகிலமெங்கும் அலைகின்ற
அகதிகள் இலக்கியங்கள்
அராஜகம்தனை எதிர்த்து
அலையென எழுகையிலே

குஷ்பு குளிப்பதன் அழகினை
குதிகால் தெரிவதனை
பத்திரிகை பல பொறுக்கி
பக்கம்தனை நிரப்பும்
பத்திரிகையும் வாரவாரம் வெளிவரும்

மொழியுரிமை கோரியெழுந்து
வாழுமுரிமை தனையிழந்து
வாய்மூடி மௌனமாய் வாழ்க்கையின்
வாழ்வியல் தனையிங்கு
சொல்லாது மறைத்திடும் நிலைவிடுத்து
சொல்விடும் வேளைதனில்

இம்மண்ணில் தங்கள்
இருப்பினை காத்திட
ஆதரவு நிலையதனை
ஆழமாய் வெளிக் கொணர
புத்கம் பல பொறுக்கி
புத்திசீவித்தனம் காட்டி
வித்துவர்கள் செய்திடும்
விமர்சனமும் வெளிவரும்.

— சிவம் —



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# குண்டு வெடிப்பு

நேரம் ஆக ஆக அவளுக்கு பதட்டம் அதிகரித்துக் கொண்டேயிருந்தது. தட்டுத்தடுமாறி வாசல் வரை சென்று ஏதாவது அரவம் கேட்கிறதா என காதைக் கூர்மையாக்கிப் பார்த்தாள். பெரும் இரைச்சலும் குழப்பமுமாக இருந்தது. அவளுக்குப் பரிச்சியமான பக்கத்து வீட்டு ஆட்களையெல்லாம் கூப்பிட்டுப் பார்த்தாள். யாரும் பதில் குரல் கொடுக்கவில்லை. அந்தப் பெரிய சத்தம் கேட்ட திசை அவளால் யூகிக்கமுடிந்தது. அவள் மகன் கடலை விற்கும் இடமாகத்தான் இருக்க வேண்டும் என்ற எண்ணம் வலுத்ததும் அழுகை பீறிட்டுக் கொண்டு வந்தது. ஆனால் மறுபடியும் அவளுக்கு திசையில் சந்தேகம் வந்ததும் இந்தப் பக்கம் அவன் போகமாட்டான் என மனதை ஆசுவாசப் படுத்திக் கொண்டாள். இருந்தாலும் இவ்வளவு நேரமும் அவன் ஒரு நாளும் வராமல் இருந்ததில்லை என்பதை நினைக்கும் போது மறுபடியும் உடலெல்லாம் நடுங்கியது.

அவளுக்கு எல்லாமுமே அவனாகத்தான் இருந்தான். கண்ணை இழந்த போதும் சரி கணவனை இழந்த போதும் சரி அவனே ஊன்றுகோலாகினான். சொல்லிக் கொள்ள சொந்தம் இல்லாத சேரி வாழ்க்கையாக இருந்தாலும் மனிதர்கள் ஒவ்வொருவரும் வாழ்ந்துதான் ஆக வேண்டும் என்கின்ற நியதிக்கு அவள் மட்டுமென்ன இந்தப் பிரபஞ்சமே தலைசாய்க்கத்தான் வேண்டும். மனித உயிர் தன்னை நிலைநிறுத்திக் கொள்ளப் போராடுகின்ற ஒவ்வொரு கணமும் ஒரு வரலாறுதான். ஆனால் ஏதோ ஒரு விதத்தில் மனித உயிர்களை வலிந்து அழிப்பதற்கு கங்கணம் கட்டி நிற்கும் சக்திகளுக்கு எண்ணிக்கை பெருகிக் கொண்டே இருக்கிறது. காரணங்கள் மாறுபடலாம். சூழ்நிலைகள் மாறுபடலாம். ஆனால் இரையாகும் மனித உயிர்கள் எல்லாமே ஒன்றுதான்.

மறுபடியும் தட்டுத்தடுமாறி வாசலுக்கு வந்து பார்த்தாள். பெரும் இரைச்சலும் ஓலமுமாக குழம்பிக் கிடந்தது. சுற்றுப் புறம் அங்கும் இங்கும் ஓடும் காலடியை ஓசையையும் கரி நாற்றத்தையும்தான் அவளால் திட்டவட்டமான உணரமுடிந்தது. இதயம் ஒரு கணம் நின்று மறுபடியும் வேகமாக அடித்துக் கொண்டது. அந்தச் சம்பவம் நடந்த அன்றும் அப்படித்தான் என்பது ஞாபகத்துக்கு வந்ததும் மகனின் பெயரைச் சொல்லி உரக்கக் கூப்பிட்டாள். அது அவளிடமே திரும்பி எதிரொலித்தது. உட்கார்ந்து ஒரு பாட்டம் அழுது தீர்த்தாள். பட்டாசுக் கம்பனியின் வெடிவிபத்தில் கருகிப் போன கணவனின் உடலும் கண்முன்னே தோன்றி மறைந்து போயிற்று. பணம் இருந்தால் பார்வையை மீண்டும் பெற்று விடலாம் என்று சிறுவனுக்கு தெரிந்த போது அம்மாவைக் கட்டியணைத்து பெரிய மனிதத் தோரணையில் ஆறுதல் கூறினான். இதோ பணத்தை உழைத்து விடுகிறேன் என்று கையைச் சொடுக்கி ஓசை எழுப்பி அவளைச் சிரிக்க வைத்தான். அன்றிலிருந்து அவன் கடலைச் சுருளோடு பம்பரமாக சுற்றிவந்தான். பஸ் நிலைய நண்பர்கள் கூட அவனுக்காக வருத்தப்பட்டுக் கொண்டார்கள். அவனோடு போட்டி போடுவதைக் கூட தவிர்த்துக் கொண்டார்கள். கிடைக்கும் ஒவ்வொரு சதத்திலும் அம்மாவின் பார்வை வந்துவிடும் என்று மலைபோல் நம்பியிருந்தான்.

ஆனால் நகரம் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமாகப் போக்குக் காட்டியது. காக்கிச் சட்டைகளும் கறுத்த துப்பாக்கிகளும் எதற்கெடுத்தாலும் துருத்திக் கொண்டு நின்றன. திடீரென ஒரு நாள் நகரமே புகைமண்டலமாக பற்றி எரிந்தது. ஏனென்று அவனுக்கு காரணம் புரியவில்லை. ஆனால் அவன் கண்முன்னாலேயே ஒரு மனிதன் உயிர் கொடூரமாகப் பறிக்கப்பட்டதைப் பார்த்து நிலைகுலைந்து போயிருந்தான். இன்னும் எத்தனையோ அரக்கத்தனங்களைப் பற்றி அவன் கேள்விப்பட்டாலும் எல்லாவற்றிற்கும் மேலாக சிறையில் கண்கள் தோண்டியெடுக்கப்பட்டதைக் கேள்விப்பட்டதும் அம்மாவைக் கட்டிக் கொண்டு தேம்பி தேம்பி அழுதான். அவனின் குடிசையிலிருந்து அந்தச் சிறை நடந்து போய்விடக் கூடிய தூரம்தான். ஆனால் அதைப் பற்றி அவன் ஒருக்காலும் அறிந்திருக்கவில்லை. அது எப்படி நடந்திருக்கும் என்று கற்பனை பண்ணிப் பார்த்தான். எல்லாமே பெரிய பெரிய உருவங்களாக சாம்பல் நிறத்தில் தெளிவில்லாமல் தெரிந்தது. காரணத்தைக் கேட்டு தாயை உலுக்கினான். அவளுக்கும் எதுவும் தெரிந்திருக்கவில்லை. இது அநியாயம் என்றும் மட்டும் திரும்ப திரும்ப சொல்லிக் கொண்டிருந்தாள். ஆனால் அவனது பிஞ்சு மனம் அதிலெல்லாம் சமாதானமடைந்ததாக தெரியவில்லை. அம்மா கண்பார்வை இல்லாமல் படும் அவஸ்தையை ஒவ்வொரு நாளும் பார்த்து வெதும்புகின்றவனுக் கு அவளுக்குப் பார்வை கிடைக்காதாவென ஏங்கும் அவள் உள்ளத்துக்கு இருக்கும் கண்ணைக் குத்திப் பறிப்பது என்பது அவனளவில் வார்த்தைகளால் வர்ணிக்கமுடியாத கொடூரம்தான். அதற்குப் பின்பும் பல கொடூரங்கள் நடந்து விட்டிருந்தாலும் அவனால் அதை மட்டும் மறக்க முடியவில்லை. நண்பர்களோடு கதைக்கும் போது மிகவும் ஆத்திரப்படுவான். சில சமயங்களில் அழுதே விடுவான். கண்ணிழந்த அந்த முகம் தெரியாத மனிதர்களை பரிதாபத்தோடு நினைத்துப் பார்ப்பான். வேதனையில் நெஞ்சுக்கூடு விரிந்து சுருங்கும்.

இதோ வந்துவிடுகிறேன் டாக்கடரிடம் போகலாம் என்று சொன்னவன் போனபக்கத்தை மீண்டும் ஞாபகப்படுத்திப் பார்த்தாள். அது வெடிச்சத்தம் கேட்ட பக்கத்துக்கு ஒத்ததாகவேயிருந்தது. கலவரமடைந்தவள் மறுபடியும் திசையை ஞாபகப்படுத்திப் பார்த்தாள். குழப்பமாகவும் கலங்கலாகவும் இருந்தது. வாசற்படியில் உட்கார்ந்து கொண்டாள். இரைச்சலுக்கு மத்தியிலும் தூரத்தே கேட்ட வானொலியின் குரல் குண்டு வெடிப்பைச் சொல்லி தேய்ந்து போயிற்று. சின்ன சின்ன கால்களும் கைகளும் சிதறிக் கிடந்ததுபற்றி.....

— குமார்மூர்த்தி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிங்களத் தமிழ் மக்களின் ஐக்கியமில்லையேல் விடுதலை இல்லை

நேடல் 1 0ல் வெளிவந்த தேசிய இனப் பிரச்சினை பற்றிய கட்டுரையின் தொடர்ச்சி

இலங்கையின் பேரினவாத, பாசிச ஐக்கிய தேசியக் கட்சி அரசானது தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல தான் பிரதிநிதித்துவப்படுத்துவதாக் கூறிக் கொள்ளும் சிங்கள மக்களினதும் ஏனைய சிறுபான்மை இனங்களினதும் எதிரியாகவும் கொடுமை மிகுந்த ஒடுக்குமுறையாளனாகவும் இருந்து வருகின்றது. இதே பேரினவாத, பாசிச அரசுதான் 1977ல் இருந்து ஏகாதிபத்தியங்களுக்கு கதவைத் திறந்து விட்டதன் மூலம் சிங்கள உழைக்கும் மக்களை ஈவிரக்கமற்ற முறையில்(மோசமான சுரண்டல், கூடிய நேரவேலை, தொழிற்சங்க உரிமைகளற்ற நிலை) சுரண்டிச் செல்ல வகை செய்துள்ளதோடு, சுதந்திர வர்த்தக வலயம், விவசாய அபிவிருத்தி என்ற பெயரில் இந்நாட்டை ஏகாதிபத்தியங்களுக்குத் தாரை வார்த்துக் கொடுத்துள்ளது. 1987 — 1989க்கு இடைப்பட்ட காலப்பகுதியில் "பயங்கரவாதிகள்" என்ற போர்வையில் கிட்டத்தட்ட 60,000 சிங்கள இளைஞர்களையும் யுவதிகளையும் அப்பாவிப் பொதுமக்களையும் கொன்று குவித்து இரத்த ஆற்றில் மூழ்கடித்தது. தொழிலாளர்களின், உழைக்கும் மக்களின் உரிமைப் போராட்டங்களை ஒடுக்குமுறைச் சட்டங்களைக் கொண்டும், பொலிஸ், இராணுவத்தைக் கொண்டும், குண்டர் படைகளை ஏவியும் முறியடித்து வந்துள்ளது. ஏகாதிபத்தியங்களுக்கு நாட்டை அடகு வைத்ததன் மூலம் சிங்கள மக்களை வறுமையிலும், பட்டினியிலும், வேலையின்மையிலும் தொடர்ந்து இருத்தி வருகிறது. "நாட்டைப் பாதுகாத்தல்" என்ற பெயரில் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை நசுக்க, வறிய, வேலையற்ற சிங்கள இளைஞர்களை இராணுவத்தில் சேர்த்து அவர்களை போர்க்களத்துக்கு தள்ளுவதன் மூலம் அவர்களை தினம் தினம் பலி கொண்டு வருகிறது. இத்தகைய மக்கள் விரோத, ஜனநாயக விரோத, பாசிச ஆட்சியாளர்கள் சிங்கள மக்களின் பாதுகாவலர்கள் அல்லர். பரந்துபட்ட சிங்கள மக்களின் எதிரியாவர்.

ஒட்டுமொத்தத்தில் சிங்கள உழைக்கும் மக்களினதும், தமிழ் மக்களினதும், முஸ்லீம், மலையக மக்களினதும் வெறுக்கத்தக்க பொது எதிரியாக இந்த சிங்கள பேரினவாத, பாசிச அரசு இருந்து வருகின்றது என்பதுதான் உண்மை. அது தமிழ் மக்களையும் ஏனைய சிறுபான்மை இனங்களைச் சேர்ந்த மக்களையும் அவர்களின் தேசிய, இன அடையாளம் இல்லாமல் செய்வதற்காகவும், சிங்கள மக்கள் மத்தியிலிருந்து எழக்கூடிய எந்த ஒரு ஜனநாயக, புரட்சிகர போராட்டத்தையும் அடக்கி ஒடுக்குவதற்காகவும், இதன் மூலம் தனது பேரினவாத, பாசிச ஆட்சியை நிலைநிறுத்திக் கொள்வதற்காகவும் ஏகாதிபத்தியங்களுடன் கூட்டுச் சேர்ந்துள்ளது.

இத்தகைய "பலமிக்க", ஏகாதிபத்தியங்களினால் அனைத்து வழிகளிலும் ஊட்டி வளர்க்கப்படுகின்ற ஒரு பேரினவாத, பாசிச அரசையே தமிழ் மக்கள் எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கின்றார்கள். இதே அரசையே சிங்கள உழைக்கும் மக்களும், ஜனநாயக புரட்சிகர, தேசபக்த சக்திகளும், ஏனைய சிறுபான்மை இனத்தவரும் எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கின்றார்கள், தொடர்ந்து போராட வேண்டியுள்ளது. உண்மையிலே தமிழ் மக்களுக்கும், சிங்கள மக்களுக்கும், ஏனைய சிறுபான்மை இனத்தவருக்கும் பொது எதிரி பேரினவாத, பாசிச அரசுதான். இங்கு தமிழ் மக்களும், ஏனைய சிறுபான்மை இனத்தவரும் பேரினவாத அரசின் ஒடுக்குமுறைக்கும் அது சார்ந்த ஏகாதிபத்தியத்திற்கும் எதிராக போராட வேண்டியுள்ள அதேநேரம், சிங்கள மக்கள் ஏகாதிபத்தியச் சுரண்டலுக்கும் அரசின் பாசிச ஒடுக்குமுறைக்கு எதிராகவும் போராட வேண்டியவர்களாகவுள்ளனர். எனவே அனைத்து மக்களினதும் பொது எதிரி பேரினவாத, பாசிச அரசும் அது சார்ந்த ஏகாதிபத்தியமுமாகும்.

ஆனால் இந்த பொதுஎதிரிக்கு எதிரான போராட்டம் இரண்டு வழிகளிலிருந்து, இரண்டு முனைகளிலிருந்து முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளது. ஏனெனில் பேரினவாத, பாசிச அரசின் இருப்புக்கும் அதன் நிலைத்தலுக்குமான முக்கிய காரணமாக தமிழ் — சிங்கள மக்களை பிரித்து வைப்பதில், "பிளவுபடுத்தி ஆளுதலில்" தான் காணக் கிடக்கிறது. தமிழ் — சிங்கள மக்களின் ஐக்கியம், ஐக்கியப்பட்ட செயற்பாடு தனது இருப்புக்கும் ஏகாதிபத்தியங்களின் நலன்களுக்கும் பாதகமானது என்பதை பேரினவாத அரசும் ஏகாதிபத்தியங்களும் நன்கு தெரிந்தே வைத்துள்ளன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதுதான் — பிளவுபடுத்தி வைத்திருப்பதுதான் — அரசின் பலமாகும். "இனவாத அரசும், அதன் இருப்புக்கான அடிப்படைகளும்"[4] நிலைப்பதற்கான காரணமாகும். இதனையே "நாங்கள் (சிங்கள மக்கள்) அரசுடன் மோதும்போது நீங்கள் (தமிழ் மக்கள்) சமாதானமாக இருக்கிறீர்கள். நாங்கள் (சிங்கள மக்கள்) சமாதானமாக இருக்கும் போது நீங்கள் (தமிழ் மக்கள்) மோதுகிறீர்கள். இது அரசின் பலம். எமது பலவீனம்."[5] என்று சிங்கள முற்போக்கு கலைஞர் வின்னி ஹெட்டிகொட பொருத்தமாக கூறினார்.

இப்பொழுது கேள்வி என்னவென்றால் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம், அதன் வெற்றி தமிழ் மக்களால் மட்டும் சாதிக்கப்படக்கூடியதா அல்லது தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமைக்கான தமது போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் அதேவேளை சிங்கள ஜனநாயக, புரட்சிகர சக்திகளின் ஆதரவோடு, அவர்களுடன் ஐக்கியத்தை ஏற்படுத்துவதன் மூலம், பேரினவாத, பாசிச அரசுக்கும் ஏகாதிபத்தியத்திற்கும் எதிராக தமிழ் — சிங்கள மக்களின் இரட்டைச் செயற்பாட்டின் மூலம் சாதிக்கப்படக் கூடியதா என்பதே.

சிலர் பின்வருமாறு வாதம் செய்கின்றனர்: "தமிழ் தேசிய இனம் விடுதலை பெறுவதே சிங்கள இனத்தினதும் விடுதலையைச் சாதிக்கும்."[6] என்கின்றனர். இவர்களின் கருத்துப்படி "முழு இலங்கையினதும் விடுதலைக்கு தமிழ் தேசிய இனத்தின் விடுதலை ஒரு முன்நிபந்தனையாக உள்ளது."[7] இது அடிப்படையிலேயே தவறான வாதம் மட்டுமல்ல ஒரு கற்பனைப் புனைவுமாகும். தமிழ்த் தேசிய இனம் சிங்கள இனத்தினது விடுதலைக்கு உதவுவது ஒருபுறமிருக்கட்டும், தமிழ் தேசிய இனம் விடுதலை பெறுவதே சிங்கள மக்களின் ஆதரவின்றி சாத்தியமில்லை; அவர்களுடனான ஒன்றுபட்ட செயற்பாடின்றி சாத்தியமில்லை. இதுதான் உண்மை.

தமிழ் மக்களுக்கு இன ஒடுக்குமுறையிலிருந்து எந்தளவுக்கு விடுதலை தேவையோ அந்தளவிற்கு சிங்கள மக்களிற்கும் விடுதலை தேவைப்படுகிறது. பேரினவாத அரசானது இரண்டு இனங்களுக்குமிடையில் எந்தளவுக்கு பகைமையை வளர்த்து, இனங்களுக்கிடையில் நம்பிக்கையின்மையைத் தோற்றுவித்து, இனங்களைப் பிரித்து வைக்க முடியுமோ அந்தளவுக்கு பிரித்து வைக்க தன்னாலான அனைத்தையும் செய்கிறது. ஏனென்றால் உண்மையிலேயே தமிழ் — சிங்கள மக்களின் ஐக்கியப்பட்ட செயற்பாடு இருக்குமானால் "இனவாத அரசும், அதன் இருப்புக்கான அடிப்படைகளும்" உடைத்தெறியப்படுவது மட்டுமல்ல ஏகாதிபத்தியங்களின் ஆதிக்கத்திற்கும் சுரண்டலுக்கும் ஒரு முற்றுப்புள்ளி வைத்துவிடும். தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டம் ஒரு சார்பற்ற போராட்டமல்ல.

# நம்மில் ஒருவன்

நிறுத்து
நிறுத்து
அந்தச் சண்டையை நிறுத்து

எல்லார மன்னா
அந்த யானையை விட்டு கீழே இறங்கு
மன்னன் துட்டகமுனுவே எல்லாரனுக்கு
ஒரு நாற்காலியைக் குடு

*o*

இதோ இங்கே அவள்
ரப்பர் பால் வெட்டும் கூட்டத்துடன்
ரப்பர் மரங்களைச் சுற்றிச் சுற்றிச்
செல்கிறாள்
அம்மா பால் கறக்கப் போயிருக்கிறாள்
சரசுவதி
அவளது முறுவலிக்கும் உதடுகள்
எல்லாரனின் புன்னகைக்கு ஒளியூட்டும்

தேயிலைப் புதர்களுக்கு கீழே
கைகளில் வலியெடுக்க
காற்று விசுறியடிக்கும் மழையில்
நனைந்தவாறு
வியர்வை முத்துக்களின் கீழ்
அவளது வெண்கலக் கண்கள் மிளிர
மௌனமாய்க் காத்துக்
கொண்டிருக்கிறாள்
அவளது நாசித்துவாரத்தில்
மின்னும் மூக்குத்தி
நித்யகலா
எல்லாரனின் சகோதரி
சரசுவதி, நித்யகலா

நாம் மெனிக் கங்கை நதியினிலே
ஒன்றாய்க் குளித்தோம்
சிறிபாதத்திலோ நாம்
ஒன்றாய் வழிபட்டோம்
நாம் பள்ளிக்கூடத்திலோ
ஒன்றாக இருந்தோம்
தோசைக் கடையில் நாம்
ஒன்றாக வடை சாப்பிட்டோம்
கதிர்காமத்தில்
எங்கள் அலுவலகத்தைச் சேர்ந்த
சோமதேவிக்கு
சிவலிங்கம் தன் முகவரியைக்
கொடுத்தான் .



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**எல்லாரன் – துட்டகமுனு சண்டை!**
**துட்டகமுனுவிற்கு வெற்றிக்கு மேல்**
**வெற்றி!**

ஒரு யானையின் முதுகின் மேல்
எல்லாரனின் பிணம்
அந்தக் கைதட்டலை நிறுத்து
அந்தக் கைதட்டலை நிறுத்து
அந்தக் கைதட்டலை நிறுத்து
கைதட்டுதல் நாசமாய்ப் போக!
அந்தப் பெயருக்கு
ஒரே ஒரு கண்ணீர்த் துளியை
வழங்கப்போவது யார்?

அன்று இறந்தவன்
நம்மில் ஒருவன்!
நமது ரத்த பந்தங்களில்
ஒருவன்!

பராக்கிரம கொடித்துவக்கு
Parakrama Kodithuwakku

குறிப்பு: இக்கவிதை "மூன்றாவது உலகக் கவிதைகள்" என்ற கவிதைத்தொகுப்பிலிருந்து மறுபிரசுரமாகிறது.
இக்கவிதையில் எல்லார மன்னன் என்று குறிப்பிடப்படுவது எல்லாள மன்னனையே.

அது சிங்கள உழைக்கும் மக்களின் இலங்கை அரசுக்கு எதிரான ஜனநாயகத்திற்கான போராட்டத்துடன் நெருங்கிய தொடர்பை, சார்புத் தன்மையைக் கொண்டுள்ளது. இந்த இரண்டு போராட்டங்களும் ஒன்றுடன் ஒன்று இணைந்தும் சார்ந்தும் அதேநேரம் வேறுபட்டும் உள்ளது. பொது எதிரிக்கு எதிரான தமிழ் — சிங்கள மக்களின் இரட்டைச் செயற்பாட்டின் மூலம்தான், இந்தச் செயற்பாடு இருக்குமானால்தான் தமிழ் மக்களின் விடுதலையும் சரி அல்லது "சுதந்திர" ஈழமும் சரி சாத்தியமாகலாம். இது இல்லையென்றால் தமிழ் மக்களின் விடுதலையும் சரி, "சுதந்திர" ஈழமும் சரி கானல் நீராகவே இருக்கும்.

### தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை என்றால் என்ன?

"தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை என்பது பிரத்தியேகமாக அரசியல் ரீதியல் சுயேச்சை பெறும் உரிமையை, ஒடுக்கும் தேசிய இனத்திலிருந்து அரசியல் ரீதியில் சுதந்திரமாக பிரிந்து போகும் உரிமையைக் குறிக்கிறது."[9] அதாவது "சுயநிர்ணய உரிமை என்பதை தனியரசாக நிலவும் உரிமை என்ற பொருளில் அன்றி வேறு விதமாக வியாக்கியானம் செய்வது .... தவறானது."[9]

ஆனால் இலங்கையில் உள்ள தமிழ் மார்க்சியவாதிகளில் பெரும்பாலோனார் சுயநிர்ணய உரிமை பற்றி தவறான புரிதலைக் கொண்டவர்களாகக் காணப்படுகிறார்கள். இவர்களின் கருத்துப்படி சுயநிர்ணய உரிமை என்றால், அதாவது பிரிந்து போகும் உரிமை என்றால், அது பிரிவினையையே குறிப்பதாகும் என்று வாதாடுகின்றனர். தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை சமன் பிரிவினை என்கின்றனர். இது மார்க்சியத்தின் அரிச்சுவட்டையே மறுப்பதாகும். சுயநிர்ணய உரிமையும் பிரிவினையும் ஒன்றல்ல. சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதானது "பிரிவினையை எதிர்த்து பிரச்சாரம், கிளர்ச்சி செய்வதையோ அல்லது பூர்சுவா தேசியவாதத்தை அம்பலப்படுத்துவதையோ"[10] அல்லது குறிப்பிட்ட சூழ்நிலையில் பிற்போக்கு தேசிய இயக்கங்களுக்கெதிராகப் போராடுவதையோ சற்றும் விலக்கிவிடாது. காரணம், இன்றைய காலகட்டத்தில் புரட்சிகர தேசிய இன இயக்கங்களையும், ஏகாதிபத்தியங்களாலும் "வல்லரசு"களாலும் பிற்போக்கு நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படும் தேசிய இன இயக்கங்களையும் நாம் காண்கிறோம். அதேநேரம் தேசிய இனமுரண்பாடுகளைப் பயன்படுத்தி பிற்போக்கு முதலாளித்துவ அரசியல்வாதிகள் அரசியல் ஆதாயம் தேட முற்படும் தேசிய இன இயக்கங்களையும் நாம் காண்கிறோம். இந்நிலையில் புரட்சிகரமான தேசிய விடுதலை இயக்கங்களை ஆதரிப்பதும், பிற்போக்கு தேசிய இன இயக்கங்களை நிராகரிப்பதும், அவற்றிற்கு எதிராக போராடுவதும் நமது கடமையாகும். இப்படிக் கூறுவது தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை மறுப்பதாகாது. மாறாக, அதை அங்கீகரிப்பதாகவும் குறிப்பிட்ட சூழ்நிலைகளில் பிற்போக்குத் தேசிய இன இயக்கங்களை எதிர்த்துப் போராடுவதையும் உள்ளடக்கியதாகும்.

"பிரிவினையைக் கைவிடும்படி நிபந்தனை விதிப்பதும், சுயநிர்ணய உரிமை உண்டென ஒப்புக் கொள்ளப்படுவதும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட விடயங்கள்"[11] என்று சிலர் கூறுகின்றனர். சுயநிர்ண உரிமை என்பது இனங்களுக்கு இடையில் சமத்துவம் எனும் அடிப்படையில் இஷ்டபூர்வமாக இணைந்து வாழ்வதையும், ஒரு அரசின் கீழ் வாழும் தேசிய இனங்கள் அவை ஒடுக்கப்படுவதினால் அரசியல் வாழ்வு என்பது சகிக்கமுடியாதது என்கின்ற நிலையில் சுதந்திரமாக பிரிந்து செல்வதற்கான உரிமையே ஆகும். இந்த உரிமை ஜனநாயக அடிப்படையில் அமைந்ததாகும். ஒரு தேசிய இனம் எந்தவொரு அரசுடனும் இஷ்டபூர்வமாக ஒன்று சேர்வதையோ அல்லது குறிப்பிட்ட ஒரு அரசிலிருந்து சுதந்திரமாக பிரிந்து செல்வதையோ அடிப்படையாகக் கொண்டதாகும். இந்த உரிமை திட்டவட்டமாக கோரிநிற்பது ஒன்றேயொன்றைத்தான்: அதாவது இனங்களுக்கிடையில் பரிபூரண சமத்துவத்தைத்தான். இது எந்தவொரு தேசிய இனத்திற்குமான தனியுரிமைகளை எதிர்க்கிறது; தனிச் சலுகைகளை எதிர்க்கிறது; எந்தவொரு தேசிய இனத்தின் மீதான நிர்ப்பந்தங்களையும் பலாத்காரத்தையும் எதிர்க்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதானது "ஒரு தேசிய இனத்தின் எல்லாக் கோரிக்கைகளையும்" அங்கீகரிப்பதாகும், ஆதரிப்பதாகும் என்று இவர்கள் வாதிடுகின்றனர். தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பது என்றால் அவர்கள் பிரிந்து போவதை அங்கீகரிக்க வேண்டும் என்கின்றனர். இது சிறுபிள்ளைத்தனமான வாதமாகும். நாம் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கிறோம், அவர்களுக்கு சுயநிர்ணய உரிமைக்காக போராட உரிமையுண்டு என்று கூறுகிறோம். "ஒரு தேசிய இனத்தின் மீது செலுத்தப்படும் நிர்ப்பந்தத்தை எதிர்த்துப் போராடும் அதேவேளையில், தன்விதியை நிர்ணயிக்கும் உரிமை அந்தந்த் தேசிய இனத்திற்குத்தான் உண்டு."[13] என்றும் கூறுகிறோம். இப்படி கூறுவதினால் தமிழ் மக்களின் அனைத்துக் கோரிக்கைகளையும் ஆதரிக்க வேண்டுமென்று அர்த்தமாகிவிடாது. தமிழ் மக்களின் (முக்கியமாக உழைக்கும் மக்களின்) நலன்களுக்கு கேடுபயக்கக்கூடிய, அவர்களின் நலன்களுக்குப் பாதகமான, தவறான போக்குகளை, கோரிக்கைகளை எதிர்த்து பிரச்சாரம், கிளர்ச்சி செய்வதையும், மக்களைச் சரியான பாதையில் வழிநடத்திச் செல்வதையும் இது எந்தவகையிலும் விலக்கிவிடுகிறது இல்லை.

" பிரிவினையை கைவிடும்படி நிபந்தனை"[14]யை ஒரு தேசிய இனத்திற்கும் நாம் போடவில்லை, போடவும் முடியாது. அப்படிச் செய்வது "தன்விதியை நிர்ணயிக்கும் உரிமை அந்தந்த தேசிய இனத்திற்குத்தான் உண்டு" என்பதை மறுப்பதற்கு சமமாகும்.

தமிழ் மக்களுக்கு தனியரசாக அமைவதற்கான உரிமையை நாம் முற்றுமுழுதாக ஆதரிக்கிறோம். அதேநேரம் எமது பிரதான எதிரிகளான அந்நிய ஏகாதிபத்திய, மேலாதிக்க சக்திகளுக்கு எதிராகவும் அவர்களால் ஊட்டி வளர்க்கப்படும் பேரினவாத, பாசிச ஐக்கிய தேசியக் கட்சி அரசுக்கு எதிராகவும் சிங்கள உழைக்கும் மக்களுடனும், ஜனநாயக சக்திகளுடனும் ஏனைய சிறுபான்மை இனங்களுடனும் ஐக்கியப்பட்டு போராடுமாறும் கோருகின்றோம். ஏனெனில், தமிழ் மக்களினதும் ஏனைய சிறுபான்மை இனங்களினதும் உண்மையான சுதந்திரம், விடுதலை என்பன பேரினவாத அரசின் வீழ்ச்சியிலும் ஏகாதிபத்திய சுரண்டலுக்கு முற்றுப்புள்ளி வைப்பதிலும்தான் தங்கியுள்ளது என்பதை நாம் அறிவோம். தமிழ் மக்கள் தனியரசாக அமைவதும் சரி, ஒரு அரசில் முழுமையான சம அந்தஸ்துடன் (பேரினவாத அரசின் கீழ் அல்ல, புரட்சிகர அரசில்) ஒன்றாக வாழ்வதும் சரி பேரினவாத, பாசிச அரசினதும், ஏகாதிபத்தியத்தினதும் வீழ்ச்சியில்தான் சாத்தியமாகும். தமிழ் மக்கள் தனியரசாக அமைவர்களா அல்லது ஒரு அரசில் (புரட்சிகர ஜனநாயக அரசில்) முழுமையான சம அந்தஸ்துடன் வாழ்வர்களா என்பது நாம் முன்னறிந்து கூறமுடியாத பல்வேறு காரணிகளால் நிர்ணயிக்கப்பட வேண்டியதொன்றாகும். எனவே, நாம் வெறும் "ஊகங்களை" விட்டுவிட்டு தமிழ் மக்களுக்கு தனியரசாக அமைவதற்கான முழு உரிமையும் உண்டு என்று கூறும் அதேவேளை பேரினவாத அரசிற்கெதிராகவும், தமிழ் முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ பிற்போக்கு தேசியவாதிகளுக்கு எதிராகவும், தேசிய வெறியர்களுக்கு எதிராகவும் போராடுமாறும், ஜனநாயகத்திற்காக சிங்கள ஜனநாயகவாதிஜும் உழைக்கும் மக்களும் நடத்தும் போராட்டத்துடன் ஐக்கியத்தை ஏற்படுத்தி போராடுமாறும் கூறுகிறோம். எதற்காக? நாம் தமிழ் உழைக்கும் மக்கள் திரளினரை ஜனநாயக, சோசலிச உணர்வில், சர்வதேசிய உணர்வில் பயிற்றுவிக்க வேண்டும். அவர்களை வளர்த்தெடுக்க வேண்டுமே தவிர இனவாத, குறுகிய தேசியவெறிவாத உணர்விலல்ல. காரணம், முன்னையது வெவ்வேறு இன உழைக்கும் மக்களுக்கிடையில் சகோதரத்துவம், புரிந்துணர்வு, ஒருமைப்பாடு, ஐக்கியத்தை வளர்த்து ஜனநாயகத்திற்கான போராட்டத்தின் உந்து சக்தியாக திகழ்கிறதெனில், பின்னையது விரோதம், அவநம்பிக்கை, வெறுப்பு, பிளவு ஆகியவற்றை தோற்றுவித்து ஜனநாயக இயக்கத்தைப் பலவீனப்படுத்தி மக்களின் போராட்டத்தை தோல்வியை நோக்கி இட்டுச் செல்கிறது.

"பிரிவினையைக் கைவிட்டு விட்டு சுயநிர்ண உரிமையை அங்கீகரிக்க கோரி போராடும்படி கேட்பது கேலிக்கிடமானது"[15] அல்ல. "பிரிவினையை"யும் தேசிய இனங்களின் "சுயநிர்ணய உரிமையை"யும் ஒன்றுடன் ஒன்று போட்டுக் குழப்பிக் கொள்ளுவது, இரண்டையும் வேறுபடுத்திப் பார்க்கத் திறனற்று இருப்பதுதான் கேலிக்கிடமானது, வெட்கக்கேடானது.

இந்தக் குழப்பம் மார்க்சியவாதிகள் எனத் தம்மைக் கூறிக் கொள்வோரின் தேசியவாத தப்பெண்ணங்களால விளைந்ததொன்றாகும். இந்தக் கண்ணோட்டத்திற்கும மார்க்சியத்திற்கும் எதுவித சம்பந்தமுமில்லை.

4 "தூண்டில்" — 40 ;மு.அ.பாஸ்கரலிங்கம்
5 "யுக்திய" பத்திரிகையில் வெளிவந்த வின்னி ஹெட்டிகொடவின் பேட்டியிலிருந்து
6 "தீப்பொறி" குழுவினரின் 1986 அரசியல் திட்டத்திலிருந்து
7 "தீப்பொறி" குழுவினரின் 1986 அரசியல் திட்டம்; தூண்டில் 40; மு.பாஸ்கரலிங்கம் என்பனவற்றிலிருந்து
8 "தேசியப் பிரச்சினைகளும் பாட்டாளி வர்க்க தேசியவாதமும்: சில பிரச்சினைகள்" என்ற நூலில் லெனின்
9 இலக்கம் "8"இல் கூறப்பட்ட நூலில் லெனின்
10 இலக்கம "8"ல் கூறப்பட்ட நூலில் லெனின்
11"தீப்பொறி" குழுவின் 1986 அரசியல் திட்டத்திலிருநது
12"மார்க்சியமும்தேசிய இனப் பிரச்சினையும்"என்ற நூலில் ஸ்டாலின்
13 "மார்க்சியமும் தேசிய இனப்பிரச்சினையும்" என்ற நூலில் ஸ்டாலின்
14 "தீப்பொறி" குழுவினரின் 1986 அரசியல் திட்டத்திலிருந்து
15 "தீப்பொறி" குழுவினரின் 1986 அரசியல திட்டத்திலிருந்து


இந்திரன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஏன் இந்த வட்டங்கள்? என்று உடையும் . .



அவள் சமூகத்தில் எவ்வளவு முக்கியமான பிரதிநிதி நாம் வாழும் சமூகம் பெண்ணுக்குரிய உரிமைகளையும் அவளைப் பூமியில் சுதந்திர மனுஷி என்பதையும் அறவே மறுத்து அவளைக் குழிதோண்டிப் புதைத்து வருகிறது. மனிதன் ஒரு அழகான பெறுமதியான பொருளைக் கண்டால் அதன் பயன்பாட்டுக்கேற்ப அதனைப் பாதுகாத்து வைத்திருக்க முயல்கிறான். இதற்காக அவன் வரலாற்றில் எத்தனையோ யுத்தங்களும் புரிந்திருக்கிறான். அப்படியிருக்க தன் சமூகத்தில் வாழும் பெண்ணின் அருமை தெரிந்திருந்தும் அவளையேன் நிலத்தில் புதைத்து அவள் மேலால் நடந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களைப் பொறுத்தவரை அவள் என்றுமே வாய்திறந்து பேசமாட்டாள் ஏனெனில் அவளுக்கு அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு போன்ற "நல்ல" குணங்களுடன்தான் அவளைத் திட்டமிட்டு வளர்த்திருக்கிறோம் என்ற நம்பிக்கையா?

பெண்களை இந்த சமூகம் திட்டமிட்டு வளர்த்த முறையால் அவள் தான் யார்? தன்னிலை என்ன? தனக்கு என்ன உரிமைகள் இருக்கின்றன? என்ற விதத்தில் சிந்திக்கத் தெரியாதவளாக, சிந்திக்க முடியாதவளாக இருக்கிறாள். எங்கள் இனத்தவரிடையே இருக்கும் பிரச்சனைகளில் ஒன்று மாமியார் கொடுமை பொதுவாக இதற்குச் சொல்லப்படும் காரணமும் சாட்டப்படும் குற்றமும் பெண்கள் மேல்தான். ஆனால் திட்டமிட்டு பெண்கள் பக்கம் கையைக்காட்டி குற்றம் சுமத்தும் ஒவ்வொருஆணிற்கும் தெரியும் தங்கள் சமூகம் தான் இதன் காரணகர்த்தாக்கள் என்றும் பெண் அதில் கருவி என்றும். பெண் என்றாலே ஒரு சுமக்க முடியாத பாரம் என்ற கருத்தை சமூகம் போதித்துப் போதித்து பெண்ணும் அப்படியே விவாதிக்காமல் சிந்திக்காமல் வலிந்து ஏற்றுக்கொள்ளும் நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறாள். ஓர் தாய் தன் வயிற்றில் இருப்பது பெண்குழந்தை என்பது அறிந்தாலோ அக்குழந்தை ஓர் ஆண்குழந்தையிலும் பார்க்க பாரம் கூடியதுபோல் உணருகிறாள். அவளுக்குப்பாரம் வயிற்றில் அல்ல மனத்தில்தான். ஏனெனில் ஓர் பெண்குழந்தையின் ஒவ்வொரு வளர்ச்சிக் கட்டங்களையும் தாண்டி அவளை ஓர் நல்ல நிலையில் சேர்ப்பது என்பது பயங்களினால் பின்னப்பட்ட சங்கிலித் தொடராக போய்க் கொண்டே இருக்கிறது அவளுக்கு ஏன் இந்தப் பயங்கள்?. உதாரணமாக எமது சமூக சூழலை எடுத்துக் கொண்டால் ஒரு கூலித்தொழிலாளி தனது குழந்தை இன்னொருவனுக்குக் கீழ் கூலியாக வளர்வதை விரும்பமாட்டாள், ஒரு விபச்சாரி தனது குழந்தை எந்த சூழலிலும் விபச்சாரியாக வளர்வதை விரும்பமாட்டாள். அதேபோல் ஒரு பெண்ணும் தனது குழந்தை இச் சமூகத்தில் பிறந்து தான் தாண்டி வந்த அனைத்துக் கொடுமைகளையும் தனது குழந்தையும் அனுபவிக்கப் போகிறதென்ற பயத்தினால்தான்.

பெண்குழந்தை பிறந்தவுடன் அவளுக்கு அணிவிக்கப்படும் ஆடைகள் எல்லாம் மென்மையைக்குறிக்கும் மென் சிவப்பு [PINK] அவள் தன்னைச் சுற்றி இருக்கும் பொருட்களுடன் அறிமுகமாகத் தொடங்கும் நேரம் அவளைச் சுற்றி சட்டி பானை பொம்மை போன்ற சிந்தனையைக் குறுக்கும் பொருட்கள் பரப்பப்படுகின்றன. இவையெல்லாம் தன் விலங்குகள்தான் என்று உணரும் பருவத்திற்கு முன்னரே அவளுக்கு இப்பொருட்களை திட்டமிட்டு அறிமுகப்படுத்துகின்றனர். ஆனால் அதே வயதில் உள்ள ஆண் குழந்தை துவக்கு வாகனம் போன்ற பொருட்களைக் கொடுத்து அவன் வீரமகனாகவும் அடக்கியாளத்தக்கவனாகவும் வளக்கப்படுகிறான். மேலும் அவள் வளரும் போது பெற்றோர் அல்லது சகோதரனின் கட்டுப்பாட்டில் தான் வளர்கிறாள் அவள் உண்ணும் உணவில் இருந்து அணியும் உடைவரை எல்லாமே இன்னொருவரின் தேர்வாகத்தான் இருக்கிறது அவள் என்றுமே தன் விருப்பப்படி முடிவுகள் எடுப்பதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. அவள் வாயால் அவள் பெற்றோர் அல்லது சகோதரர்தான் கதைத்துக் கொண்டு இருப்பார்கள். பெண் என்றுமே தனிய இயங்க முடியாதது போலவும் இன்னொருவர் துணையில்லாவிடில் அவளால் வாழமுடியாது போலவும் கூறப்படுகிறது. அவள் சிந்தித்துச் செயற்பட நினைக்கும் ஒவ்வொரு கணத்திலும் அவள் முன்னிலையில் அவளால் முடியாதது போன்று பல நிகழ்ச்சிகள் நிகழ்த்திக்காட்டப்படும். உதாரணத்திற்கு அவள் கொல்லைக்குப் போவதென்றால் கூட ஐந்து வயசுச் சிறுவனையாவது துணைக்கு அனுப்புவார்கள் சிறுவனுக்குப் பாதுகாப்பு அவளா? அவளுக்குப் பாதுகாப்பு சிறுவனா?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவள் பிறந்தது தொடக்கம் ஒவ்வொரு நிமிடமும் அவளுக்குப் போதிக்கப்படுவது அவள் ஒரு சுமக்கமுடியாத சுமையென்றும் அவள் வளர வளர அவள் சுமை கூடிக் கொண்டேபோகும் என்றும் திரும்பத் திரும்ப சமூகத்தாலும் பெற்றோராலும் இதையே சொல்லி வளர்க்கப்படுகிறாள். இப்படி மூளைச்சலவை செய்யப்பட்ட பெண் தான் எல்லோருக்கும் வேண்டப்படாத பொருளென்றும் தன்னையாராவது எப்போதும் சுமக்கவேண்டும் என்றும் எண்ணப்பழகிக் கொண்டாள். அப்படிச் சுமப்பதாக பாவனை பண்ணுபவனை மிகவும் நன்றியுடனும் தன்னுடைய தெய்வமாகவும் மதிக்கப்பழகிக் கொண்டு விட்டாள். இப்படிப்பட்ட நிகழ்வுகளால் சமூகத்தில் ஆண் தன்னை இன்னொருவர் தொழும் நிலையை அடைந்து விட்டான்.

அவள் குறிப்பிட்ட வயதெல்லையை அடைந்தவுடன் பெற்றோரிடையே ஒரு பரபரப்பும் தங்களின் சமூகம் சார்ந்த சராசரி அந்தஸ்தினை நிலைநாட்டிக்கொள்ளும் தேவையும் ஏற்படுகிறது. ஓர் பெண்ணுக்கு கலியாணம் என்ற சடங்கு நடைவெறாவிடின் ஒரு பெண் முழுமையடையவில்லையென்று மற்றவர்களால் கீழ்த்தரமாகப் பார்க்கப்படுவதாலும் அவன் அந்தச் சடங்கிற்கு உடன்பட விருப்பமில்லாவிடினும் அவனை வலுக்கட்டாயமாக அவள் விருப்பமின்றியே அவளை அதற்குள் தள்ளி விடுகின்றனர். இதன் மூலம் ஒரு பக்கத்தில் தங்களது சுமைக்குறைப்பு நடவடிக்கையையும் மறுபுறத்தில் அவர்களது சமூகத்தில் இருக்கும் சராசரி அந்தஸ்தினையும் மிக இலகுவாகத் தட்டிச் செல்கின்றனர் அவளது பெற்றோர். அதேவேளை ஓர் பெண் புதிய நரகத்திற்குள் வந்து விழுகிறாள். கல்யாணம் என்ற சடங்கிலும் ஆண் என்பவனே பெண்ணுக்கு வாழ்வு கொடுக்கிறான் என்றுதான் அவளுக்கு ஓதப்படுகிறது. எனவே அவள் அவனிடமே எல்லா எதிர்பார்ப்புகளையும் வைத்திருக்கிறாள். கணவனும் அவள் பெரும் பாரம் போலவும் தான் என்னசெய்வது என்று கஸ்டப்பட்டு சுமப்பது போலவும் (சீதனமாகப் பெற்ற பணம் வீடு நகை எல்லாம் இதற்குள் அடக்கம்) பாவனை செய்கிறான். அங்கேயும் அவளுக்குப் பல அவமரியாதைகள் பல அடக்குமுறைகள் போன்றவை நடந்து அவள் பாதிக்கப்பட்ட நிலையில் தன்னுடைய வீடு திரும்பினால் அங்கேயும் அவள் அப்படித்திரும்பி வந்தது பிழை என்றும் கணவனே கண்கண்ட தெய்வம் என்றும் அவளைச்சமாதானப்படுத்தி பக்குவமாக அனுப்பிவைப்பர். இந்நேரத்தில் கூட அவளுக்குரிய துணிவையும் அவள் தனியா வாழமுடியும் என்ற நம்பிக்கையையும் எவரும் அவளுக்கு உணர்த்துவதில்லை.

கணவனின் பல கெடுபிடிகள் மத்தியிலும் அவள் பிள்ளைகளைச் சுமந்து பெற்று இரவுபகலாகக் கண்விழித்து பாதுகாக்கிறாள். கணவனிடம் தனக்குக் கிடைக்காத உரிமைகளும் சுதந்திரமும் தன்பிள்ளைகளிடம் இருந்து கிடைக்கும் என்ற நம்பிக்கையில் தன்னுடைய உழைப்பு முழுவதையும் செலவிடுகிறாள். கணவனிடம் தனக்கென்று கேட்காத உரிமைகளையே பிள்ளைகளுக்கென்று வரும்போது சிறிதளவேனும் போராடிப்பெறுகிறாள் ) தனது பிள்ளைகள் குறிப்பாக ஆண்மகன் குறிப்பிட்ட வயதையடைந்தவுடன் அவனிடமே முழு அளவில் தங்கியிருக்கிறாள். அவளைப்பொறுத்தவரை தனது மகன் என்ற நினைப்பிலே வாழ்கின்றாள் அவனே ா இந்தச்சமூகத்தின் ஆண்மகன் எனபதை அவள் உணரத்தவறுகிறாள்.

தன்னுடைய அலுவலகத்தில் தனது காதலியை வித்தியாசமான உடையில் தான் நினைத்ததை பலர் முன்னிலையில் தைரியமாக கூறுபவளாக(அறிவுஜீவியாக) பார்க்க விரும்பும் ஒருவன் தன் சகோதரியை அதே சுதந்திரத்தில் பார்க்க விரும்புவதில்லை. இதில் முக்கியமாக காதலியைக் குறிப்பிட்ட காரணம் பலர் காதலி என்று அறிமுகப்படுத்தும் சுதந்திரப் பெண்ணை மனைவியாக ஏற்க விரும்புவதில்லை. மனைவி என்று வரும் போது சேலையால் உடலை மூடி வைத்திருக்கும், தன்னால் அடக்கியாள முடியும் என்று கருதுபவளைத்தான் தேர்ந்தெடுப்பர்.

பெண் ஒரு குறிப்பிட்ட தரத்திற்கு மேல் படிப்பது பொதுவாக நிறுத்தப்படுகின்றது. அதற்கு சொல்லப்படும் காரணங்கள். பெண்ணின் படிப்புக் கூட சீதனத்தின் தொகை கூடி விடும், அவளின் படிப்புக்கேற்ற கணவனைத் தேடுவது கஷ்டம். அவளின் அறிவு விருத்தியைக் கூட அவனின் "பெயர்", உருத் தெரியாத கணவன் என்ற சொல்லைக் கொண்டுதான் சமுதாயம் முடிவு செய்கிறது. அவளின் படிப்பு ஏன் தடை செய்யப்பட வேண்டும்? ஏன் அவள் கட்டாயம் கணவன் என்ற சொல்லைச் சார்ந்துதான் இருக்க வேண்டும்? எல்லாம் ஆண்கள் தங்கள் சுயநலத்திற்காக இயற்றிய மரபுகள். சமூகம் திட்டமிட்டு தலைமுறை

**கர்ப்பம் தரிப்பது பெண்கள் உரிமை!**
**கர்ப்பத்தை முடிவு செய்வதும் பெண்கள் உரிமை! — பெரியார்**

தலைமுறையாக இதைச் செய்வதால் இது எல்லாம் பெண்களுக்கு எதிரான அடக்கு முறைகள் என்று தெரியாமலேயே பெண்கள் அதை ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.

தனியே பெண்கள் வெளியே செல்வது முக்கியமாக இரவு வேளைகளில் பெண்களுக்கு பாதுகாப்பற்றது என்று காரணம் காட்டி பெண்களை வீடுகளில் அடைக்கிறார்கள். பெண் சிறிது முன்னேறினால் "உன்மேல் உள்ள அன்பால் அக்கறையால்தானே சொல்கிறோம்" என்ற விளக்கம் கொடுப்பார்கள். ஆனால் இரவு வேலை கிடைத்து சாம வேளைகளில் வீடு திரும்ப வேண்டி வரும் போது, இவர்களது பழைய விளக்கங்கள் எல்லாம் அவளது உடலுழைப்பில் வந்த பணத்தில் அடிபட்டுப் போகும். அப்படியாயின் இவர்கள் இத்தனை காலமும் கொடுத்தது என்று சொல்லப்பட்ட பாதுகாப்பும், அவள் மேலுள்ள அன்பும் என்ன? அவள் வேலைக்குப் போகத் தொடங்கியவுடன் அவர்களிடமிருந்து அடுத்த கட்டப் பாதுகாப்பு என்ற பெயருடன் வரும் அடக்குமுறை வேலை முடிந்ததும் குறிப்பிட்ட நேரத்துக்குள் வீட்டுக்குள் வரவேண்டும். அதற்கும் தயரான புதிய விளக்கங்கள் வைத்திருப்பர். "நீ கொஞ்ச நேரம் கழித்து வந்தாலும் என்னவோ ஏதோ என்று பயமாக இருக்கும்" என்பதுதான். இவையெல்லாம் அன்பா? அன்பு என்ற போர்வையில் மூடியிருக்கும் அடக்குமுறைகள்.

தொடர்ச்சி 19ம் பார்க்க!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வீட்டை எரிப்பவர்களே நெருப்பணைக்கவும் வருகிறார்கள்

* பஞ்சத்தின் கோரப்பிடியில் சோமாலியா மக்கள் ஆயிரக்கனக்கில் நாளொன்றுக்கு இறந்து கொண்டிருக்கின்றனர்.
* புயல், வெள்ளம் போன்றவற்றால் இறப்பவர்களை பாரிய கிடங்குகளில் ஒன்றாகப் புதைப்பது போன்று பட்டினியால் இறந்தவர்கள் புதைக்கப்படுகின்றனர்.
* சோமாலியா நகரங்களில் 15 இலட்சம் பேர் மரணத்தை எதிர்பார்த்த வண்ணம் உள்ளனர்.
* பட்டினியின் விளைவால் 90 வீதமான சோமாலிய மக்கள் உடலில் நோய் எதிர்ப்புத் சக்தியின்றி நோய்வாய்ப்பட்டுள்ளனர்.
* அந்நிய நாடுகளால் வழங்கப்படும் உணவுக்காக எதிர்பார்த்து வரிசையில் காத்துக் கிடப்பதில் பாதி உயிர் போய்விடுகின்றது.
* பட்டினியிலிருந்து உயிர் பிழைக்க அண்டை ஆபிரிக்க நாடுகளுக்கு கும்பலாகச் சென்று குடியமருகின்றனர்.
* எதியோப்பியாவில் நான்கு இலட்சம் மக்களும், கென்யாவில் ஒன்றரை இலட்சம் மக்களும் சென்று குடியமர்ந்துள்ளனர்.
* அராபிய நடான யேமன் நாட்டிற்கு அகதிகளை கப்பலில் சென்ற போது அதை தாங்காமல் கடலில் மூழ்கி இறந்தனர்.
* இதே மாதிரி அகதிகள் புறப்பட்ட கப்பல் ஒன்றை எந்த நாடும் ஏற்க மறுத்ததால் உணவு, நீர் இன்றி கடலிலேயே மாண்டு போயினர்.
* இவை ஒரு புறமிருக்க உள்நாட்டுச் சண்டையால் ஏராளமானோர் இறந்தனர்.
* சோமாலியாவில் பெரும்பாலான விவசாயம், உற்பத்தி, நிர்வாகம் என்பன முடக்கப்பட்டுள்ளன.பல முஸ்லீம் மரபு வழி ஆயுத குழுக்கள் ஒன்றுடன் ஒன்று மோதுகின்றன.ஒரே இனக்குழுக்குள்ளேயே அதிகாரத்திற்காக மோதுகின்றனர்.அமெரிக்கா, ஐநாபடையினருடன் முஸ்லீம் அடிப்படைவாதக் குழுக்கள் மோதுகின்றனர்.பொதுவில் இவற்றின் விளைவால் மக்களுக்கு கிடைக்க வேண்டியவை யாவும் மறுக்கப்படுகின்றன. மத அடிப்படை வாதமும், இன வாதமும், சுரண்டல், வரட்சி எல்லாமாகச் சேர்ந்து மக்களை குதறி எறிகின்றன.

நேற்று எதியோப்பியா, இன்று சோமாலியா, நாளை இன்னும் பல ஆபிரிக்க நாடுகளான ஜிம்பாவே, சூடான், மொசாம்பிக், அங்கோலா,சாட் என்று பட்டினியின் கோரப்பிடிக்கு தயாராக உள்ளன. பல ஆசிய நாடுகளிலும் இந் நிலை தோன்றப் போகின்றது.வழக்கம்போல் ஏகாதிபத்தியங்களும், அவற்றின் பிரச்சாரச் சாதனங்களும் இந்த பட்டினிக்கு காரணங்களாக வறட்ச்சியையும், சனத்தொகைப் பெருக்கத்தையும் காரணம் காட்டுகின்றன. ஆனால் பஞ்சத்திற்கு உண்மையான காரணங்கள் எவை?

வரட்சிக்கும், அதிகரிக்கும் இயற்கையின் சீற்றத்திற்கும் காரணம் இயற்கைச் சுற்றாடலியலின் கட்டுக்கோப்பு பாதிப்படைந்தமையே காரணமாகும். இந்த சுற்றாடலியல் பாதிப்புக்கு பிரதான காரண கர்த்தாகள் மேற்குலக நாடுகளே. அவற்றின் இலாப நோக்கிற்கும், சுரண்டலிற்கும் ஏற்ற வகையில் உள்ள உற்பத்திமுறைகளும், அவற்றின் விளைவுகளுமே காரணமாகும்.

இவை தவிர மேற்கு நாடுகளின் இரசாயனக் கழிவுகளையும், அணு உலைகளின் கழிவுப் பொருட்களையும், கொட்டும் குப்பைத் தொட்டிகளாக ஆபிரிக்க நாடுகள் இருப்பதே காரணமாகும். இயற்கை வளங்கள் அழிக்கப் படுவதற்கும், இந்த நாடுகளில் உள்ள காடுகள் பாலை வனங்களாவதற்கும் இவையே காரணங்களாகும்.

பல இனக் குழுக்களை உள்ளடக்கிய சோமாலியாவை இத்தாலியர்களும், பிரித்தானியர்களும் பல ஆண்டுகாலமாக காலனி ஆதிக்கத்தின் மூலம் நேரடியாகவே கொள்ளையடித்த னர். அக் காலங்களில் அநேக ஆபிரிக்க நாடுகள் பிரித்தானியா, பிரான்ஸ், இத்தாலி, ஒல்லாந்து போன்ற நாடுகளினால் காலனி ஆதிக்கத்திற்கூடாகச் சுரண்டப்பட்டன. தொடர்ந்து இந்த நூற்றாண்டிலும் உலக வங்கி மூலம்மேற்குலக நாடுள் தமது நலன்சா்ந்த விவசாய வேலைத் திட்டங்களை இந்த நாடுகளில் உருவாக்கின. எதியோப்பியா, சூடான் போன்ற நாடுகளில் பணப்பயிர்ச் செய்கையினை ஊக்குவித்ததன் மூலமும், பிழையான விவசாய முறைகளைக் கைக்கொண்டதாலும் இந்த நாடுகளில் வறட்சியை அதிகமாக்கின. இப்போது ஆபிரிக்க நாடுகளில் சுய விவசாய உற்பத்திமுறைகள் அருகிவிட்டன. உலக வங்கி,போன்றவற்றின் திட்டங்கள் ஆபிரிக்க நாடுகளை கடனாளிகளாக்கின. உள்ளூரில் உற்பத்தி செய்யக் கூடியபொருட்களை வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டன. மொத்தத்தில் வறட்சி, பஞ்சம் என்பன இயற்கையாக உருவானவை அல்ல. வலியத் தோற்றுவிக்கப் பட்டவையே.

அதேபோன்று இனக்குழுக்களிடையே ஏற்பட்ட சண்டையும் இயல்பாகத் தோன்றியது அல்ல. ஏகாதிபத்தியங்களின் நலன்க ளுக்காக உருவாக்கப்பட்டவைதான். அமெரிக்க, ரஷ்ய நலன்களுக்காக மாறிமாறி ஆபிரிக்க நாடுகளின் அரசுகளும், இனக்குழுக்களின் தலைமைகளும் கைப்பாவைகளாக்கப்பட்டன.

1960ல் சோமாலியா ஐரோப்பியக் காலனி ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்றது. தொடர்ந்தும் இன ஒதுக்கல் கொள்கை கொண்ட ஆட்சிதான் நிறுவப்பட்டது. இதனால் இனங்களிடையே போராட்டங்கள் வளர்ந்தது. இவற்றின் விளைவாக 1969ல் சோமாலியா ஜனாதிபதி கொல்லப்பட்டார். அதனைத் தொடர்ந்து சியாட் பேரே என்னும் இராணுவத் தளபதி ஆட்சிக்கு வந்தான். சிறுபான்மை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இனக்குழு ஒன்றைச் சேர்ந்த இவன் இனவெறி கொண்ட அமெரிக்கச் சார்புநிலை கொண்டவன். பெரும்பான்மை இனங்களான "காவியே", "இசாக்" இனங்கள் சியாட் பேரேவால் ஒடுக்குமுறைக்குள்ளான. "காவியே" இனத்வரின் பகுதியான தென்பகுதியில் தலைநகரம் உள்ளதாலும் சில "காவியே" இனத் தலைவர்களுடன் சில சமரசங்கள் செய்ததாலும் "இசாக்" குழுவினரே அதிகமாக ஒடுக்கப்பட்டனர். 1981ல் உருவான சோமாலிய தேசிய இயக்கம் (S.N.M.) எதியோப்பியாவின் ஆதரவுடன் நிலை கொண்டது. (S.N.M.) பிற இனக்குழுக்களையும் இணைத்து கொரில்லாப் போராட்டத்தை தொடர்ந்தது.

மேலும் சோமாலியாவின் பஞ்சம், உள்நாட்டுச் சண்டை போன்றவற்றால் இடம் பெயர்ந்த சோமாலியர் அண்டை நாடுகளான எதியோப்பியா, கென்யா போன்றவற்றில் குடியேறினர். சோமாலியர்கள் குடியேறிய எதியோப்பியாவில் உள்ள சோமாலியாவுக்கு அண்டைப் பிரதேசங்களை சோமாலியாவுடன் சேர்க்கவென்று எதியோப்பியாவுடன் போர் தொடுத்தான் பேரே. உண்மையில் இப்போருக்கு எதியோப்பியாவின் பின்னணியில் ரஷ்யாவும் சோமாலியாவின் பின்னணியிலும் அமெரிக்காவும் இருந்ததே காரணமாகும். எதியோப்பிய அரசாங்கம் சோமாலிய தேசிய விடுதலை அமைப்புகளுக்கு ஆதரவு அளித்தமை உலக வல்லரசுகளின் தூண்டுதலின் பேரிலே. பின்னர் அமெரிக்க சார்பு எதியோப்பிய அரசுக் காலத்தில் சோமாலியர் வாழ்ந்த எதியோப்பிய பிரதேசங்கள் தனிநாடு கோரிப் போராடவும் சியாட் பேரேவால் தூண்டப்பட்டது. பேரே இதற்கு உதவி கோரி ரஸ்ஸியாவை நாடினான். ரஸ்ஸியாவிற்கும் அக்காலத்தில் வளைகுடாப் பிரதேசத்தில் ராணுவத்தளமொன்று தேவைப்பட்டதால் சியாட்பேரேயிற்கு ஆதரவு வளங்கப்பட்டது. ஆனால் தொடர்ந்து எதியோப்பியாவில் சோசலிசவாதி என்று சொல்லப்பட்ட மொங்கிஸ்த்து ஆட்சிக்கு வந்தபின் ரஸ்ஸியா சோமாலியாவை கைவிட்டு விட்டு எதியோப்பியாவிற்கு ஆதரவளித்தது. உடனே அமெரிக்காவின் ஆதரவை நாடினான் சியாட் பேரே.

ஈரான் மன்னர் ஷாவின் வீழ்ச்சிக்குப்பின்னர் அரேபியப் பிரதேசங்களில் தனது ஆதரவுப் பிரதேசங்களை இழந்த அமெரிக்கா சோமாலியாவைப் பயன்படுத்த முனைந்தது. அதற்காக சியாட் பேரேயை ஆதரித்தது. 1980பதுகளில் அமெரிக்கா 700மில்லியன் டொலர்கள் பெறுமதியான ராணுவ ஆயுதப் பொருட்களை சோமாலியாவிற்கு வழங்கியது. ஆனால் இனக்குழுவென்றின் தீவிரமான தாக்குதலினால் நிலைகுலைந்த சயாட் பேரேயுன் அரசுக்கு அமெரிக்க அரசின் ஆதரவு நிறுத்தப்பட்டது.அதைத் தொடர்ந்து போராடும் இனக்குழுக்களிற்கான ஆதரவை அமெரிக்கா.
தெற்குப்பகுதியில் நிலை கொண்ட "காவியே" இனக்குழுவின் அமைப்பான ஐக்கிய சோமாலிய காங்கிரஸ்ஸிற்கு வழங்கியது. ஆனால் ஐக்கிய சோமாலிய காங்கிரஸ் இரண்டாக உடைந்தது. இதனால் ஆட்சிப் பேரவைவயக் கலைத்து விட்டு ஒரு இனக்குழுவின் தலைவர் இடைக்காலத் தலைவராக நியமிக்கப் பட்டார். ஆனால் இந்த நியமிப்பை "எய்து" என்ற இனக் குழுவினர் பலமாக எதிர்த்து வருகின்றனர்.

சோமாலியாவின் வட பகுதியில் போராடிய சோமாலிய தேசிய விடுதலை இயக்கத்தினர் வட பகுதியை "சுய சார்புக் குடியரசாக" அறிவித்து சர்வதேசத்துஅங்கீகாரத்தை எதிர்பார்க்கின்றனர். மற்றும் சோமாலியாவின் வட பகுதியில் இஸ்லாமிய அடுப்படை வாதக் குழுவான "இன்டிகாட்"தற் பொழுதும் செல்வாக்கு நிலையில் உள்ளது. இவர்கள் சவூதி, ஈரான் போன்ற நாடுகளின் ஆதரவுடன் இயங்குபவர்கள். இவர்கள் அமெரிக்க எதிர்ப்புக் கொள்கை கொண்டவர்கள்.இவர்கள் ஐக்கிய நாடுகள் படைகளை தாக்கியும், நிவாரண உதவுகளைத் தடுத்தும் வருகின்றனர்.

சோமாலியாவின் உள்நாட்டுப் போர், இனக்குழுக்களின் சண்டை உட்பட எல்லா வித அரசியலும் ஏகாதிபத்தியங்களின் நலன்களுக்காக அமெரிக்கா , ரஸ்ஸியா பிரிட்டன் ஆகியவற்றின் கைப்பாவைகளாகிச் செயல்ப்படுகின்றன. இதுவே பஞ்சத்தின் பிரதான காரணமாகும். "புதிய உலக ஒழுங்கின்" மூலம் அமெரிக்கா தனது மேலாதிக்கத்தினை உலகம் பூராக நிலை நாட்ட முனைவதன் ஓர் கட்டமே ஐ.நா படை என்னும் போர்வையில் துருப்புக்களை சோமாலியாவில் குவித்தமையாகும்.

மிகப் பிரதானமான வரலாற்றுக் காரணமொன்றையும் நாம் இங்கு கண்டு கொள்ளலாம். அமெரிக்கா தலைமையிலான உலக முதலாளித்துவம் இதுவரையும் கம்யுனிஸ நாடுகளையும் ரஷ்யாவையும் எதிரிகளாக்கி அதன் மூலம் தனது பிழைப்பையும் இராணுவ விரிவாக்கத்தையும் நடாத்தி வந்தது. இன்று கம்யுனிச நாடுகள் முதலாளித்துவ ஜனநாயகத்தை நோக்கி திரும்பிவிட்டன. அத்தோடு உலக முதலாளித்துவம் மூன்று முகாம்களாக பிரிவடைந்து தமக்குள்ளேயே சந்தைப் போட்டிக்கு தயராகின்றன. ஜேர்மனியும் ஜப்பானும் அமெரிக்காவும் மூன்று முகாம்களுக்கும் தலைமை தாங்குகின்றன. ஜேர்மனியும் ஜப்பானும் பொருளாதார, தொழில் நுட்பரீதியாக அமெரிக்காவை விட மேலோங்கிச் செல்லும் இவ்வேளையில் அமெரிக்கா தனது வல்லாதிக்கத்தை நிலைநிறுத்த வேண்டி தன் எஞ்சியிருக்கும் சக்தியான இராணுவ மேலாதிக்கத்தினை பயன்படுத்த முனைகிறது. இதன் ஓர் முக்கிய கட்டமாகவே சோமாலியாவில் ஐ.நா.பாதுகாப்புப் படை என்ற போர்வையில் தம்மை வலுப்படுத்தி வருகின்றது.

சோமாலியாவின் புவியியல் கேந்திர முக்கியமானது சூயஸ் கால்வாயில் சரக்குக் கப்பல் பயணப் பாதையினை கட்டுப்படுத்த வல்லது. ஜப்பான், ஐரோப்பா ஆகியவற்றிலிருந்து ஆசிய, ஆபிரிக்க நாடுகளுக்கான வணிகத் தொடர்புகளுக்கு சூயஸ் கால்வாய் முக்கிய களமாக அமைகிறது. தனது இராணுவ பலத்தின் மூலம் ஐரோப்பா, ஜப்பான் ஆகியவற்றின் பொருளாதார நடவடிக்கைகளை எதிர்காலத்தில் கட்டுப்படுத்த எடுத்த முன்நடவடிக்கையாகும்.

சலீம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நான் பைத்தியம் இல்லை

(இது முருகதாஸ் ராஜாராமன் என்றொரு இளம் வாலிபரின் சமீபத்திய அனுபவத்தையும். அதன் பின் விளைவுகளையும் விபரிக்கும் உண்மைக் கதை. முருகதாஸ் எம்மை மிகவும் விரும்பிக் கேட்டபடியாலும். அவருக்கு இலங்கைத் தமிழர்களான நாம் உதவ வேண்டும் என்ற நோக்கத்திலேயும் தான். அவருடைய கதையை இங்கு பிரசுரிக்கிறோம். இக்கதையை முருகதாஸ் எமக்கு சொன்னபடியே முடிந்தவரை எழுதியிருக்கிறோம். உங்களால் முடிந்த உதவியை இவருக்கு செய்யும்படி முருகதாஸின் சார்பில் கேட்டுக் கொள்கிறோம். நன்றி —ஆசிரியர் குழு.)

அண்ணை எனக்கு சொந்த ஊர் உரும்பிராய். அங்கே "மாஸ்டர் ராஜாராமன்" என்றால் ரோட்டு நாய்க்குக் கூட தெரியும், அப்படி ஒரு செல்வாக்கு. இந்தப் பிரச்சனை அங்கே தொடங்கியிருக்காட்டி, நான் வாழ் நாளிலே இந்த நாட்டிற்கு வந்திருக்கமாட்டன். நாடோண்ணை இது மனிசன் வாழுவானே இங்கை?. . . பார்த்தீங்களே நான் ஏதோ சொல்ல வந்து எங்கேயோ போய்விட்டேன். முதலிலை என்னுடைய பிரச்சனையை விளங்கி நான் சொல்லப்போறதை உங்களுடைய பத்திரிகையிலே போடப்போறதுக்கு தாங்ஸ் அண்ணை. உங்களுக்குத் தெரியாதே அவனவன் இங்கை Building க்கு Building பேப்பர் அடித்து விடுகிறாங்கள். ஒரு பேனை பிடித்து தமிழ் எழுதக் கூடியவனெல்லாம் எழுதுறான். ஆனால் உங்களிட்டை நான் வந்திருக்கிறனென்றால். . . எனக்குத் தெரியும் எது நல்லது எது கெட்டது என்று.

ஊரிலே நான் எப்படி இருந்தனான் அண்ணை எங்கடை குடும்பம் எப்பிடி இருந்தது? உங்களுக்கு உரும்பிராயிலே சொந்தம் ஏதாவது இருக்கினம் என்றால் விசாரித்துப் பாருங்கோ. பெருமையாக் கதைப்பினம்.

ஆனால் இங்கே வந்து எனக்குப் பைத்தியம் என்றே முடிவெடுத்திட்டாங்கள். இது எங்கே தொடங்கினது என்று எனக்கு இன்னும் ஞாபகம் இருக்குது அண்ணை. ஒரு 2, 3 வருசத்திற்கு முன்னாலே இவங்களெல்லாரும் இவங்களெண்டு என்னோடை றூமிலே இருந்ததுகள் — என்னைப் பற்றி நக்கலாகக் கதைக்கத் தொடங்கினாங்கள். என்ன நான் 32ஆம் இன்னும் கலியாணம் கட்டிக் கொள்லேல்லையாம். . . அதாம் இதாம் என்று தெரியாதே? பிறகு ஒரு நாள் இவன் ரஞ்கனும் மோகனும் 2 பேருக்கு $60 என்று ஒன்றை றூமுக்குக் கூட்டிக் கொண்டு வந்திட்டாங்கள். ரஞ்சன் என்னையும் கூப்பிட்டான். எனக்கு அன்றைக்கு என்ன நடந்ததோ தெரியாது. சரி என்றிட்டன். 3 பேருக்கு $80 தான் அண்ணை.

இவங்கள் என்னை முதற் போ என்றாங்கள். பின்னை நானும் ஒரு றூமுக்கை கூட்டிக் கொண்டு போனேன். அப்பத்தான் அண்ணை அவளை ஒழுங்காகப் பார்த்தன். பெரிய உருப்படி இல்லை பெயரிற்கு அங்கேயும் இங்கேயும் என்று இருக்க வேண்டியவைகள் எல்லாம் இருந்தது. ஒரே மேக்கப் அண்ணை முகத்திலை யாரோ மொடர்ண் ஆர்ட் கீறினனாதிரி. இங்கேதான் அண்ணை பிரச்சனை தொடங்கினது. எனக்கு எதுவும் ok . ஆனால் ஒரு மனுசன் மினக்கெட்டு ஒன்றைச் செய்யேக்கை செய்வது சரியா பிழையா என்று சொல்லுறேல்லையே? அவள் புருவத்தை வழித்துப் போட்டு கீறி விட்டிருக்கிறாள். அது எப்ப பார்த்தாலும் அவள் ஆச்சரியப்படுகிற மாதிரி இருக்குது. எப்ப சந்தோசப்படுகிறாள் எப்ப சந்தோசப்படலை என்று எனக்குத் தெரிய வேண்டாமே? எனக்கு ஆத்திரம் அண்ணை அவளிலே, என்னோட இருந்ததுகளோட, இந்த நாட்டிலே. . . எல்லாரிலேயும்தான்.

எல்லோரிலே இருக்கின்ற ஆத்திரத்தையும் அவளிலே காட்டினேன். அன்றைக்கு இரவு வந்த மாதிரி முன்னே பின்னே வந்ததில்லை எனக்கு. என்ன? கோபமண்ணை. அவளை றூமை விட்டு ஓடும் வரை வாயிலே ரத்தம் வரும் வரைஅடித்தேன். அவங்கள் இரண்டு பேரும் உடனே வந்து ஏதோ துக்கம் விசாரிக்கிற மாதிரி கேள்வி கேட்டாங்கள். "என்ன தாஸ் அண்ணை இப்பிடிச் செய்து போட்டீங்கள்? உங்களுக்கு என்ன நடந்தது?". நான் ஒன்றும் பறையேல்லை. எனக்கு ஒன்றும் நடக்கேல்லை. அதுதான் பிரச்சனை அப்பவே தொடங்கினவங்கள் இந்த விசரன் பிரச்சாரத்தை, இப்ப இரண்டு மாதத்திற்கு முதல் நடந்த சில சம்பவங்களாலேயே அது முத்திட்டுது.

இது வரைக்கும் நான் சொன்னதைக் கேட்டுட்டு நீங்க நினைக்கலாம் நான் ஏதோ பிரச்சனையைத் தேடிப் போறவன் என்று. இல்லையண்ணை, நான் அப்பிடிப்பட்டவன் இல்லை என்னை அப்பிடி வளர்க்கேலை. ஊரிலே விசாரிச்சுப் பாருங்கோ தெரியும். நான் இங்கே வந்து பக்டரியில் வேலை செய்கிறேன் என்று சொன்னாலே சனம் சிரிக்கும். எங்கடை குடும்பம் வேலை செய்து வாழப்பிறக்கேல்லை. அண்ணை எல்லாம் இந்தப் பிரச்சனை அங்கே தொடங்கினதாலை.... எப்பிடி இருந்தனான் அங்கே?

நான் வேலைக்குப் போய்வந்தால், இங்கே றூமுக்குள்ளே என்னட பாட்டுக்கு இருக்கிறனான். ஒரு நாளும் ஒரு பிரச்சனைக்கும் போறேலை. கிழமைக்கு இரண்டு ரஜனி படம் பார்ப்பேன். மற்ற நாளிலே யார் நடித்தாலும் பரவாயில்லை என்று ஏதாவது ஒரு படம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பார்ப்பேன். ரஜனியுடைய அருமை ஒருத்தருக்கும் விளங்கிறேல்லை. அவன்ரை நடிப்பு என்ன. ஸ்ரைல் என்ன எல்லோரும் அவன் கமலை ஏதோ பெரிய நடிகன் என்று புழுகிக் கொண்டிருப்பாங்கள். அவன் என்ன பெரிய நடிகன்? தொட்டதற்கெல்லாம் மூலையில இருந்து பெட்டை மாதிரி அழுது கொண்டிருப்பான். உது நடிப்போ சொல்லுங்கோ. பார்த்தீங்களே, பிறகும் எங்கேயோ போயிட்டன்.

பிறகு பாருங்கோ, இப்ப ஒரு இரண்டு மாதத்திற்கு முதல், ஒரு நாளிரவு — ஒரு 12:30 இருக்கும் — நான் சர்ச் — வெலஸ்லி சந்திப் பக்கத்தாலை வந்து கொண்டிருந்தனான். அதிலை ஒரு Donut கடை ஒன்று இருக்கும், அதற்குப் பக்கத்திலே ஒரு பெம்பிளையும், ஆம்பிளையும் சண்டை போடுகிற மாதிரி இருந்தது. கிட்டப்போனால் ஆம்பிளை Made in Sri Lanka மாதிரி இருந்தது. ஆனால் ஆள் படு ஸ்ரைல். அண்ணை நான் குளிரிலே நடுங்கிக் கொண்டிருக்கிறேன். அவன் கோமணம் கட்டின மாதிரி "சோட்ஸ்" போட்டிருக்கிறான். மேலே ஏதோ கறையான் அரிச்ச ரீசேட் ஒன்று. மார்பிலே ஒரு தோடு.

ஆள் என்னைக் கண்டதும் ஒரு மூலைக்கு இழுத்துக் கொண்டு போய் "அன்பரே நீர் தமிழ் பேசுவீரோ?" என்கிறான். இவன் பேசுகிறது தான் தமிழ் என்றால் எனக்குச் சத்தியமாய் தமிழ் தெரியாது. நான் தலையாட்டினேன். "நான் உம்கூட வருகிறேன், நீரும் நானும் பரஸ்பரம் தெரிந்தவர்கள். இதை அங்கே சொல்லும்".

அங்கே அவள் Fish Net Stocking ல் ஒயிலாக என்னையே பார்த்துக் கொண்டிருந்தாள். எனக்கு ஒன்றுமே விளங்கேல்லை.
"அண்ணை எனக்கு உங்களைத் தெரியாது நான் ஏன் பொய் சொல்ல வேண்டும்?". என்றேன் நான்.
"மானிடரே... அன்பரே நான் சொல்வதைக் கேளும் உமக்கு மிக நல்லது".
நான் கேட்டேன் Fish Net இடம் போய் அவள்.... அது.... அவன்..... அவன் அண்ணை — சேவ் பண்ணிய பச்சை முகத்திலே, நிற்கிற முறையே சரியில்லை அண்ணை.... காலை அகட்டிக் கொண்டு — ஒரு பெம்பிளை அப்பிடி நிற்க மாட்டாள். அவளிடம் அவன் சொன்னதைச் சொல்லி விட்டுத் திரும்ப, யாரோ காரைப்பக்கத்தில் நிறுத்தி "You wanna Go Fishing Babe?" என்கிறான். Fish Net, "Why Not?" என்றபடி காரில் ஏறினாள்
"ரொம்ப நன்றி நண்பரே"
"பரவாயில்லை, அப்ப வருகிறேன் நண்பரே "
"ஏன் வாங்களேன் ஆகாரம் ஏதாவது உண்டு மகிழலாம்."என்றான். donutஐக் காட்டி, ஏனோ தெரியவில்லை அண்ணை, அவன சொல்வதெற்கெல்லாம் தலையாட்ட வேண்டும்
போல இருந்தது. — ஆட்டினேன்.

உள்ளே வெளிச்சத்தில் தான் ஆளை நல்லாப்பார்த்தேன். ஒரு 5' 6" இருப்பான். தலை மயிரை "சத்யா" கமல் மாதிரி வெட்டி இருந்தான்
" அண்ணைக்கு சிலோனோ?" — இது நான்.
அண்ணை "இல்லை அன்பரே, யாம் எவ்விடத்திலும் இருப்போம். என்னை உமக்கு நன்கு தெரியும். சிந்தியும் நண்பரே." என்றார்.
நான் சிந்தித்தேன்; குழம்பினேன்.

சிந்திக்கயில் அவரின் கண்களைப் பார்த்தேன். யாரோ சுத்தியலால் உச்சியில் அடித்த மாதிரி இருந்தது. அண்ணை! அவர் சிவபெருமான் ! மோகனமாக எனக்குப் பக்கத்தில் புன்னகைக்கும் சிவபெருமான்! நான் என்றதால் பேசாமல் இருந்தேன். எங்கடை அப்புவோ, ஆச்சியோ இருந்திருந்தால் பிராணனை விட்டிரக்குங்கள்.

அவர் அண்ணை, இங்கிகே நாரதரோடு ஒரு நாளைக்கு முதல் வந்தவையாம். இவருடைய Wife — யாரோ புதுசு — Mustang காரொன்றை T.V. யில் பார்த்துப் போட்டு, அது வேணும் என்று கேட்டதாலே, ஒன்று வாங்க இங்கே வந்திரக்கிறார். அங்கே, இங்கே இருக்கிற T.V. station எல்லாம் இழுக்குமாம் அண்ணை. அப்பிடி வந்ததிலே, நாரதர் ராத்திரி பார்க்டேல் பக்கம் யாரோடோ தங்கியிருக்கப் போட்டாராம். அதான் இவர் Fish Net ரோடு நேற்றுத் தங்கியிருந்தவராம். ஆள் புதுசு என்று ஏமாத்திப் போட்டாள் Fish Net.

நாங்கள் இரண்டு பேரும் ஒரு அரை மணித்தியாலமாகக் கதைத்தோம். நான் கேட்டேன் அவரிட்டை, ஏன் பூமிக்கு வந்து கார் வாங்க வேண்டும் என்று. அதற்கு அவர் சொன்னார்: "அன்பரே, மானிடரின் கைவண்ணமே தனி. நான் மானிடரிடம் இருந்து எவ்வளவு கற்றுக் கொண்டேன் தெரியுமா? என்ன சுகம் இங்கே; எவ்வளவு வித்தியாசங்கள். நாங்கள் எல்லோரும் தேவலோகத்தில ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக, ஒரே விதத்தில், ஒன்றையே செய்து கொண்டிருக்கிறோம். இங்கு பலவிதமாக, புதுமையுடன் செய்கிறார்கள். நானும் நாரதரும் கூட — நாரதர் என்றவுடன் தான் ஞாபகம் வருகிறது. அன்பரே Syringe இருக்கிறதா?"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

" syringe என்றால்......"
"ஊசி அன்பரே.... ஊசி, கையில் குத்தும் ஊசி"
என்னத்துக்கு ஊசி என்று எனக்கு விளங்கேல்லை " என்னிடம் இல்லை ஐயா! ".
" எனக்கு மிக அவசரம்! ஊசி இப்பொழுது தேவை!"
அவர் கொஞ்சம் கோபப் பட்டது போலிருந்தது.
" நான் நாரதரை உடனடியாகச் சந்திக்க வேண்டும். வருகிறேன் அன்பரே"
" ஐயா, நீங்கள் போகமுதல் ஒரு விண்ணப்பம்.... ஒரு வரம் கேட்க வேண்டும்".
" கேளும், எனக்கு மிக அவசரமாக ஊசி தேவை!"
" என்னை இங்கு எல்லோரும் பைத்தியம் எண்டெல்லாம் கதைக்கிறாங்கள் ஒரே பிரச்சனை, நீங்கள் தயவு பண்ணி இந்தப பிரச்சனையை எப்படித் தவிர்ப்பது என்று அறிவுரை பண்ண வேண்டும்".
" அன்பரே நிறையப் பொய் சொல்லும், ஏரத்தரையும் நம்பாதேயும், உமக்காக வாழும். பிரச்சனை முடிந்தது. வரவா? "
" மற்றது உங்களைச் சந்தித்ததில் மிக்க மகிழச்சி, நாரதரை கேட்டதாகச் சொல்லுங்கோ. முருகன் பிள்ளையார் எல்லோரையுமு கேட்டதாகச் சொல்லுங்கோ".
"சரி வருகிறேன் அன்பரே".

அவர் போயிட்டார். எனக்கு எல்லாமே ஒரு கனவு மாதிரி இருந்நது. side walk லே யாரோ ஒருத்தன் தண்ணியிலே, நிலாவைக் கூப்பிட்டுக் கொண்டிருந்தான்.

நான் அண்ணை, சிவபெருமானுடைய advise ஐக் கேட்டிருக்க வேண்டும். ஆனால், நான் என்ன செய்தேன், வீட்டை போனவுடனே சிவபெருமானைக் கண்டேன் என்று சொல்லி விட்டேன். அவங்கள் எல்லோருக்கும் வெறி. வெறி என்றாலே சும்மா வெட்டிக்கதை கதைப்பாங்கள். ஒருத்தன் முயலுக்கு 2 கால் எண்டுவான் இன்னொருத்தன் இவர் என்ன செய்கிறார் பார்ப்பம் என்ற மாதிரி, இல்லை மூன்று கால் எண்டுவான். அவங்களுக்கு இது ஒரு பொழுது போக்கண்ணை. எவ்வளவு நேரந்தான் பார்த்த படத்தையே திரும்பத்திரும்ப பார்ப்பது.

நான் இந்தக் கதையைச் சொன்னவுடனே மாஸ்டர் என்று ஒருத்தர் இருந்தவர். அவர் சொன்னார், " டேய், யாரடா கடவுள்? யாரடா சிவபெருமான்? எனக்கு முன்னாலே வரச்சொல்லு பார்ப்பம். வரமாட்டான்டா அவன், பயம். ஆ! பயம். கடவுளாம் மண்ணாங்கட்டி , எல்லாம் சுத்து மாத்தடா. ஏன்டா, டேய், சிவலிங்கம் என்றால் விழுந்து கும்பிடுறாளவை, ஆனால் என்னைக் கும்பிடுகிறாளவையோ? இல்லை. என்னட்டடை லிங்கம் இல்லையோ? சிவலிங்கம் தேவை அவைக்கு."
"மாஸ்ரர் தாஸ் ஏதோ சிவபெருமானைக்கண்டது என்றறெல்லோ சொல்லுது", என்றான் மோகன். அடிசக்கை இவனுக்கு என்ன உண்மையாகவே கழண்டுட்டுது போலத்தான் இருக்குது."
" மாஸ்டர்! கதைக்கிறதைப் பார்த்து பார்த்துக்கதையுங்கோ....."
" என்னடா தாஸ் வெருட்டிறாய். உன்டை சிவபெருமானைக் கூட்டிக் கொண்டு வாவன், பார்ப்பம்..... வெட்டிடுவன் தெரியுமே." மாஸ்டர் வெகுண்டார்.

எனக்குள்ளே இருந்த கோபம் எல்லாம் வெளிப்பட்டு, என்ன நடந்தது என்று தெரியமுதலே, என்கைக்குக் கத்தி வந்து. மாஸ்டரைப பதம் பார்த்து, ஓடிய மோகனின் காலைக் கீறி... எல்லாம் பழைய கதை. சும்மா சின்னக் காயங்கள் தான். ஆனால், இவங்கள் பொலிஸ், கோர்ட்ஸ் என்று போய் பெரிசாக்கிட்டாங்கள்.

அண்ணை கோட்டிலை அவங்கள் இதுதான் எனக்கு முதல் குற்றம் எண்டதாலை fine ஓடை என்னை விட இருந்தவங்கள். ஆனால் இவங்கள் தான் கழண்ட கேஸ், பொதுமக்களுக்கு ஆபத்து என்றெல்லாம் கதை விட்டாங்கள். நடுராத்திரியிலே கடவுளைக கண்டதெண்டு சொல்கிறேனாம்.. கோபப் படுகிறேனாம், கத்தியை எடுக்கிறேனாம் கதைக்கத் தெரிந்தவங்களெல்லாம் நல்லவங்கள் அண்ணை, எனக்குத் கதைக்கத் தெரியேல்லை.

பிறகு, கோட்டிலே, சொல்லிப் போட்டான், நான் கட்டாயமாக ஒரு psycho-analyst ஐ சந்தித்து, அவர் என்னைப் பற்றி என்ன நினைக்கிறார் என்பதைப் பொறுத்துத் தான் மேலதிகமாக ஏதாவது செய்யலாம் என்று. பின்னே நானும் ஒரு psycho-analyst இடம் 4, 5 கிழமையாகப் போனேன்.

அவன் யாரண்ணை நான் விசரோ இல்லையோ என்று சொல்வதற்கு? நான் disturbed ஆம், கூடுதலாக வொறுப்புணர்ச்சி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொண்டிருக்கிறேனாம்.... உதெல்லாம் ஒரு தொழிலோ அண்ணை ?
இதுக்கு ஒரு படிப்பு வேறை. பேசாமல் பிச்சையெடுக்கலாம் அண்ணை.

இவங்கள் யாரண்ணை என்னைப் பற்றிச் சொல்வதற்கு? இந்தச் சிவபெருமானைக் கண்டேன் என்றதிலேதானே இந்தப் பிரச்சனை தொடங்கியது. இதற்கு அங்கேயே முற்றுப்புள்ளி வைத்துவிடுகிறேன் பாருங்கோ. உங்களுடைய பத்திரிகை வாசிக்கிறவர்கள் யாராவது, நான் இது வரைக்கும் சொன்னமாதிரி சிவபெருமானையோ, நாரதரையோ கண்டிருந்தால் உங்களுக்கு எழுதச் சொல்லுங்கோ. ஒரு ஆளாவது கண்டிருக்கவேண்டும் அண்ணை. பிறகு காட்டுகிறேன் யாருக்கு விசர் என்று.

இவ்வளவு நேரம் உங்களுடன் இருந்து கதைத்ததற்கு ஏதாவது என்னைப் பற்றி வித்தியாசமாகத் தெரியுதோ அண்ணை? எல்லாரையும் போலத்தான் நானும் இருக்கிறேன். எப்படி இருந்தனான் அண்ணை ஊரிலை.... இப்படி ஆக்கிட்டாங்கள். யாருக்கண்ணை பயித்தியம்?

எவனுக்குப் பயித்தியம் இல்லை

சுரேஷ் சுப்பிரமணியம்

19 ம் பக்கம் தொடர்ச்சி

பெண் சார்ந்து வளர்க்கப்படாமல் சுயமாக வளர்க்கப்பட்டால் அவளின் வாழ்வு வீட்டோடு மட்டும் முடியாது. தனது தனிமையை உணரும் போதோ தனக்கு பிரச்சினைகள் வரும்போதோ சுயமாக சிந்தித்து அதற்குரிய முடிவை அவளே எடுத்துக் கொள்ள முடியும். வீட்டில் கீறப்பட்ட வட்டத்தில் வாழும் பெண்ணுக்கு அந்த வாழ்க்கையில் என் சிறு மாறுதல் வந்தாலும் உடன் ஏற்றுக் கொள்ள முடியாத நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறாள். ஏனெனில் அவள் அந்த வாழ்க்கைக்குள் பல வருடமாக அடிமைப்படுத்தப்பட்டிருப்பாள். அப்படியொரு வட்டத்தில் அவளை இருக்கவிடாமல் அவள் வெளியுலகத்துடன் சஞ்சரிக்க விட்டால் அவளும் ஒவ்வொரு மாறுதல்களையும் அதன் சரி பிழை பற்றியும் சிந்தித்து தன் கருத்துக்களையும் சுதந்திரமாக வெளியிடத் தயங்கமாட்டாள்.

மனிதனாக ஆறு அறிவுடன் பிறந்த பெருமையைக் கட்டிக் காக்கும் ஆண்கள் எல்லாம் ஏன் அந்த அறிவைப் பயன்படுத்துகிறார்கள் இல்லை? ஏன் இன்னொருவரின் கருத்துச் சுதந்திரத்தை அடக்குகிறார்கள்? பெண்ணின் கருத்து இவர்களினதும் பலமானது என அறிந்து அந்த மாறுதல்களை ஜீரணிக்க முடியாத பட்சத்தில்தான் அந்த மாறுதலுக்கு எதிராக தங்கள் ஆணாதிக்கத்தனத்தை அடக்குமுறைக் கரங்களின் மூலம் பெண்கள் மீது நடத்தி முடிக்கிறார்கள். மொத்தத்தில் அவளது உண்மையான கருத்துக்களுக்குரிய பதிலையையும் அவளது மாறுதல்களையையும் இச்சமுதாயத்தால் ஏற்றுக் கொள்ள முடியாதது என்பதுதான் உண்மை.

பெண்களே! சமுதாயத்துக்கு விடுதலை வேண்டும் என்று போராடத் துணியும் வீரமுள்ள நீங்கள் ஏன் உங்களுக்குரிய உரிமைகளுக்கு குரல் கொடுக்கிறீர்கள் இல்லை. தரப்படாத உரிமைகளை, தரப்பட வேண்டிய உரிமைகளை தரத்தயங்கினால் நீங்களாகவே எடுத்துக் கொள்ள வேண்டும். இன்று பெண்ணால் எழுப்பப்படும் கேள்விகள் நாளை பலமுள்ள பெண்கள் சமுகத்தால் கேட்கப்படும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

— கௌசிகா

# அனாதை

(முஹம்மத் அல் மஜூட்)
தமிழில் மணி


ஓ
அந்தக் கனா . . .
அந்தக் கனா . . .
என் கட்டித் தங்கக் கார் நொருங்கியது
சிற்கள் நாடோடிகள் போல் சிதறின.
வசந்தந்தின் இரவொன்றில் கனாக் கண்டேன்
கபலையிற்
செதில்களும் சிப்புகளும் என் கட்டிலைப்
போர்த்தின.
விடுதலை பற்றிக் கனாக் கண்ட போதோ
காலைப் பொழுதின் சோதி வளையம் போல்
வாள்கள் எனது கழுத்தை நோக்கின.
. . .இனிமேற்
துறைமுகங்களிலும் புகையிரதெங்களிலும்
என்னைக் காணமாட்டீர்.
என் வாய் நதிகளைத் தொட்டவாறு
என் விழிநீர் கண்டங்கட்குக் குறுக்கே பாய
ஐரோப்பாவின் தேசப்படங்களின் மீது
பொது நூலகங்களில்
தூங்குவதைக் காண்பீர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கிட்டு என்ற....



விடுதலைப் புலிகளின் முன்னாள் யாழ்ப்பாணத் தளபதியான கிட்டுவும் 9 புலிகளும் இந்து சமுத்திரத்தின் நீர்ப்பரப்பில் இந்தியக் கடற்படையினரால் சுற்றி வளைக்கப்பட்ட போது தற்கொலை செய்து கொண்டனர். மீதிப் பேர் கைது செய்யப்பட்டனர்.

அனேகமான பத்திரிகைகள் சஞ்சிகைகள் இச்சம்பவத்திற்கு மிகப் பெரிய முக்கியத்துவத்தை கொடுத்திருந்தனர். அது மட்டுமில்லாமல் தலைசிறந்த தளபதியிலிருந்து, பத்திரிகையாளனாக, ஓவியனாக, கலைஞனாக ..... போட்டி போட்டு புகழ்ந்தன.

எது எப்படியிருந்தாலும் கிட்டுவின் மரணத்தில் இந்தியாவின் அடாவடித்தனம் கண்டிக்கப்பட வேண்டியது ஆகும். புலிகளின் தலைமையினதும் கிட்டுவினதும் தவறுகள், துரோகங்கள் என்பன தமிழ் பேசும் மக்களாலல்தான் தண்டிக்கப்பட வேண்டியவை ஆகும். தமிழ் பேசும் மக்களுக்கே அந்த உரிமையும் உண்டு. புலிகளின் இந்தியாவுடனான அரசியல் அணுகுமுறைகளில் உள்ள தவறுகளிற்கு புலிகளின் அரசியல் வங்குரோத்துத்தனமே காரணமாகும். ராஜீவ் காந்தியின் கொலையும் அப்படிப்பட்ட ஒன்றே. ஆனால் இந்தியா புலிகளை இராணுவ, அரசியல்,சதிமுறை போன்ற எல்லா வகைகளிலும் நசுக்க முனைவது கண்டிக்கப்பட வேண்டியதாகும். இன்றைய அரசியல் நிலைமைகளில் புலிகள் அடக்கப்படும் தமிழ் மக்களின் பிழையான பிரதிநிதியாக உள்ளனர். பிழையான பிரதிநிதிகளை தண்டிக்கவோ, தூக்கியெறியவோ உள்ள உரிமையையும் அவர்களால் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் மக்களுக்கே உண்டு தவிர இந்திய அரசிற்கு கிடையாது.

கிட்டுவின் வாழ்வில்; தேசிய விடுதலைப் போராட்டத்தோடு தன்னை இணைத்துக் கொண்டதும் இலங்கையின் அரச இராணுவத்திற்கு எதிராக ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்ததும் வரவேற்கப்பட வேண்டிய அம்சங்கள். அதேநேரம் தேசிய விடுதலைப் போராட்டத்தில் முன்னணிப் பாத்திரம் வகித்த கிட்டு போன்றோரின் அரசியல், நடைமுறை என்பன ஒட்டு மொத்தமாக சீர்தூக்கித்தான் கணிப்பிடல் வேண்டும். ஏனெனில் இவர்களது செயற்பாடுகள் மக்களின் முன்னேற்றத்தை, அதாவது விடுதலையை முன்நோக்கியும் நகர்த்தலாம் அல்லது பின்நோக்கியும் நகர்த்தலாம். பின்நோக்கிய நகர்வு அல்லது தேக்கநிலை என்பது அவர்களின் விரிந்த சமுதாய நோக்கின் அளவில் தங்கியிருக்கலாம் அல்லது அவர்களின் செயற்பாடுகளில் பிரதிபலிக்கப்படும் வர்க்கத் தன்மையில் தங்கியிருக்கலாம்.


தற்போதைய தேசிய விடுதலைப் போராட்டத்தில் தன்னை இணைத்துக் கொண்ட ஒவ்வொரு விடுதலைப் புலிகளை நோக்கியும் இவ்விமர்சனத்தை வைக்கமுடியாது. ஒவ்வொரு சராசரி இளைஞனும் யுவதியும் தான் சார்ந்திருக்கும் சமூகத்தின் அடக்குமுறைக்கு எதிராகப் போராடப் புறப்படுவது இயல்பு. அவர்களின் கண்களிற்கு முன்னால் முதன்மையான போராட்ட சக்தியாக புலிகள் தென்படுகின்றனர். அதற்கேற்ற வகையில் புலிகளின் தலைமை தங்களுக்கு உகந்த போராட்ட சூழலை உருவாக்கி அச்சூழலையே மக்களிடையேயும் திணிக்கின்றனர்.

புலிகளின் போராட்ட வரலாறு பிரதிபலித்த அடிப்படை அம்சங்கள் யாவும் யாழ்ப்பாண மேல்நிலை வர்க்கத்தின் அபிலாசைகளையே பிரதிபலித்தது. தமிழ் பேசும் மக்களின் விடுதலைக்காகப் புறப்பட்ட பிரதான மற்ற இயக்கங்களும் பேச்சளவில் சோஷலிசம் கதைத்தாலும் அடிப்படையில் மேல்நிலை வர்க்கத்தின் அபிலாசைகளையே பிரதிபலித்தன. புலிகளின் முன்னணி சக்தியாக விளங்கிய கிட்டு போன்றோரின் இயல்புகளும், புலிகளின் நடைமுறை இயல்புகள் என்பனவும் ஒன்றில் ஒன்று சார்ந்திருப்பது தவிர்க்கவியலாத உண்மையாகும்.

கிட்டுவின் காலத்தில் ஊருக்குள் களவு, கொள்ளை என்பன நடக்கவில்லை எனவும், சிங்கள இராணுவத்தினரை யாழ் குடாநாட்டுக்குள் நுழைய அனுமதிக்கவில்லை எனவும் அத்துடன் இடைக்கால சிவில் நிர்வாகம் போன்றவற்றை உருவாக்கினார் எனவும் பொதுவாகக் கூறப்படுகிறது. இவையே யாழ் மேல்நிலை வர்க்கத்தினருக்கு, கிட்டு மேல் பரந்த அபிமானத்தை தோற்றுவித்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



காரணங்களும் உண்டு. தமிழர் பேசும் மக்களின் விடுதலையானது பிரதேச அடிப்படையில் யாழப்பாண நோக்கிலிருந்து வெளிப்படுவது ஒரு காரணமாகும். புலிகளின் ஆதார நிலைகளில் வெளிநாட்டுத் தமிழர்கள் கணிசமான பங்கு வகித்தனர். புலிகளினால் குடநாடு தவிர்ந்த பிரதேசங்கள் இரண்டாம் பட்சமாகவே பார்க்கப்பட்டன. இதுவும் ஒரு காராணமாகும். கிட்டுவின் காலத்தில் யாழ் குடாநாட்டு மேல் வர்க்கத்தவரின் நலன்கள் பாதுகாக்கப்பட்டது உண்மைதான். ஊர்களின் நாட்டாண்மையாகக் காணப்பட்டவர்களே அதிக பாசம் வைத்திருந்தார்கள். இவர்களால்தான் Coco Colaவும் கண்டோசும் கொடுக்கக்கூடியதாக இருந்தது. அதேவேளை யாழ் மாவட்டத்தின் மற்றப் பகுதிகளிலும் பின் தங்கிய பகுதிகளிலும் வாழ்ந்த போராளிகளுக்கு அடிப்படை வசதிகளில் கூட பாகுபாடு காட்டப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. அதேகாலத்தில் யாழ்ப்பாணத்தில் திருமலை, மட்டக்களப்பு, வவுனியா அகதிகள் தகுந்த உணவின்றியும் உடுக்கத் துணியில்லாமலும் அகதி முகாம்களில் அல்லல்ப்பட்ட கதைகள் பல உண்டு.



திரும்பிப் பார்க்கிறோம். . . .

# அராஜகத்திற்கு மூளையே இல்லை

முன்னேறுங்கள்
போர் முனையில்!
மூளையைச் சலவை செய்து
முகங்களில் மூர்க்கத்தோடு
விழிகளை மேலே தூக்கி
கால்களின் வலிமையோடு
போர் முனையில்
முன்னேறுங்கள்!

நெருப்புக் கொள்ளியுடன்
என் அப்பன் சொல்கிறான்
"ஆமி சுடுகிறான்
அடுப்புச் சுடுவதைப் பற்றி
அலட்டிக் கொள்ளாதே"
எதிர்த்துப் போரிடுவதைத் தவிர
என் தாய்க்கு
வேறு வழியில்லை.

குருட்டுத் துப்பாக்கி குரல்
வளையைக்
குறிபார்க்கும்.

மிரட்டல்த் தொலைபேசிகள்
மிச்சத்துக்கு அறிக்கைகள்
ஆனாலும் நாம் வாழ்ந்தாக
வேண்டும்!
போர்முனையில்
முன்னேறுங்கள்!

மரப்பிடிக்கும்
இரும்புக் குழாய்க்கும்
மனிதாபிமானம்
இருக்க நியாயமில்லை
அதற்காக
மனிதத் தோலுக்குமா . . . . . ?

மனிதத்தைத் தோற்கடிக்க
மரணத்தால் முடியாது
முன்னேறுங்கள்

இருப்புக்காகவே
எல்லாம் நடக்கிறது!
இருப்பைத் தேடியே
இயக்கம் இருக்கிறது!



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கிட்டுவின் கதாநாயக மனோபாவம் யாழ்ப்பாண மக்கள் பலரால் புரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. இவரின் மதப்பற்றும் வெளிப்படையானது. இதுதவிர மற்ற இயக்கங்களையும், மாற்றுக் கருத்துடையவர்களையும் அழிப்பதில் திட்டவட்டமான பங்காற்றியவர் கிட்டு. இவரின் காலம் வரையில் புலிகளிற்கு தமது ஆதிக்கத்தை நிறுவுவதில் மிகப் பெரிய வெற்றியாகும். உலகத்தின் எந்த சமூகத்தின் போராட்டத்திலும் நடாக்காத ஒன்று. அது ஒரு இயக்கத்தால்தான் போராட்டத்தை முன்னெடுக்கலாம் என்றும் அப்படியிருந்தால்தான் வெற்றி பெறலாம் என்னும் தத்துவத்தை மக்களிடையே வெற்றிகரமாக வேரூன்ற வைத்தமை. கிட்டு தேசியநலனில் கொண்ட பற்றும் தீவிரமும் வரவேற்கப்பட வேண்டியவை ஆயினும் ஒட்டுமொத்தமாக புலிகளின் மேற்படி அம்சங்களை பிரதிபலித்த திறமையான பிரதிநிதியாக கிட்டு விளங்கினார். அல்லாமல் தமிழ் பேசும் மக்களின் விடுதலை பற்றிய விஞ்ஞான பூர்வமாகவோ அல்லது நேர்மையான முறையிலோ பிரச்சினைகளை அணுகவில்லை.

E.P.R.L.F. போன்ற இயக்கங்கள் பேச்சளவில் மாக்சிய லெனினியத் தன்மைகளைக் கொண்டிருந்தன. யாழ்ப்பாண மேல் வர்க்கம் அதை என்றுமே அங்கீகரிக்கத் தயாராக இருக்கவில்லை. E.P. என்னும் பதத்தை பள்ளன்.நளவன் இயக்கம் என்ற நிலையிலேயே யாழ் மேட்டுக்குடியினர் கருதிவந்தனர். புலிகளின் EPRLF னர் மீதான வெறிதாக்குதலும் அதனை அழித்தொழித்தலும் கிட்டுவின் தலைமையில் நடந்தேறியது இது போன்றே ஈழத்திலிருந்த M.L. (மா. லெ) இயக்கங்களும் கிட்டுவின் தலைமையில் திட்டமிட்டு அழிக்கப்பட்டன. இவைகள் யாழ் மேட்டுக்குடியின் கனவுகளுக்கு நிஜவடிவம் கொடுத்ததாகவே அமைந்தது. எனவே cokeம் கண்டோசும் அவர்கள் புலிகளுக்குக் கொடுத்ததில் வியப்பேதுமில்லை. மேலும் புலிகள் அந்த வர்க்கத்தின் ஏகோபித்த பிரதிநிதிகளாகவே தங்களை மீண்டும் மீண்டும் நிலைநிறுத்திக் கொண்டனர் என்பதே வரலாறு. புலிகளின் தலைமையில் நடந்த மேல்மட்டச் சதியால் கிட்டுவின் கால் பறிக்கப் பட்டது. இதற்கு பிரபாகரனே காரண கர்த்தா. இதிலிருந்து கிட்டுவிடம் பிரபாகரனின் செயல்களிற்கு ஓர் எதிர்ப்புத் தன்மையும் ஜனநாயக உணர்வும் தோன்றியதாக சிலரிடம் ஓர் கருத்தோட்டம் நிலவுகின்றது. இது மிகவும் பிழையான எண்ண நிலைப்பாடே.



வரி விதிக்கப்பட்ட
வாயோடு
புதை குழிகளைப்
புன்னகையோடு வரவேற்போம்!

சுரங்கத்தில்
தங்கமிருக்கலாம்
என்று
கரங்களில் விலங்கோடு
நடக்க
நமக்குச் சம்மதமில்லை!

விழிகளைத் தருவேன்
தாயகத்துக்கென்றவனை
விலங்கிட்டுக் கொன்றது
அநியாயம். . . . கொடுமை
என்றால்
விஜிதரனைக் காணவில்லை
என்பதற்கு
விளக்கமென்ன வேண்டிக்
கிடக்கிறது!
முன்னேறுங்கள் போர் முனையில

அராஜகத்திற்கு மூளையே இல்லை
அதனால்
மூலைக்கு மூலை
மக்கள் முணு முணுப்பது
அதற்கு விளங்கவேயில்லை
விவாதத்திற்கிடமின்றி
ஒன்று மட்டும் உண்மை!

விலங்குகளோடு வாழ மக்கள்
விரும்பமாட்டார்கள்
விளங்குதா?
முன்னேறுங்கள் போர் முனையில்!


**எமக்கு ஜனநாயகம் வேண்டும்! நாம் பேசவேண்டும்! எழுத வேண்டும்! வாழ வேண்டும்! எல்லாத்துக்குமாக நாம் போராடித்தான் ஆக வேண்டும்.**

நன்றி : யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவர்கள்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net










சமுதாயத்தை பாதிக்காமல் இருந்ததில்லை.



தயாநிதி (ரூபன்)
கப்புது.
நெல்லியடி.

மண்ணுக்காக போராட புலிகளுடன் சேர்ந்தவன். புலிகளுக்குள் ஜனநாயகத்திற்காக போராடி பாக்கு நீரிணைக்குள் விதைக்கப்பட்டவன்

ஏனெனில் கிட்டுவின் வரலாற்றில் இவர்கள் மறந்த உண்மைகள் சிலவற்றை மீண்டும் நினைவு படுத்துகின்றோம்.

"செல்வியை விடுதலை செய்" எனக் கிட்டு பிரபாகரனிற்கு தகவல் அனுப்பியதாக கனடாவில் வெளிவரும் செந்தாமரையில் வந்த கதையிது.

உங்களிற்கு நினைவிருக்கலாம்! விஜிதரன் என்ற யாழ் பல்கலைக்கழக மாணவனும் அவனது புதை குழி நினைவுகளும்....

மீன்பாடும் தேன்னாடாம் மட்டக்களப்பில் பிறந்த தன்மகனை ஓர் அறிவு ஜீவியாகப் பார்க்க விளைந்த பெற்றோர் அவனை ஓர் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைக்க முனைந்தனர். பேராதனை வளாகம் சென்றால் சிங்களவன் கத்தியால் குத்தலாம். கொழும்பில் ஏன் இன்னும் ஓர் ஜூலைக் கலவரம் மீண்டும் வராது என்று சிந்தித்த பெற்றோர். இருக்கின்றதே யாழ் பல்கலைக் கழகம்! யாழ் குடாநாடு தமிழ் மறவர்களால் கைப்பற்றப்பட்டு ஆளப்படுகின்றதே. எனவே அங்கு தமிழனுக்கு மிகுந்த பாதுகாப்பும், கௌரவமும் இருக்கும். எங்கள் மகனும் ஓர் தமிழ் மகன்தானே? தமிழனுக்கு யாழ்ப்பாணத்தில் இல்லாத பாதுகாப்பா? என எண்ணிய பெற்றோர் அனுப்பி வைத்தனர் தம் மகனை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்கு! எனவே ஓர் மாணவன் வந்து சேர்ந்தான் யாழ்ப்பாணத்திற்கு.

வரலாற்றில் எல்லாத் தேசங்களிலும் மாணவர் போராட்டங்கள், கிளர்ச்சிகள் விடுதலைப் போராட்டங்களுடன் இரண்டறக்கலந்தே வந்துள்ளன. ஓர் நாட்டின் அரசியல்ச் சூழ்நிலைகள் மாணவர்


தொடர்ச்சி 44ம் பக்கம் பார்க்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மண்ணில் பதிந்த விதைகள்



வானம் எங்கும் கறுப்பு முகில்கள் கூட்டமாய் அசைந்த வண்ணமிருந்தன. கிழக்கு மூலை கன்னங் கருப்பாய் இருந்தது. இதமான குளிர் காற்று வீசியது. எந்த நேரமும் மழை வரும்போல் இருந்தது.

நேரம் 8.30 ஆகிவிட்டது. வேகமாய் நடந்தால் 5 நிமிடங்களில் பள்ளியை அடைந்து விடலாம். ஒழுங்கையில் இறங்கிக் கொடிகாம வீதியை நோக்கி நடந்த போது சைக்கிள் மணிச்சத்தம் பின்னால் கேட்டது. திரும்பிப் பார்த்த அவன், சைக்கிள் நிறுத்தப்படாமலேயே சைக்கிளில் ஏறிவிட்டான். மழைவருவதற்கு முன்னால் அவனும் ராமநாதனும் பள்ளியில்.

எப்பொழுதும் அவனும் ராமநாதனும் அருகருகேதான் இருப்பாகள் பள்ளியில். வழமையாக முன்வரிசையில் இருக்கும் அவர்கள் இப்பொழுது பின்வரிசையில். ராமநாதன் முன்வரிசையில் இருப்பது பலருக்குப் பிடிக்கவில்லை. ஏன் ஆசிரியர் பலருக்கும்கூட "தடிமாடு, நீ முன்னுக்கு இருந்தால் பின்னுக்கு இருக்கிற ஆளுக்கு மறைக்கும், போ பின்னாலே"

"ஏன், உங்கடை ஊரிலே இருக்கிற பள்ளியிலே படிக்கலாம்தானே? நீங்கள் எல்லாம் இஞ்சை வந்து எங்கடை கழுத்தை அறுக்கிறீயள்" அதன் பின்னர் அவனும் ராமநாதனுடன் ஒப்புக் கொண்டான். ராமநாதன் வகுப்பில் சராசரி மாணவன்தான். ஆனால் அறிவில் சற்றுக் கூடுதலே. ஜெயகாந்தன், கணேசலிங்கன், டானியல், பொன்னீலன், அன்னா அற்மதேவா என்று தொடர்பட்டியலே உண்டு. விமலனிடம் சில புத்தகங்களைக் கொடுத்து வாசிக்கும்படி கூறுவான். கல்லூரி விவாத மேடைகளில் பங்குபற்றியுள்ளான். அதைவிட பல நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றுவான். ஒருதடவை சரஸ்வதி பூசை மண்டபத்தில் நடந்தது. அதற்கு ஆரம்பமாக கடலை, அவல் என்பன மாணவர்களும், ஆசிரியர்களும் சேர்ந்து செய்து கொண்டிருந்தனர். ராமநாதன் தேங்காய் திருவிக் கொண்டிருந்தான். இதனைக் கண்ட ஒரு ஆசிரியர் "உன்னை யார் தேங்காய் திருவவிட்டது, எழும்பு! வெளியாலே போ!" எனக் கத்தினார். ராமநாதனும் விடவில்லை. " நானும் ஒரு மாணவன்தானே? நான் ஏன் வெளியாலே போவான்?" பெரிய சண்டையே அங்கு நடந்தது. அதிபர் வந்து ராமநாதனுக்கு நல்ல அடி. ஆசிரியரை எதிர்த்து கதைத்தது என்று.

விமலன் அன்றிரவு வீட்டிற்குப் போக எட்டு மணியாகிவிட்டது. வீட்டில் பெரிய தகப்பன் நின்று கொண்டிருந்தார். "ஏன் இவ்வளவு நேரம் கழிச்சு வாறாய்?"

"Tution"

"நீ Tutionக்குப் போகவில்லை என்று இப்பத்தான் மாஸ்டர் என்னைக் கண்டு கேட்டவர்."

"இல்லை. நான் . . . . . ."

"இன்றைக்கு அவன் மாணிக்கத்தின்ரை வீட்டிலே பூசையாம். உனக்கென்ன கூட்டு அவன்ரை மகனோடு"

"எப்ப பார்த்தாலும் அவன்ரை சைக்கிளிலே இவர்"

"அவருக்கு இருக்கிற கொழுப்பு, ஆரார் வீட்டை போறதெண்டு இல்லை" இது அவனின் அம்மா.

"துளிர் விடுகிறதுக்கு இடையிலே அவருக்கு கூட்டு வேண்டியிருக்கு" இதுவும் அவனின் அம்மம்மா.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒவ்வொருத்தரும் தங்கடை பங்குக்கு சேர்த்து வாங்கிப் போட்டினம். இந்தக் காதால் கேட்டு மற்ற காதால் வெளிவிடும் பருவம். அதுவும் அவனுக்கு தேவையானதெனில் மூளையுள் செல்லும். இல்லையேல் outதான். பேச்சுக் கேட்ட சில நிமிடங்கள் அவனுக்கு கோபம் வரும். பிறகு அதெல்லாம் மறந்து போகும். அவன் வாசிக்கும் புத்தகங்கள் அவனது நட்புச் சரியென அவனுக்கு உணர்த்தியது.

அடுத்த நாள் மாலை ராமநாதனின் தந்தை மாணிக்கம் விமலனின் அப்பாவிடம் ஏதோ அலுவலாக வந்திருந்தார். வாசலில் வந்து நின்ற மாணிக்கம் "ஐயா, ஐயா . . . " வாசல் வரை வந்த அவனை வெளித் தள்ளிவிட்டு தாய் முன்னேறினாள். ஆறடி ஆஜானுபவான தலையைச் சற்றுக் குறுகி தூளில் இருந்த துண்டை எடுத்து மடியில் கட்டிக் கொண்டார். கூனிக் குறுகிக் கொண்டு நின்ற மாணிக்கத்திடம் "மாணிக்கம்! உன்ரை மகனை ஒருக்கா கண்டிச்சு வை! அவனுக்கு தேவையில்லாக் கூட்டடெல்லாம் வேண்டிக் கிடக்கு"

"சரியம்மா! நான் அவனை ஒருக்கா கண்டிச்சு வைக்கிறன். வளர்ந்த பிள்ளை தோளுக்கு மேல வந்துட்டன். உலகம் தெரியாது. நான் அவனோடு கதைக்கிறனம்மா." அவர் மௌனமாக சிந்தனையில் ஆழ்ந்தார். இது நடந்து சில மாதங்களுக்குள் படிப்படியாக விடுதலைப் போராட்டத்திற்கான கெரில்லாத் தாக்குதல்கள் ஆரம்பமாகியிருந்தன. ராமநாதனும், விமலுனும் எப்பொழுதும் அதைப் பற்றியே கதைப்பார்கள். இப்பொழுதெல்லாம் ராமநாதனுடன் சில வித்தியாசமான நண்பர்களை அவன் கண்டிருக்கிறான். ராமநாதனின் கைகளில் கூட மார்க்ஸ், லெனின், மாவோ ஆகியோரின் புத்தகங்கள் காணப்பட்டன. பின்னர் இது விமலனின் கைகளுக்கு மாறியது. மாக்ஸிம் கோர்க்கியின் "தாய்" அப்பொழுது அவர்களுக்கு அமிர்தமாய் இருந்தது.

ஒரு நாள் மாலை சுமார் எழு மணி இருக்கும். கார்முகில்கள் மெல்ல மறைந்து போர் முகில்கள் தோன்றிய காலம். குளக்கரையில் நடந்தவாறு விமலனும் ராமநாதனும் ...
"என்ன ராமநாதன் ஏதோ கதைக்க வேணுமென்றாய், பேசாமல் வாறாய்"
" இல்லை நான் . . . . ஊரை விட்டு போகலாம் என்று இருக்கிறேன்."
"என்னது? ஏனது திடீரென?"
"இல்லை, இயக்கம் ஒன்றில சேரப்போகிறன். நாளைக்கு boat போகுது."
"அப்பா உன்னைத்தானே நம்பியிருக்கிறார். திடீரென விட்டிட்டு போகப் போறன் என்கிறாய்"
"எங்கடை சூழல், சாதியை ஒருத்தரும் மதிக்கிறாங்களில்லை. அதைவிடப் பொருளாதார ரீதியாக நாங்கள் மிகவும் பின் தங்கியிருக்கிறம். சரியாக கஷ்டப்படுகிறோம். இதெல்லாம் எங்கடை மக்களின்ரை விடுதலையால்தான் தீரும்."
"இதை நீ சரியெண்டு நினைக்கிறீயோ?"
"ஓம், எங்கடை போராட்டங்கள் நடக்கைக்கே படிப்படியாக இந்த சாதி, சீதனம் மற்றப் பிரச்சினைகள் மறைஞ்சு போகும்"
"இந்தச் சண்டையில கூட சாதியில கீழானவைதானே கூடப்பேர் இருக்கினம்"
"அது சரி. ஆனால் என்னையும் உன்னையும் போல படிப்படியாக எல்லோரும் மாறிவிடுவினம். ஏனிந்த ஊரில் பல பேர் இப்படித்தானே!"

அவன் தரையில் இருந்த கற்களை எடுத்து நீரினுள் எறிந்த வண்ணம் இருந்தான். முகத்தில் எந்தவித சலனமும் இல்லை. விமலன் ராமநாதனின் தோள்களில் கையை வைத்து அவனது முகத்தை திருப்பி "என்ன யோசனை?"
"ஒன்றுமில்லை, வீட்டுக்காரரை, அம்மா, தங்கச்சியை விட்டு விட்டுப் போறது கஷ்ரமாக இருக்குது"
கண்களில் இருந்து கண்ணீர் மெல்ல சிந்தியது. சில துளிகள் குளத்தினுள் விழுந்து நீருடன் கலந்தன. தூரத்தில் ஆட்டுக் குட்டியொன்று கத்தியது. இவர்கள் சாய்ந்து நின்ற மரம் சற்று ஆடவே காகங்கள் எழுந்து பறந்தன. இப்பொழுது ராமநாதனின் முகம் இறுக்கமாயிருந்தது. மெல்லிய குரலில் "தீர்மானிச்சாச்சு. இனிப் போக வேண்டியதுதான்" என்றான்.
விமலன் வீட்டு ஒழுங்கை வரும்வரை இருவரும் மௌனமாகவே சைக்கிளில் சென்று கொண்டிருந்தவனர். விமலன் சைக்கிளை நிறுத்தி அவனது முகத்தை ஒரு தடவை பார்த்து விட்டு சைக்கிளை ஒழுங்கையினுள் திருப்பினான். ராமநாதனின் சைக்கிள் விமலனை விட்டு விலகித் தூரப் போய்க் கொண்டிருந்தது.
இது நடந்து சில நாட்களின் பின்னர் மாணிக்கம் விமலனது வீட்டு வேலி அடைக்க வந்திருந்தார். "என்ன மாணிக்கம் மகன் போயிட்டானா?"
"ஓம் ஐயா! இவன் இல்லாம பெரிய கஷ்டம். தாய் படுத்த படுக்கை.
என்ன செய்கிறது இன்னும் இரண்டு பெடியங்களும், மூன்று பெட்டைகளும் இருக்கிறது. என்ன செய்யப் போகிறனோ தெரியாது"
"உனக்கேன் இந்தத் தேவையில்லாக் கூத்துகள் பள்ளியிலேயும் இவன் குழப்படியாம்."



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"என்ரை பெடியனை படிக்கட்டும் என்று உங்கடை பள்ளிக்கூடத்துக்கு அனுப்பினான். அவனும் உங்கடை பெடியளோடை போயிட்டான்."

"இனி நடந்ததை நினைச்சு பயனில்லை. ஆகவேண்டியதைப் பார் மாணிக்கம்"

"ஓம் ஐயா"

அவரது குரல் பலவீனத்துடன் ஒலித்தது. கைகள் ஓலையை கயிற்றால் இறுக்கிக் கட்டுவதில் மும்மரமாய் இருந்தன. காகம் ஒன்று சற்றுத் தள்ளி எச்சமிட்டுவிட்டுப் பறந்தது.

இது நடந்து சில நாட்களின் பின்னர் விமலனும் படகில் ஏறிவிட்டான். அடுத்த நாள் விமலனின் வீட்டில் கூச்சல், கத்தல். மாணிக்கமும் ராமநாதனும் அவர்களது வாயில் சொற்களால் விளையாடப்பட்டார்கள். விமலனும் பயிற்சிக் காலம் முடிந்து கொண்டிருந்த பொழுது விமலனுக்கு பயிற்சியளிக்க ராமநாதன் வந்திருந்தான். விமலனின் சந்தோஷசத்துக்கு அளவேயில்லை. இருவரும் ஒரே தளத்தில். விமலனின் பயிற்சி முடிந்த பின்னர் ராமநாதன் நாட்டிற்கு திரும்பிவிட்டான்.

ஒரு நாளைப் பார்க்க அவனது தாய், தந்தை, சகோதரி வந்திருந்தர்கள். விமலனின் அப்பா "இதை விட்டு வா! எத்தினை பேர் இதிலே சாகினம். ஏன் வீணாகக் கஷடப்படுகிறாய்? நான் உன்னை வெளிநாட்டுக்கு அனுப்புகிறன்"

விமலன் மௌனமாகவும் இறுக்கமாகவும் தலையாட்டி மறுத்துவிட்டான்.

"நீயில்லாமல் வீடே வெறிச்சோடிக் கிடக்கு. எவ்வளவு கலகலப்பாய் இருந்த வீடு" இது தாய்.

"நாட்டிற்கு வந்தாக் கட்டாயம் வீட்டை வாறன்" விமலன் இவர்களை நினைத்து மனத்துக்குள் சிரித்துக் கொண்டான். இந்த அம்மாமாரும் அப்பாமாரும் எப்பவும் இப்படித்தான்.

தலைமையின் பொறுப்பின்மை, உள்போராட்டம், உட்கட்சிக் கொலைகள், வரட்டுப் பிடிவாதங்கள், சர்வாதிகாரப் போக்கு, பதிலில்லாத வினாக்கள், பரிதாபமான நண்பர்கள் . . . விமலன் தந்தை காட்டிய வழியில் சென்று விட்டான். இதற்கிடையில் field ஒன்றின் போது ராமநான் வலது கையை இழந்து விட்டான் என்ற செய்தி கிடைத்தது. விமலனுக்கு ராமநாதனை சந்திக்க வேண்டும் என்ற ஆவல் இருந்த போதும் அவனால் முடியவில்லை. விமலன் சென்னையின் புறநகர்ப்பகுதி வீடொன்றில் வசித்தபோது அவனைச் சிலர் தேடியலைந்தனர். இதனால் விமலன் மேலும் தலைமறைவாகத் தொடங்கினான்.

XXXXXXXXXXXXXXX XXXXXXXXX XXXXXXXXXXXXXXXXXX

தொடர்ச்சியாக விழுந்த பனியைப் பார்க்க வியப்பாய் இருந்தது. வெள்ளை வெளேரேன்று என்ன மாதிரி பளிச்சிடுகிறது. நிலத்திலும் விடிவெள்ளிகள். terminal 2வில் விமலன் தனது பெற்றோரை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். தொடர்ச்சியாக கொட்டிய பனி காரணமாக இரண்டு runways மாத்திரம் function பண்ணுவதால் விமானம் சில மணி நேர தாமதம். வீடு திரும்ப மனமில்லை. இந்த snowவிற்குள்ள போய்விட்டு வாறதுண்டால் பெரிய கரைச்சல். கோப்பியுடன் அமர்ந்தவனின் நினைவுகள் அந்தச் சத்தத்தைக் கேட்டவுடன் மீண்டன.

"அங்கே! அண்ணா இருக்கிறார்"

"என்ன அப்பா அம்மா சுகமாக வந்துட்டியள், ஏதாவது கரைச்சல்?"

"இல்லை, ஒரு பிரச்சினையும் இல்லை. இடைக்கிடை passport ஐ ஒரு மாதிரி பார்ப்பினம்"

"ஓம், சரி வாங்கோ போவோம். flight late என்ற படியால் நான் இதிலே இருந்திட்டன். உங்கடை flight வந்ததைக் கவனிக்கவில்லை. அது சரி கோப்பி ஏதாவது வேணுமோ?"

"ஏன் வீடு தூரமோ?"

"இல்லை. high way எடுத்தால் 20 நிமிசம்தான்."

"மறுநாள் காலை விமலன் shopping முடித்து வீட்டினுள் நுழைந்த போது தாய் தகப்பன் சகோதரி மச்சாள் ஹாயாக இருந்து ஊர்ப்பிரச்சினைகளை அளவளாவிக் கொண்டு தேனீர் அருந்திய வண்ணம் இருந்தனர். இவர்கள் வந்ததிலிருந்து விமலனின் ஆர்வமெல்லாம் ராமநாதனைப் பற்றி அறிய வேண்டும் என்பதே. சந்தர்ப்பங்கள் சரியாக அமையாததால் அவன் தனது ஆவலை அடக்கிக் கொண்டான். அவன் இந்த நாட்டில் காலடி எடுத்து வைத்த நாளிலிருந்து இன்றுவரை அவ்வப்போது அங்கிருந்துவரும் நண்பர்கள் மூலமும் நெருங்கிய சிநேகிதர்களின் கடிதங்கள் மூலம் அவன் ராமநாதனைப் பற்றி அறிந்திருந்தான்.

இறுதியாக அவன் கேள்விப்பட்டது "ராமநாதன் இயக்கத்தில் இல்லை" என்பது. இது எவ்வளவு தூரத்திற்கு சரியானது என்பது கேள்விக்குறியாக இருந்த போதும் சாத்தியங்கள் இல்லை என்பதற்கில்லை என மனதுக்குள் நினைத்துக் கொண்டான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தேனீர் கோப்பையுடன் அறையினுள் நுழைந்த போது அம்மா குசினியை நோக்கிச் செல்வதை அவதானித்தான். "அம்மா இன்றைக்கு நீங்கள் சமைக்க வேண்டாம், relax எடுங்கோ. நாளையிலிருந்து உங்கடை சமையலை ஒரு கை பார்க்கிறம்."
"என்ன சரியாய் மெலிஞ்சு போனாய்"
விமலன் மனத்துக்குள் சிரித்துக் கொண்டான். அவனைப் பார்த்த அனைவரும் "என்ன நல்லா உடம்பு வைச்சிருக்கு" என்றுதான் கேட்கிறவை. formality கேள்வியாய் இருக்கும், அல்லது இந்த உடம்பு காணாத என்ற வாஞ்சையால் இருக்கும்.
"அது சரியம்மா ஏன் உடனே sponsor பண்ணு எண்டு சொல்லி கொழும்பில வந்திருந்தனியள்."
"சத்தம் போடாமல் பேசு. உவள் உன்ர தங்கச்சி இயக்கத்துக்கு போறது எண்டு நிண்டவள் அதுதான்."
"ஊரிலே என்ன புதினம்?"
"உனக்குத் தெரியாததோ! மயில்வாகனத்தார் செல்லடித்துப் போயிட்டார், குணம் மாஸ்டர் ........"
விமலனது காதுகளுக்கு அவை எட்டவில்லை. அங்கே வந்த அவனது தந்தை "உரையாடல் நீ ஏன் உதுகள் சொல்லுகிறாய், அவன் ராமநாதனைப் பற்றிக் கேட்கிறான். அதை நான் சொல்லுகிறன். அவனைப் போட்டுட்டாங்கள். அவன் செய்த அட்டகாசம் . . . ."
"எங்கடை சனத்தின்ர வீடுகளுக்கு வந்து அவர் செய்கிற அட்டகாசம். ஒற்றைக் கையோட எங்கடை ஆட்கள் எத்தினை பேரை போட்டுட்டான்" இது அவனின் அம்மா.
விமலன் தொடர்ந்து கேட்க மனமில்லாமல் அறைனுள் சென்றுவிட்டான். வெளியே இன்னமும் பனி கொட்டிக் கொண்டிருந்தது. கட்டிலில் சாய்ந்து கண்ணை மூட முயன்ற போது
"அண்ணா இந்த snow எவ்வளவு வடிவாக இருக்குது"
"உனக்கு snow என்றால் பிடிக்குமோ?"
"ஓ! பார்க்க நல்லாக இருக்குது."
"வாவன் அப்ப வெளியில போட்டு வருவம்."
Honda escort ன் வேகத்தை அதிகரித்தான்.
"அண்ணா, slow ஆய் போ"
"ராமநாதனுக்கு நடந்தது"
"ஏதோ, பிழை செய்தவர் எண்டு சொல்லி போட்டிட்டாங்கள்"
"என்ன பிழை?"
"என்ன அண்ணா, இயக்கத்தில் இருந்திட்டு வந்து இப்படிக் கேட்கிறாய்"
"எங்களட ஆக்களுக்கு சரியான சந்தோஷம்" என அவள் தொடர்ந்தாள்.
"ராமநாதனின்ரை குடும்பம்?" என்ற விமலனின் கேள்விக்கு கண்ணாடி வழியே வீதியைப் பார்த்த வண்ணம்
"சரியாகக் கஷ்ரப்படுகினம். அது ராமநாதன்ரை குடும்பம் மாத்திரமல்ல. அவையின்ரை சூழலும்தான். ஒவ்வொரு நாளும் உழைச்சு சாப்பிடுகிறதுகள் செல் அடிச்சால் வெளியாலை வெளிக்கிடேலாது. சாமானெல்லாம் சரியான விலை. அதுகளுக்கு சரியான கூலியும் கிடைக்கிறதில்லை. ஏதோ நாங்கள் காசு வைச்சிருக்கிறம். வெளிநாட்டுக்கு வெளிக்கிட முடியாமல் சரியாகக் கஷ்ரப்படுதுகள்."

கார் மௌனமாக விரைந்து கொண்டிருந்தது.
"அண்ணா எங்கே போறாய்?" சுயநினைவுக்கு வந்த விமலன் காரை slow ஆக்க
"அண்ணா மாமா வீடு தூரமோ? ஒருக்கா அங்கை போவாமோ"
"அதுக்கென்ன" கார் highway ஐ நோக்கி திரும்பியது.
"ராமநாதன், என்னைக் கண்டு உன்னைப் பற்றி விசாரிச்சவர், உன்ரை விலாசமும் கேட்டவர்"
"ராமநாதன்ரை குடும்பத்தின்ரை விலாசம் என்ன?"
"மாணிக்கம் எண்டு போட்டால் போகும், ராமநாதன் செத்த அண்டு மாணிக்கம்
கத்தின கத்தல். இப்பவும் காதுக்குள்ளை கேட்குது அண்ணா ........., ராமநாதன் முற்று முழுதாக சரியான ஆள் எண்டு சொல்லேலை. ஆனால் சுடுகிற அளவுக்கு பிழை விடேல்லை."
போராட்டம் ஓரளவுக்காது மாற்றத்தைக் கொடுத்தது என்றால் இளம் பிள்ளைகள்தான். "அது சரி. அண்ணா life எப்படி ? என்று கேள்வி"
"ராமநாதன்ரை குடும்பத்திற்கு ஏதாவது உதவி செய்ய வேணும், இன்றைக்கே money order எடுக்க வேணும்."
"சரி அண்ணா, நீ ஒரு ராமநாதன் குடும்பத்துக்கு உதவி செய்வாய், ஆனால் அங்கை இப்படி ஆயிரம், ஆயிரம் குடும்பங்கள் இருக்கினம்."
காரின் வேகம் 90லிருந்து 100ஐ நோக்கி நகர்ந்தது. கொட்டும் snowம் அதிகமாகத் தொடங்கியது. விளம்பரப்பலகையில் காலநிலையும் விளம்பரமும் மாறி மாறி ஓடிக் கொண்டிருந்தது. Lotto விளம்பரம் ஒன்று "Can you imagine the freedom?"


ரதன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# யுத்தநிறுத்தமும் யுத்தமும்



இலட்ச வருட வரலாற்றில்,
உலகத்தில் வாழ்வதற்கான,
உன்னுடைய சொற்ப நேரம் இது
உன்னுடன் சேர்ந்து வாழ்வதற்கான
என்னுடைய காலமிது
எமக்குள் ஏன் சண்டை
தோழனே கை கொடு
ஆயிரமாயிரமாண்டுகளாய்
அழியாமல் பாதுகாத்து,
எமது பிறப்புக்கும் வாழ்வுக்கும்
சுத்தமான பூமியை விட்டுத் தந்த
எமது முன்னோர்க்கு நன்றி சொல்வோம்.

இருநூறு வருடத்தில்
ஏனிந்தச் சீரழிவு!
கைத்தொழில் புரட்சியாம்.
கண்ட இடமெல்லாம்
பூமியைத் துளைத்தெடுத்த கனிமங்கள்,
மீண்டும் இயற்கையில் சேரமுடியாத
சேர்வைக் குப்பைகளாய்,
பூமியின் மேற்பரப்பில் . . . .

புறப்படு நண்பனே! எங்கள் பங்கிற்கு
ஏதாவது ஒரு குப்பை மேட்டை
எரித்துச் சுத்தப் படுத்துவோம்.
இல்லை!
இயற்கை வட்டத்தில்
இணையாத எதையும்
பாவிக்காமல் விடுவோம்.

உல்லாச வாழ்வு பெறும் ஒரு சாரார்
உலக வளம் யாவும் உட்கொண்டும்;
போதவில்லையாம்!
பொருளாதாரச் சுருக்கமாம்!
இன்னும் நிறைய தொழிற்சாலைகள் வேண்டுமாம்
உலக வழங்களைப் பயன்படுத்த, வேலை வழங்க . . .
சூழல் மாசுபடுகிறது என்கிறாயா?
மறந்துவிடு!

மரண ஓலமிடும் மறுசாரரை
சமகாலத்தில் வாழும் சகோதரரை
சிந்திக்க மறந்தவர்கள்.
வருங்கால மைந்தர்க்கு எதையும்
விட்டுவைக்கவா போகிறார்கள்.

ஓ! நண்பனே சண்டையிடு.

அவர்களுடன் சண்டையிடு.
என்னுடன் வேண்டாம்.
இழக்க எதுவுமில்லாத
என்னுடன் வேண்டாம்!


விதுரன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கருக்கலைப்பு உயிர்க் கொலையா?



அண்மையில் கருக்கலைப்பு தொடர்பான பிரச்சினையினால் சமர் (பிரான்சு) சஞ்சிகையினைச் சார்ந்த நண்பரொருவர் அச்சஞ்சிகைக் குழுவினால் வெளியேற்றப்பட்டார். இப்பிரச்சினையின் உள்ளார்ந்த விடயங்கள் எமக்கு முழுமையாகத் தெரியாவிட்டாலும் எம்மில் சிலரிடையே கருக்கலைப்புத் தொடர்பான வாதப் பிரதிவாதங்களை உருவாக்க காரணமானது. இங்கே கருக்கலைப்பு உயிர்க் கொலைக்கு ஒப்பானது என்னும் வாதத்தை ஏற்றுக் கொள்ள முடியாதுள்ளது.

முதலில் உயிர் என்றால் **என்ன?**
உயிர் என்பது பொரு**ளியல் தன்மை கொண்டதா?**
அப்படியொன்று **உள்ளதா?**
என்பது போன்ற **விடயங்களை அறிதல்** நன்று.

**உயிர்க் கொலை என்றால் என்ன?**

பூமியின் தோற்றம் **இறைவனால்** ஏற்பட்டது என்பதை நிராகரித்தால்! உண்மையாக எப்படி ஏற்பட்டது? தூரத்தால் எல்லையற்ற அண்ட வெளியிலே **காலத்தால்** எல்லையற்ற அணுக்களின் சேர்க்கையே பூமியின் உருவம். குறிப்பிட்ட கால எல்லைவரையிலே பூமியின் மேலோட்டிலே **சேதன இழையங்கள்** தோன்றவில்லை. அசேதனக்கூட்டுப் பொருட்கள் மட்டுமே காணப்பட்டன. ஒருகால எல்லையின் பின்னரே சேதன **இழையங்களும்**, பூமியின் மேலோட்டில் ஓசோன் படையும் உருவாகின. பின்னர் தோன்றிய சேதனப் பொருட்கள் முதலிலிருந்தே **இருந்து** கொண்டிருக்கிற அசேதனப் பொருட்களிலிருந்து தோன்றின. என்றாலும் குறிப்பான விடயங்களில் அவை மாறுபடுகின்றன.

* உட்கொள்ளல், சமிபாடு, **கழிவகற்றல், சுவாசம்** போன்ற தொழிற்பாடுகளிலும்
* தம்மைத் தாமே இனவிருத்தி செய்தலிலும்
* புறவயமான இயங்குதலிலும் மாறுபடுகின்றன

சேதனப் பொருட்களின் இவ்வித்தியாசங்கள் தோன்றுவதற்கான பிரதான காரணம் அமினோ அமிலங்களிலான **சேர்க்கைகளின்** தேவைகளின் விளைவேயாகும். கூர்ப்பிலே சேதன சேர்வைகள் தோன்றிய ஆரம்ப காலங்களில் காணப்பட்ட **அமினோஅமிலச்** சேர்வைகள் இன்று செயற்கையாகவும் உருவாக்கலாம் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயத்தில் சேதன **இழையங்கள் உயிர் சார்ந்த பொருட்களாகவும், அசேதன இழையங்கள் உயிரற்ற** பொருட்களாகவும் கொள்ளப்பட்டது. இங்கே **உயிரென்பது பொருட்களுக்கு புறவயமாக இருந்து செயற்படுகின்றது** என்பது பொய்யாகும். எனவே இதனை பொருட்களின் அகக் காரணிகளைக் **கொண்டுதான் பார்க்கவேண்டும்.**

சேதனப் பொருட்களில் **உட்கொள்ளல்**, சுவாசம், சமிபாடு, **கழிவகற்றல்**, போன்ற **தொழிற்பாடுகள் நடைபெறுவது** போன்று **அசேதனப்** பொருட்களிலும் மாறுபட்ட முறையில் இடைத்தாக்கங்கள், சக்தி உள்ளெடுத்தல், **வெளிவிடல்**, விளைபொருட்களின் தோற்றம், புதிய சேர்வைகள் தோன்றல் என்பனவும் நடைபெறும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சேதன இழையங்களின் வளர்ச்சி, இனப்பெருக்கம் என்பன நடைபெறுதல் போன்று அசேதனச் சேர்வைகளிலும் மட்டுப்படுத்தப்பட்ட, நீண்டகாலம் எடுக்கின்ற நடைமுறைகள் காணப்படுகின்றன.

சேதனப் பொருட்களைப் போன்று புறவயமான அசைவைக் காட்டாத போதிலும் அசேதனப் பொருட்களும் தங்களுக்குள்ளே அதிர்ந்து கொண்டும், இயங்கிக் கொண்டும்தான் இருக்கின்றன. இவ்வசைவுகள் சாதாரண கண்களுக்கு தெரியாத போதிலும் இயக்கமென்பது இரண்டிற்கும் பொதுவானதொன்றாகும்.

பொதுப்படையாகக் கூறுவதானால் அசேதனப் பொருட்களின் விரைவுபடுத்தப்பட்ட, விருத்தியடைந்த செயற்பாடுகளே சேதனப் பொருட்களில் காணப்படுகிறது. எனவே அசேதனப் பொருட்களிலும் பார்க்க விருத்தியடைந்து மாறுபட்டு சேதனப் பொருட்கள் காணப்படுகின்ற போதிலும் உயிரென்கிற புதிய வடிவம் எதுவும் சேதனப் பொருட்களின் உட்செல்லவில்லை.

காபன் சேர்வைகளிலான மூலக்கூறுகளையே பொதுவாக சேதனப் பொருட்களாக பிரிக்கின்றோம். சேதனப் பொருட்களாலான தாவரங்கள், விலங்குகள், மனிதர்கள் போன்றவற்றிடையே உள்ள பிரதான வேறுபாடு என்ன? உயிரியல் கூர்ப்பின் ஓர் நிலையில் நரம்பு மண்டலத்தின் தோற்றமானது மிகவும் முக்கியமானது. ஆரம்பத்தில் வெறும் குழலை அறியும் உணர்வுப் கூம்புகளாக மட்டுமே காணப்பட்டது. (ஊர்வன சிலவற்றில்) விருத்திப்போக்கில் நரம்பு மண்டலம் முண்ணாணையும் மூளையையும் விருத்தியாகப் பெற்ற பாலூட்டிகள் தோன்றின. ஆகவே இவற்றில் சூழல், சமூகம், போன்றவற்றுடன் தொடர்புபடுகின்ற சிந்தனை உருவாகின்றது. இது மிகச் சிறப்புற அமைவது மனிதனில் மட்டும்தான்.

ஓர் குழந்தை பிறந்து சில நாட்களிலே தன் தாய், தகப்பன், உறவினர் யார் யார் என அடையாளம் கண்டு கொள்கிறது. எனவே பிறந்து சிறிது காலத்திலேயே சூழலுடனும், சமூகத்துடனும் தொடர்புபடுகின்றது. பூமியுடன் தன்னை அறிமுகப்படுத்திவிடுகின்றது. இதன் போதே ஒரு கருவானது முழுமையான மானிட வடிவத்தை எய்துகின்றது. இக்கால கட்டத்தினை குறிப்பாக இன்னநாள், இன்னநேரம் என்று குறிப்பிட்டுச் சொல்லவேண்டும் என்பதில்லை. இந்த நிலைக்கு சற்றுமுன்னரோ, சற்றுப் பின்னரோ, அண்மைக் காலப்பகுதியிலோ அல்லது பிற்காலப் பகுதியிலோ குழந்தையினை அழிப்பதற்கு எவருக்கும் உரிமையில்லை. இந்த நிலைக்குப் பின்னர் நடைபெறும் குழந்தை அழிப்பே கொலைக்கு ஒப்பானதாகும்.

குழந்தை உருவாக்கத்தின் மிகவும் பிரதானமான நிலை கருக்கட்டல் ஆகும். ஆண்களின் விந்துக்கள் பெண்களின் சூல் முட்டையில் பதியும் போது கருக்கட்டல் ஏற்படுகிறது. கருக்கட்டலின் பின்னர் கருவின் வளர்ச்சியில் பலநிலைகளின் ஊடாகவே குழந்தையாகிறது. ஆனால் எந்த வளர்ச்சி நிலையிலும் உயிர் என்கிற பிறிதான விடயம் உட்புகுதல் நடைபெறுவது இல்லை.

மேலும் தாவரங்களிற்கும் விலங்குகளிற்கும் இடையேயுள்ள பிரதான வித்தியாசம் புறவயமான அசைவும் செயற்பாடுமே ஆகும். அத்துடன் விலங்குகளுக்கும் உயிர் என்ற ஒன்று உள்ளதாக கருதப்பட்டால் அது தாவரங்களுக்கும் பொதுவானதாகவே கருதப்படும்.

இதுவரை கூறப்பட்ட விடயங்கள் உயிரென்பது பற்றியே. அதாவது பொருட்களுக்கு அப்பாற்பட்ட புறநிலையில் உயிரென்ற ஒன்று உண்டு என்பது கற்பனாவாதமானது. உணவிற்காகவோ அல்லது வேறு காரணங்களிற்காகவோ நடைபெறும் தாவர அழிப்பு விலங்கு அழிப்பு என்பன உலகத்தின் இயற்கைச் சுற்றுவட்டத்தோடு உள்ள ஒன்று. இவை அவசியங்கள், தேவைகளை ஒட்டியே நடைபெறுகின்றன. (இயற்கைச் சுற்றாடலியல் பாதிப்படையும் வகையில் இன்று நடைபெறும் தாவர, விலங்கு, இயற்கை அழிப்புகள் மனித சமூகத்தின் அவசியத்தை முன்னிட்டு நடப்பவை அல்ல) இயற்கை சுற்றுவட்டத்தோடு நடைபெறும் மேற்படி நிகழ்வுகள் நடைபெறாவிட்டால் இயற்கைச் சமநிலை குழப்பமடையும்.

உயிர் என்ற ஒன்று இல்லையென்று ஏற்றுக் கொண்டு அவசியங்கள், தேவைகள் என்று பார்த்தால் ஆபிரிக்க, ஆசிய நாடுகளில் பட்டினியால் வாடும் மக்களை கொலை செய்து விட்டால் அவர்கள் பட்டினியால் வருந்தத் தேவையில்லைத்தானே என்னும் வாதமும் முன்வைக்கப்பட்டது. இவ்விடயத்தில் தேவையானது, அவசியமானது எது என்பதினைக் கண்டறிய வேண்டும்.

அதாவது அபிவிருத்தியடையாத நாடுகளில் பட்டினி பற்றாக்குறைகளுக்கு பிரதான காரணங்கள் மேலாதிக்கம், சுரண்டல், நவகாலனித்துவம் போன்றவையே! இங்கே தேவை, அவசியம் என்பது இச்சுரண்டல் ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடுவதே என நிர்ணயிக்கப்படுகிறது. ஆனால் கருக்கலைப்பு என்பது ஒரு பெண் தன் உடல் சார்ந்த விடங்களைத் தீர்மானிப்பதற்குப் பெற்ற தனிமனித சுயநிர்ணய உரிமையாகும். அத்தோடு குறித்த கால இடைவெளியில் அல்லது குறித்த எண்ணிக்கையில் குழந்தைகளைப் பெறுவது என்பது பெண்ணின் உடல், உள ஆரோக்கியம் தொடர்பான விடயங்களாகும். அவற்றைத் தீர்மானிப்பது அவளின் உரிமையும் கூட.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மேலும் குழந்தை வேண்டப்படாத பட்சத்தில் கருத்தரித்தல் ஏற்படாத வகையிலேயே முதலிலேயே தடுப்புநடவடிக்கைகள் எடுக்கப்பட்டால் நல்லது என்னும் வாதமும் உண்டு. ஆனால் சமூக சூழ்நிலை, கலாச்சாரப் பிரச்சினை, பாலியல் கல்வி பற்றிய போதிய அறிவின்மை என்ற காரணங்களால் குழந்தை வேண்டப்படாத பட்சத்திலும் தடுப்பு நடவடிக்கைகளுக்கு அப்பாற்பட்ட நிலையில் கருத்தரிப்பு ஏற்பட்டு விடுகிறது. குறித்த கால எல்லைக்குள் கருக்கலைப்பு செய்யமுடியாத சூழ்நிலையும் ஏற்பட்டு விடுகின்றது.

உதாரணமாக புலம்பெயர்ந்த நாடொன்றின் ஒரேயொரு அறை வசதி கொண்ட சிறிய வீட்டில் தமக்கையின் குடும்பத்துடன் வசிக்க வேண்டிய சூழ்நிலை இளம் தமிழ்ப் பெண்ணொருத்திக்கு ஏற்பட்டது. அக்காவும், தங்கையும் இலங்கையில் சாதாரண பெண்கள் பெறும் கல்வியறிவைக்கூட பெற்றிருக்கவில்லை. அக்காவின் கணவரின் மூலம் தங்கை கருத்தரிக்க வேண்டி ஏற்பட்டது. அக்கா வீட்டில் இல்லாத தருணங்களில் இது நடந்துள்ளது. பின்னர் விஷயம் வெளியே தெரிந்தால் அக்காவும், தங்கையும், குழந்தைகளும் வீட்டை விட்டு வெளியேற்றப்படுவார்களென மிரட்டலும் நடைபெற்றது. விஷயம் வெளியே தெரிந்தபோது காலம் கடந்து விட்டது. அக்காவும் தங்கையும் புலம்பெயர்ந்து வாழும் நாட்டின் சட்டதிட்டங்களைப் பற்றியோ பாதிக்கப்பட்ட பெண்களிற்கான உரிமைகள் பற்றியோ அறிய வாய்ப்பு இல்லை. இவற்றை அறிந்தவர்களுடன் கதைத்து தெரிந்து கொண்ட போதும் அவர்களின் மரபுக் கலாச்சார மனோபாவம் காரணமாக ஆண்களை எதிர்க்கத் துணிவற்று இருந்தார்கள். அக்காவின் குழந்தைகளின் எதிர்காலம் பற்றியும் பயந்தார்கள். இறுதியில் இரகசியமாகக் கருக்கலைப்பு நடைபெற்றது.... தொடர்ந்தும் சிறிய வீடு .....! தனிமை .....! எப்படி புலம்பெயர்ந்த எம்மில் சிலரின் வாழ்வு!

மேலும் இக்கதை ஒரு புறமிருக்க இக்குறிப்பிட்ட உதாரணச் சூழ்நிலை போன்று பெண்களுக்கு எதிரான பல சந்தர்ப்பங்கள் நடை—பெற்றுள்ளன. இங்கே சம்பந்தப்பட்ட ஆணிற்கு எதிரான நடவடிக்கைகள் என்பன ஒருபுறமிருக்க பெண்ணின் எதிர்காலத்தையொட்டி கருக்கலைப்பு அவசியமாகின்றது. இக்குழந்தையினை எப்படி ஏற்றுக் கொள்வது. பிறக்கும் ஒவ்வொரு குழந்தையையும் சமுதாயத்தின் குழந்தையாகப் பராமரிக்கும் உச்ச சமூகக் கட்டமைப்பிலா நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்?

இங்கே ஒவ்வொரு தனிமனிதப் பிரச்சினைகளுக்கும் பட்டினியால் வாடும் நாடுகளின் சமூக பிரச்சினைகளிற்குமான தீர்வினை பிரித்தே பார்க்கவேண்டும்.

உடலிற்கு வெளியே உயிரென்ற விடயம் நிராகரிக்கப்படுவதால் தாயின் உடலுடன் சிசுவின் தொடர்பு நீடித்திருக்கும் வரையில் அதாவது சிசு பிரசவிக்கப்படும் வரையில்; சிசுவானது தாயின் அங்கங்களில் ஒன்றாகவே கருதவேண்டும். அதாவது தாயின் கருப்பையுடன் சேர்ந்த விடயமாகவே அடையாளம் காணலாம். தனது அங்கங்களிலுள்ள நன்மை தீமைகளை தீர்மானிக்கும் உரிமை நூறு வீதம் தாய்க்கே உண்டு. குழந்தை அவளது அங்கமாக இருக்கும் வரையில். குழந்தையினை பற்றிய தீர்மானம் தாயின் உரிமையாகும்.

உலகளாவிய அளவில் பல சந்தர்ப்பங்கள் பெண்களுக்கு விருப்பமற்ற முறையில் கருத்தரிக்க வாய்ப்புண்டு. உதாரணமாக

— மேலதிகாரிகளாலும், முதலாளியாலும் தொழிற்சாலையில் வேலை செய்கின்ற பெண்களுக்கு
— தோட்டங்களில், வீடுகளிலும் எஜமானால் வேலைக்காரப் பெண்களுக்கு
— குழந்தையினை சுமப்பதும் கஷ்டப்படுவதும் பெண்தானே என்கின்ற அசட்டை கொண்ட கணவர்களால் மனைவிகளுக்கு
— காமவெறி கொண்ட சிப்பாய்களாலும், அரச படைகளாலும் எதிர்த்தரப்பாகப் கொள்ளப்படும் பகுதியில் உள்ள பெண்களுக்கு
— பொருளாதாரத்திற்காக தன் உடலை விற்கும் விபச்சாரிகளுக்கு
— மதம், கலாச்சாரம் என்னும் கட்டுக் கோப்புக்குள் தன்னை கணவர்களிடம் அர்ப்பணிக்கும் பெண்களுக்கு

என தன் விருப்பின்றியே கருவைச் சுமக்க வேண்டிய பெண்களுக்கு எந்தக் கட்டத்திலும் கருக்கலைப்புச் செய்ய உரிமை உண்டு. மேலும் ஓர் ஆணிற்கோ, பெண்ணிற்கோ பாலியல் தேவையோ, உடலுறவோ அவசியமானதாகும். ஆனால் இன்றைய சூழ்நிலையில் கலாச்சாரம், பணவசதி, அந்தஸ்து போன்ற காரணங்களால் இயல்பான முறையில் ஆண், பெண் என்கின்ற எதிர்ப்பால் துணையை தேடிக் கொள்வது சாத்தியமற்ற சூழ்நிலைகள் உண்டு. இந்நிலையில், பெண்கள் பாலியல் உறவிற்காகத் தூண்டப்பட்டு அவசியமற்ற சூழலில் கருத்தரிக்கும் வாய்ப்பும் உண்டு. இன்றைய இயந்திர உலகில் அநேகமான, தொலைதொடர்புச் சாதனங்களும், வியாபார விளம்பரங்களும் இப்படிப்பட்ட சூழலை உருவாக்க தூண்டி விடுகின்றன. எனவே இக்கருவை அழிப்பதற்கும் பெண்களுக்கு உரிமை உண்டு.

வெறும் மனிதாபிமான கண்ணோட்டத்துடன் இப்பிரச்சினையை அணுகுவது விஞ்ஞான பூர்வமற்றது. எனவே மொத்தத்தில் சிசுவானது தாயின் உடலை விட்டு வெளியேறும் வரையில் தாயின் உடலின் அங்கமாகவே கருதவேண்டும். தனது உடல்பற்றிய முடிவு எடுக்கும் முழு உரிமையும் பெண்ணிற்கே உண்டு.


சலீம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சண்........



இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுக்காரியதரிசியும் இடதுசாரிச் சிந்தனையாளருமான சண்முகதாசன் தனது 74வது வயதில் இங்கிலாந்தில் காலமானர்.

1919ம் ஆண்டு மானிப்பாயில் பிறந்த சண்முகதாசன் ஆரம்பக் கல்வியைக் மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் உயர் கல்வியை கொழும்பு யோசப் கல்லூரியிலும் பயின்றார். 1943ம் ஆண்டு பல்கலைக் கழக படிப்பை முடித்த சண்முகதாசன் இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தின் முழுநேர ஊழியனாக தன்னை இணைத்துக் கொண்டார்.

1957ல் இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தின் பொதுச் செயலாளராக தெரிவு செய்யப்பட்ட சண் இலங்கை அரசின் ஒடுக்குமுறைகளுக்கு எதிராக தொழிற்சங்கங்களினுடாக தொழிலாள வர்க்கத்தினரை அணிதிரட்டி பல போராட்டங்களை நடத்தியதில் முதன்மைப் பாத்திரம் வகித்தார். ஆனாலும் கட்டியெழுப்பிய தொழிலாளர்களை புரட்சிகர ஆயுதபாணியாக்குவதற்கு எவ்வளவு தூரம் உழைத்தார் என்பதில் விமர்சனத்திற்கு உள்ளாக வேண்டியவராகிறார்.

தமிழ்ப் பிரதேசங்களின் பெரும்பான்மையினரான வெள்ளாளரினால் தாழ்த்தப்பபட்ட சாதியினர் மீதான ஒடுக்குமுறைக்கு எதிராக பல போராட்டங்களுக்கு தலைமைச் சக்தியாக விளங்கியவர். மாவோயிச சிந்தனையாளரான இவர் 1965ல் நடைபெற்ற பாராளுமன்ற தோர்தலில் கொழும்பு மத்தியில் கம்யுனிஸ்ட் கட்சியில் போட்டியிட்டு தோல்வியைத் தழுவிய தொடர்ந்தும் பின்னர் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலை அறவே நிராகரித்தார். இலங்கையின் வர்க்கப் புரட்சியை இலக்காகக் கொண்ட இவர் தொழிற் சங்கப் போராட்டம், தீண்டாமை ஒழிப்புப் போராட்டம் என்பவற்றை வழிவகைகளாகக் கையாண்டார். ஆனால் இவற்றிற்கூடாக தனது இலக்கை அடைவதற்கு எவ்வளவு தூரம் வெற்றி பெற்றார் என்பது கேள்விக்குறியே. அவற்றிற்காக வைக்கப்பட்ட வேலைத் திட்டங்கள் எவ்வளவு தூரம் விஞ்ஞான பூர்வமானவை என்பது விமர்சனத்துக்குரியவையே.

மேலும் தேசிய இனப் பிரச்சினை பற்றிய இவரது கண்ணோட்டமோ அல்லது தீர்க்க தரிசனமோ பிற்காலங்களின் பல கேள்விகளை உருவாக்கின.

ஆனாலும் சண்முகதாசனாலும், அவர் சார்ந்த இடதுசாரிகளாலும் கவரப்பட்ட பல இளைஞர்கள் பிற்காலங்களில் புதிய சிந்தனை கொண்டவர்களாக வளர்ந்தனர். இவ்விளைஞர்களில் பலர் தேசிய விடுதலை அமைப்புகளில் இணைந்து கொண்டதுடன் அவ்வியக்கங்களின் வர்க்கச் சிந்தனைகளுக்கான விதைகளை விதைத்தனர்.

1971ல் ஜே.வி.பி. னரின் கிளர்ச்சிக் காலங்களில் சண்முகதாசன் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார். அப்போது "ஒரு மார்க்சிசவாதியின் பார்வையில் இலங்கை வரலாறு", "இலங்கையின் இடதுசாரி இயக்கத்தின் ஒரு சுருக்கமான வரலாறு" என்ற இரண்டு புத்தகங்களை எழுதி முடித்தார். பிற்காலத்தில் "ஒரு கம்யுனிஸ்ட் போராளியின் அரசியல் நினைவுகள்" என்னும் நுாலையும் எழுதினார்.

இலங்கையின் இடதுசாரித்துவ அரசியல் வரலாற்றின் சண்முகதாசனின் பங்கும் பிரதானமானது.

இலங்கையின் புதிய அரசியல் வரலாற்றினை அமைக்க எண்ணுபவர்கள் இவரதும் இவரது கட்சி சார்ந்த அரசியலையும் விமர்சனத்துக்கு உட்படுத்துதல் மிகவும் இன்றியமையததாகும். மொத்தத்தில் இலங்கையின் இடதுசாரி வரலாற்றில் ஒரு மார்க்சிச புத்திஜீவியை இழந்துள்ளது.

**நெப்போலியன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அயோத்தியில் இந்துமத வெறி

இன்று உலகாளவிய அளவில் அதிகார சக்திகளின் கொடூரக் கரங்களில் நசிபட்டுச் சொரியும் இரத்தமும் கண்ணீரும் கணக்கிலெடுக்கையில் அவற்றில் கணிசமான பகுதியை முஸ்லீம் மதத்தவரது பங்கு நிரப்புகிறது.

இவை காத்தான்குடி, பொலன்நறுவை, அயோத்தி, பாலஸ்தீனம், பொஸ்னியா, ஈராக், ஜேர்மனியல் வாழும் துருக்கியர் ..... என வரிசை நீண்டு கொண்டே செல்கிறது.

மார்கழி 6ம் திகதி பாபர் மசூதி நொருக்கி வீழ்த்தப்பட்டது. இதன் மூலம் மதச் சார்பற்ற அரசு என்று சொல்லிக் கொண்ட இந்திய மத்திய மாநில அரசுகளின் உண்மையான மதவெறியை உலகுக்கு நிரூபித்தனர்.

இந்து, இந்தி, இந்தியா போன்ற பெரும்பான்மையினரைக் கவரக்கூடிய சுலோகங்களை பயன்படுத்தி அரசியல் லாபம் தேடுவோர்களான ஆர்.எஸ்.எஸ். , பாரதீய ஜனதா, விசுவ இந்து பரீசித், சிவசேன, பச்ரங்கதன், இந்து முன்னணி, தமிழ் நாடு பிராமணர் சங்கம் போன்ற அமைப்புகள் இந்த அடாவடித்தனங்களுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் பங்கேற்றனர்.

இன்றைய உலகின் தேசிய அமைப்புகள் பல வரலாற்றின் தேசிய இயக்கத்திற்கான முற்போக்கு பாத்திரத்தை இழந்து பிற்போக்கு மரபுவாதம், மத அடிப்படைவாதம் போன்றவற்றுள் தள்ளப்பட்டு வருகின்றன. அதைவிடக் கேவலமான முறையில் அரசியல் இலாபங்களுக்காக மதவாதத்தையே தேசியவாதமாக காட்ட முனைகின்றன. உதாரணமாக அயோத்தியில் அராஜகங்களுக்கு தூண்டுதலாக இருந்த பிரச்சாரங்களைக் காணலாம். "இராமர் ஓர் மதத்தின் கடவுளரல்ல, இந்திய ஒருமைப்பாட்டின் சின்னம், அத்துடன் மதச்சார்பின்மை போலியானது என்றும், இந்து இராஜ்ஜியம் நிறுவுவதே தேசிய பாதுகாப்பு" பிரச்சாரங்கள் மேற்கொண்டனர். அதுவுமில்லாமல் மொகலாயர்களின் படையெடுப்பு இந்துக் கோவில்களை அழித்ததாகவும் இந்து மதத்தை அவமதித்தாகவும் கூறினர். இஸ்லாமியர்களின் ஆக்கிரமிப்பை எதிர்த்த இந்து சாமியார்களை கௌரவிக்க வேண்டியே இம்மசூதி உடைக்க வேண்டும், அதிலேயே இராமர் கோவில் நிறுவ வேண்டும் என்றும் பிரச்சாரம் செய்தனர்.

ஜேர்மனியில் நாஜிகள் ஆரிய இனத் தூய்மையும், மேன்மையும் தம்மிடமே உள்ளதாக கூறி ஆட்சியைக் கைப்பற்ற பண்ணிய தந்திரோபாயங்களை இந்தியாவிலுள்ள இந்து மத வெறியர்கள் அரசியல் லாபங்களுக்காக செய்கின்றனர். ஜேர்மனியில் யூத மக்களை நாட்டின் எதிரிகளாக்கி, கேவலமாக்கி ஆரிய இன மேன்மையை நிலை நாட்டுவதாக காட்டிக் கொண்டனர். நாஜிகள் யூதர்களை கொன்று குவிப்பதற்காக நாட்டின் வரலாற்றையே திரித்தனர். அதேபோலவே முஸ்லீம்களையும், மொகாலயர்களையும் இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு எதிரிகளாக்கி கொன்று குவிக்கின்றனர் இந்துமத வெறியர்கள்.

தொடர்ந்தும் முஸ்லீம்களை ஆத்திரமூட்டியும், அதன் மூலம் முஸ்லீம்களை இஸ்லாமிய தீவிர அமைப்புகளுக்குள் தள்ளி மதப்போராட்டங்களை வளர்த்து அதில் தங்களின் பிழைப்பைத் தேடிக் கொள்கின்றனர். இந்த நடவடிக்கையில் மத்திய அரசின் அக்கறையீனம் இந்துமத வெறிக்கு துணைபோயுள்ளது. தகுந்த நேரத்துள் மசூதிக்குப் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்காமல் உத்திரப் பிரதேச மாநில அரசுக்குரிய அதிகாரங்களில் தலையிட முடியாது என்றனர். ஆனால் காஷ்மீர், அசாம் போன்ற மாநில பிரச்சினைகளுக்கு மத்திய அரசின் இராணுவத்தை ஏவிவிட்டனர். ஏன் இலங்கைக்கே படையனுப்பியவர்கள் இங்கே கைவிரித்து விட்டனர்.

இதே தற்செயலாக ஆத்திரம் கொண்ட இந்துக்களின் உணர்ச்சிக் கொந்தளிப்பால் நடந்ததாக சொல்வது படுபொய். கரசேவகர்கள் என்னும் கூட்டத்திற்கு முறையாக பயிற்சி கொடுத்த பின்பே நடாத்திமுடிக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக ஏற்கனவே இந்திய நீதிமன்றத்தில் வழக்கு நடந்தது. அதன் முடிவில் இராமர் பிறந்த இடமாகவும் அங்கே இராமர் கோவில் இருந்ததாகவும், அது முஸ்லீம்களால் அழிக்கப்பட்டு மசூதி கட்டப்பட்டது என்பதற்கு ஆதாரம் இல்லையென ஆராய்ச்சாளர்களின் முடிவுகளை ஆதாரமாகக் கொண்டு நீதிமன்றம் இவை உண்மையில்லை என தீர்ப்பெடுத்தது. இத்தீர்ப்பை எதிர்த்து பகிரங்கமான மதவெறியர்களின் நடைமுறையை இந்திய அரசு கண்டு கொள்ளவில்லையா?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதன்போது புகைப்படப்பிடிப்பாளர்கள், பத்திரிகையாளர்கள், இதனை எதிர்த்த ஜனநாயக சக்திகள் எனப் பலரும் கரசேவகர்கள் என்னும் மதவெறியர்களால் தாக்கப்பட்டனர். ஒட்டு மொத்தமாக இவர்களின் செயல்கள் அயோத்தியல் மட்டுமல்ல சூழவுள்ள பிரதேசங்களிலும், நாடெங்கிலும் சிதறியும் முஸ்லீம் மக்களுக்கெதிராக நடந்தன.

இந்தியாவில் பட்டினி, வேலையின்மை, பொருட்களின் விலையேற்றம் போன்றவற்றிற்கு எதிராக மக்கள் எழுப்புகின்ற போர்க்கொடியை திசைதிருப்பவே மதம், சாதியம், என்ற பிரச்சினைகளை பலமாகக் கிளறிவிடுகின்றன அரசியல் கட்சிகள். இதன் மூலம் மக்கள் பிளவுபட்டு தங்களுக்குள் மோதிக் கொள்கின்றனர். இதன் மூலம் தமது சுரண்டலுக்கும் ஏகாதிபத்தியங்களிற்கு மக்களின் உழைப்பை அடகு வைப்பதனை சுலபமாக்குகின்றன.



# லலித் கொலை

இலங்கையின் முன்னை நாள் பாதுகாப்பு அமைச்சரும் தற்போதைய ஐக்கிய ஜனநாயக தேசிய முன்னணியின் தலைவருமான லலித் அத்துலத் முதலி ஏப்பரல் 23 அன்று தேர்தல் பிரச்சாரக் கூட்டம் ஒன்றில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார். ஐ.தே.க.வின் சிரேஷ்ட தலைவர்களுள் ஒருவராக இருந்த இவர் ஜே.ஆர்.ன் மந்திரி சபையில் தேசிய பாதுகாப்பு அமைச்சராகத் தெரிவு செய்யப்பட்ட இவர் தமிழ் மக்களின் பாரம்பரிய நிலங்கள் மீது பாரிய தாக்குதல்களை மேற்கொண்டு 1987ல் 'ஒப்பரேஷன் லிபரேஷன்' என்னும் தாக்குதலை பாரிய உயிரழிவுகளின் மத்தியில் நடத்தி முடித்தவர். பின்னர் 1987 யூலை நடைபெற்ற இந்திய இலங்கை ஒப்பந்தத்தை பிரேமாவுடன் சேர்ந்து நிராகரித்தவர். பின்னர் பிரேமதாசாவின் காலத்தில் கல்வி, உயர் கல்வி அமைச்சராகவும் பணியாற்றியவர். 91க்குப் பின்னர் பிரேமாவின் நிர்வாகத்துடன் ஏற்பட்ட நாற்காலிச் சண்டையின் காரணமாக பிரேமதாசாவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்னெடுப்பதில் தீவிரமாக இருந்தவர். பிரேமதாசாவின் ஆட்சிக் காலத்தில் கட்சிக்குள்ளேயே பிரேமதாசாவிற்கு பெரும் தலையிடியாக இருந்தார். கட்சியில் இருந்து வெளியேறிய பின்னரும் தொடர்ந்தும் ஐ.தே.க.வின் உட்கட்சி ஜனநாயக மறுப்பு, தனிநபர் ஆதிக்கம், தனிநபர் மறுப்பு ஆகியவற்றைக் கூறுவதன் மூலம் தனக்கு அரசியல் லாபத்தைத் தேடியவர். வரப்போகும் தேர்தல் பிரச்சார வேலைகளில் தன்னை மும்மரமாக ஈடுபடுத்தியவர். தமிழ் பேசும் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தின் எழுச்சிக் காலங்களில் இளைஞர் இயக்கங்களின் போராட்டத்தை மிகவும் உன்னிப்பாக அவதானித்து அவற்றை நசுக்கும் முயற்சியில் ஈடுபட்டவர். தேசிய பாதுகாப்பு என்ற போர்வையில் தமிழ் பேசும் நியாய பூர்வமான கோரிக்கைகளை எதிர்த்தவர். தமிழ் பேசும் மக்களின் போராட்டத்திற்கு எதிரான யுத்த நடவடிக்கைகளின் மூலமே தென்னிலங்கை அரசியலில் பிரபலமானார். தமிழ் பேசும் மக்களிற்கு எதிராக மட்டுமல்ல தனது இனத்தினுள்ளே போராட முனைந்த முற்போக்கு சக்திகளையும் ஜனநாயகவாதிகள் பலரையும் அழித்தொழிப்பதில் முன்னின்றவர். ஐ.தே.க.வின் உட்கட்சி ஜனநாயகம் மறுப்பினையும் பிரேமதாசாவின் அதிகாரப் போக்கினையும் அம்பலப்படுத்துவது என்பது இவரைப் பொறுத்தவரையில் வெறும் சொந்த அரசியல் லாபங்களுக்காகவே அன்றி உண்மையான ஜனநாயகத்துக்காக அல்ல. இவரால் ஆரம்பிக்கப்பட்ட கட்சியின் வேலைத் திட்டங்களில் கூட இனப் பிரச்சினை தொடர்பான எந்தவிதத் தீர்வுத் திட்டமும் இல்லை. கொழும்பு வாழ் நடுத்தர மற்றும் மேல்தட்டு மக்களிடம் கணிசமான செல்வாக்குப் பெற்ற லலித் ஐ.தே.க.வை தொடர்ந்தும் பலவீனப்படுத்துவதில் கவனமாக இருந்தார். எதிர்கால அரசியலில் பிரேமதாசாவிற்கு பாரிய பிரச்சினையாக உருவெடுத்தார். இவரது கொலையென்பது தென்னிலங்கை அரசியலில் அதிகாரப் போட்டியின் விளைவாகவே பலராலும் கணிக்கப்படுகிறது. விடுதலைப் புலிகளின் மீதான கொலைப்பழி சுமத்தல் என்பது திசை திருப்பல் நாடகம் என்றே படுகிறது. இவ்வகையான கொலைகள் வடக்கைப் போலவே தெற்கிலும் அரசியல் அதிகாரப் போட்டி என்பது கொலைவெறி கொண்டு திரிவதைக் காட்டுகிறது.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கனடாவில் தொடரும் தாக்குதல்கள் . . .

## வன்மையாக கண்டிக்கிறோம்.

வன்முறை வரலாறு

— தாயகம் பத்திரிகை விற்கும் வியாபார நிலையங்களில் விற்பனைக்குத் தடை முயற்சி! — தாயகப் பிரதிநிதி மீது தாக்குதல்

— இளைய பாரதியின் வீட்டில் துப்பாக்கி சூடு! கொலைப் பயமுறுத்தல்!


— 14— 02 — 93 செந்தாமரை பத்திரிகையாசிரியர் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்!

— ஸ்காபரோ உணவு விடுதியில் உணவு உண்டு கொண்டிருந்த சிங்களக் குடும்பத்தினர் மீது காட்டுமிராண்டித்தனமான துப்பாக்கிச் சூடு!

— ஸ்காபரோவில், உடுப்பிட்டி — வல்வெட்டித்துறை இடையேயான மோதல். சண்டையயில் இருசாரரும் துப்பாக்கிப் பிரயோகம்!

— ஏப்பரல் 10 சனிக்கிழமை இரு தமிழ் குழுக்களிடையே சண்டை. ஆறு தமிழர் கைது.

— வோர்டன் / Fஞ்ச் சந்தியில் சிட்டி பாபு எனும் தமிழ் இளைஞர் வேறு தமிழ் குழுக்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.



சிட்டி பாபு என்னும் இத் தமிழ் இளைஞர் ரொறன்ரோவில் உள்ள தமிழ்க் குழுக்களிடையிலான மோதலின் விளைவால் கொல்லப்பட்டான்.

## பத்திரிகாதர்மம்

"நல்ல புரிந்துணர்வுடன்" தமிழ்க் குழுக்கள் சண்டை போட இங்குள்ள வெகுஜன பத்திரிகைகள் மிகுந்த பத்திரிகா தர்மத்துடன் அதை வியாபாரமாக்க; உதாரணம் இளையபாரதி என்ற வானொலி நிகழ்ச்சி நடத்தும் நபரின் வீட்டுக்குச் சென்ற வீரத் தமிழர் அவரின் வீட்டுக் கதவில் சுட்டனர். இது சம்பந்தமாக அவரின் கருத்துகளை இங்குள்ள பத்திரிகைகள் வெவ்வேறு விதமாகவே பிரசுரித்தன. ஆனால் இது சம்பந்தமாக கனடாவில் வெளிவரும் செந்தாமரை பத்திரிகை இளையபாரதியை தர்மசங்கடமான நிலைக்கே தள்ளியது. செந்தாமரை ஆசிரியர் இளையபாரதிக்கு திறந்த மனதுடன் அறிவுபூர்வமான 30 கேள்விகளை(செந்தாமரையில்) வழங்கினார். இது இச்சம்பவத்தை நிகழ்த்தியவர்களுக்கு ஒத்தூதும் நிலையாகவே அமைந்தது. ஆனால் பின்னர் ஏப்பரல் 10ம் திகதி ஒன்ராரியோ விஞ்ஞான கூடத்தில் அமைந்திருக்கும் திரைக்கூடத்தில் படம் பார்த்து விட்டு வெளியில் வந்த ஜெயராஜ்(செந்தாமரை ஆசிரியர்) வீரத் தமிழரால் அடித்து நொறுக்கப்பட்டார். இது தொடர்பாக கனடாவில் இருக்கும் ஏனைய பத்திரிகைகள் தமது கண்டனங்களை தெரிவித்திருந்தன. (இது தொடர்பாக எந்தப் பத்திரிகைகளும் ஜெயராஜுக்கு 30 கேள்விகளை வழங்கவில்லை.) இச்சம்பவம் தொடர்பாக தனது பத்திரிகை மூலமாக தனது வாசகர்களுடன் கூட இதைப் பகிர்ந்து கொள்ளத் தவறினார். மாறாக ரொரன்ரோ சன்னில் வந்த கட்டுரையை மறுபிரசுரம் செய்த வீரகேசரியைத்தான் 25 — 02 — 93 இதழில் மறுபிரசுரம் செய்தார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலங்கை ஜனாதிபதி பிரேமதாச தற்கொலைக் குண்டு வெடிப்பின் மூலம் அழித்தொழிக்கப்பட்டார்

ஜனநாயக தேசிய முன்னணியின் தலைவர் லலித் சுட்டுக் கொல்லப்பட்ட சில நாட்களிலேயே பிரேமதாசாவும் கொல்லப்பட்டார். பிரேமதாசாவை ஆளுமை மிக்கவராகவும் தமிழ் பேசும் மக்களின் மீது ஒப்பீட்டளவில் குறைவான இனவாதம் கொண்டவராக பார்க்கப்படுகின்ற வேளையில் பிரேமதாசாவின் மற்றைய அம்சங்களும் கவனிக்க வேண்டும்.



தரகு முதலாளித்துவம் தறிகெட்டதனமாக இலங்கையின் சகல துறைகளையும் ஊடுருவியதன் நேரடி விளைவாகவே பாசிச அராஜகமும், அரசியல் பழிவாங்கலும் உச்சக்கட்டமாயின. இவற்றின் சிறப்பான ஒரு பிரதிநிதியாகவே பிரேமதாசா இயங்கி வந்தார். தனக்கு சார்பான அரசியலை வென்றெடுப்பதற்காக தந்திரோபாயம், பழிவாங்கல்கள், கொலை செய்தல் என்ற எந்த ஆயதத்தையும் விட்டு வைக்கவில்லை. தனக்கு சார்பான பிரதிநிதிகள் மூலம் பல சூதாட்ட நாடகங்களை நடாத்தியவர். இப்பிரதிநிதிகளோ அல்லது சூதாட்ட நாடகங்களோ அல்லது அழிப்பு வேலைகளோ அம்பலமாகும் பட்சத்தில் அவற்றை முற்றாக அழிக்க மூர்க்கமாக செயற்பட்டவர். சில பிரதிநிகள் இவருக்கு எதிராகவும் திசை திரும்பினர். அவர்களையும் விட்டு வைக்கவில்லை. உதாரணம் உடுகம்பொல மறைவு.

இவரது அரசியல் வரலாற்றில் பல கறைபடிந்த அத்தியாங்கள் இரத்தத்தால் எழுதப்பட்டன. காலத்துக்கு காலம் பேச்சவார்த்தை நாடகமும் அதைத் தொடர்ந்து தமிழ் முஸ்லீம்கள் மீது பாரிய தாக்குதல்களும் நடத்தி முடிக்கப்பட்டன. இன ஒழிப்பு வேலையின் விளைவாக பொருளாதாரச் சேதம், மனித உரிமையாளர்களினதும் சர்வதேசங்களினதும் அழுத்தம், மக்களிடையே மனவிரக்தி என்பவற்றை கணக்கில் எடுத்து இவற்றிலிருந்து மீள போர்த் தயாரிப்புக்கு எடுக்கும் கால அவகாசமாகவே தொடரும் பேச்சுவார்த்தை நாடகங்கள் அமைந்தன.

தமிழ், முஸ்லீம் மக்களின் எல்லைப் புறப்பிரதேசங்களில் உள்ள விவசாய நிலங்கள் பறிபோனதற்கும் அதற்காக நிலமற்ற வறிய சிங்கள மக்களை ஆயுதங்களாக்கி அவர்களை கட்டாயமாக நில அபகரிப்பிற்கு தமிழ் முஸ்லீம் மக்களுடனும் புலிகளுடனும் மோத விட்டு இனவாதம் கூர்மைப்படுத்தப்பட்டது.

## ஒரு நூல் அறிமுகம்

### கட்டுநாயக்க ஏற்றுமதி பதனிட்டு வலயத்தின் உழைப்புப்படை முகங்கொடுக்கும் சமூக பொருளாதார பிரச்சினைகள் பற்றிய அறிக்கை என்ற நூலின் முன்னுரை

இலங்கை வாழ் சகல மக்கட் பிரிவினரும் பூரணத்துவமான ஜனநாயகத்தை வென்றெடுக்கவும் அனுபவிக்கவும் வேண்டும் என்னும் உயர் நோக்கத்திற்காக தனது பங்கினைச் செலுத்த செயற்படும் அமைப்பே இலங்கையில் ஜனநாயகத்திற்தான அமைப்பு ஆகும்.

இந்நோக்கிற்காக செயற்பட இலங்கை மக்கள் முகம் கொடுக்கும் சகல பிரச்சினைகளையும் சமூக, பொருளாதார, அரசியல், கலாச்சார பிரச்சினைகள் அனைத்தையும் விளங்கிக் கொள்வதும் இது தொடர்பாக எமது மக்கள் மத்தியிலே விழிப்புணர்வை ஏற்படுத்துதலும் அவசியமென இலங்கையில் ஜனநாயகத்திற்கான அமைப்பு கருதுகிறது.

இது மட்டுமன்றி, எமது நாட்டுக்குச் சமாந்தரமான நெருக்கடிகளுக்கு முகங் கொடுக்கும் ஏனைய மூன்றாம் உலக நாடுகளின் சமூக, பொருளாதார, அரசியல், கலாச்சார பிரச்சினைகளை விளங்கிக் கொள்வதும்' இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அவ்வவ் நாட்டு மக்களும், மக்கள் இயக்கங்களும் செயல்படும் முறையை அறிந்து கொள்வதும், எமது பிரச்சினைகள் தொடர்பாக நாம் செயல்படுவதற்கு அவசியம் என 'இலங்கையில் ஜனநாயகத்திற்கான அமைப்பு' உறுதியாக நம்புகிறது.

ஆதலால் எமது இப்பணியின் ஆரம்ப முயற்சியாக இச்சிறு நூல் வெளியிடப்படுகிறது. இலங்கை தொடர்பாகவும் ஏனைய மூன்றாம் உலக நாடுகள் தொடர்பாகவும் இவ்வாறான சிறு நூல்களை தொடர்ச்சியாக வெளியிடவுள்ளோம் என்பதனையும் அறியத் தருகின்றோம்.

கொழும்பு பல்கலைக் கழக சமுகவியல் திணைக்களத் தலைவர் பேராசிரியர் ரி.ஹெட்டியாராச்சி அவர்களால் 'பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழு' விற்காக 1990 ஜூன் மாதம் நடாத்தப் பெற்ற வெளிக்கள ஆய்வு அறிக்கையே இக்கட்டுரையாகும். இக்கட்டுரை 1991 டிசம்பர் மாதம் வெளியிடப்பட்ட UNIVERSITY OF COLOMBO REVIEW SPECIAL ISSUEஇல் இருந்து தமிழாக்கம் செய்யப்பட்டது.

இவ்வறிக்கையை தமிழில் நூலாக வெளியிட எமக்கு அனுமதி வழங்கிய பேராசிரயர் ரி. ஹெட்டியாராச்சி அவர்களுக்கு எமது நன்றி.


தேடகத்திலும் இதனைப் பெற்றுக் கொள்ளலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலங்கையின் தேசிய இனப் பிரச்சினையில் வரலாற்று உண்மைகளும் அதற்காக ஐ.தே.கட்சியின் பாத்திரமும் இவற்றின் சிறப்பான பிரதிநிதிகளான பிரேமதாசா போன்றோரின் செயற்பாடுகளும் மக்களுக்கு வெளிப்படை. ஆனாலும் கேவலம் அதிக பாதிப்புக்குள்ளான தமிழ்ப் பிரதேசங்களின் அதிலும் வடக்குப் பகுதியில் தேவையான அடிப்படை உணவு வசதியே நிராகரிக்கப்பட்டிருந்தது. பத்துத் தொன் தானியம் தேவையான போது இரண்டு அல்லது மூன்று தொன்களே கிடைத்தன. சில வேளைகளில் அதுவும் இல்லை. மற்றும் கிளாலி படுகொலை, குமுதினிப் படகு படுகொலை, கொக்கட்டிச் சோலை படுகொலை, கரையோர மீனவர்கள் படுகொலை மற்றும் பொதுமக்கள் மீதான குண்டுத்தாக்குதல்கள் போன்ற இன்னும் பல கொலைச் சம்பவங்கள்.



சுதந்திர வர்த்தக வலயத்திட்டத்தில் ஏகாதிபத்தியங்களுக்கு இலங்கை மக்களின் பொருளாதாரம், மனித வலு, கலாச்சாரம் என்ற எல்லாவற்றையும் சிறப்பாக பேரம் பேசி தொலைத்த பிரதிநிதிதான் பிரேமதாசா. சர்வதேசக் கொம்பனிகளின் நலனை முன்னிட்டு அவர்களின் சொற்படி அங்குள்ள தொழிலாளர்களின் உரிமைகள் மறுக்கப்பட்டன. தொழிற் சங்கம் அமைக்கும் உரிமை மறுப்பு, வீட்டு வசதியின்மை, வேலையில் பாதுகாப்பின்மை, இரவு நேர அதிக வேலை வாங்கல்கள் போன்வற்றுடன் குறைந்த ஊதியத்திலல் தொழிலாளர்கள் கசக்கிப் பிழியப்படுகின்றனர்.

தோட்டத் தொழிலாளர்களின் நிலையில் ஐ.தே.கட்சி வகித்த பத்திரம் மிகக் கேவலமானது. மலையக மக்கள் காலத்துக்கு காலம் இனவாதத்திற்கும் அரச பயங்கரவாதத்திற்கும் பலியாவதுடன் வாழ்க்கைத் தரமும் மிகக் கீழ்நிலைக்கு சென்று விட்டது. தொண்டமான் ஐ.தே.கட்சியுடன் சேர்ந்து முழுத்தொழிலாளர்களின் போராட்டத்தையும் ஏமாற்றுவது ஒரு புறமிருக்க தோட்டங்களைத் தனியார் மயப்படுத்தியமை மலையக மக்களை முதலாளிகளுக்கு பூரணமாக அடிமைக்கியது.

மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வாக சமூக மாற்றத்தை ஏற்றுக் கொண்டு ஜே.வி.பி.யனை அதற்குரிய ஸ்தாபனமாக நம்பி ஆயிரக் கணக்கான சிங்கள இளைஞர்களும் யுவதிகளும் போராட்டத்தில் குதித்தனர். இரண்டு முறைக் கிளர்ச்சியில் பல தோல்விகளையும் இழப்புகளையும் கண்ட ஜே.வி.பி. 87 — 89 பகுதிகளில் மிகக் கூடுதலான அழிவின் விளைவுகளைப் பெற்றது. 60, 000 க்கும் மேற்பட்டவர்கள் படுகொலை செய்யப்பட்டனர். விஜேவீர உட்பட பல முக்கியஸ்தர்கள் கொலை செய்யப்பட்டனர். ஜே.வி.பி.யின் ஆதரவாளர்கள் என்று சந்தேகப்பட்ட அப்பாவிகள் கூட களனியில் பிரேதமாக மிதந்தனர். இதைத் தவிர பல பத்திரிகையாளர்கள் கொலை செய்யப்பட்டனர். உதாரணம் றிச்சர்ட் டீ சொய்ஸா. பல பத்திரிகை ஸ்தாபனங்கள் காடையர்களால் அழிக்கப்பட்டன. உதாரணம் ராவய, யுக்திய. தொடர்பு சாதனங்கள் முழுவதும் பயமுறுத்தல் மூலம் கட்டுப்பாட்டுக்குள் வைக்கப்பட்டன. ஐ.தே.கட்சியின் அரசியலையும் பிரேமதாசாவின் அரசியலையும் விமர்சித்தவர்கள் உயிராபத்தை எதிர் கொள்ள வேண்டியிருந்தது.

இக்கொலையானது யாரால் கொலை செய்யப்பட்டதாகவோ எடுத்துக் கொண்டாலும் புலிகளாலோ அல்லது பிரேமதாசாவின் மற்றைய எதிரிகளாலோ இப்படிப்பட்ட தனிநபர் கொலைகள் எந்தத்தீர்வையும் கொடுக்காது. வெறும் பழிவாங்கல்களாகவே முடியும். இதுதவிர கொலை முயற்சியின் பின்னணியில் உள்ளவர்களும் எல்லா வகையிலும் வேறு ஒரு பிரேமதாசா போன்றவர்கள்தான் அல்லது பிரேமதாசா போன்று உருவெடுக்க கூடியவர்களே.

மக்களின் உண்மையான போராட்டங்களையும் உணர்வுகளையும் நசுக்குவதில் பிரேமதாசா எப்படிக் கெட்டிக்காரராக இருந்தாரோ அதே போன்று உருவாக நினைப்பவர்கள்தான் இதனை நடத்தி முடித்தவர்கள். மக்கள் ஜனநாயகம் என்பது இவர்களையெல்லாம் பொறுத்தவரை பூச்சியம்தான்!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஏகாதிபத்திய பொருளாதார வாதம், தேசிய சூனிய வாதம், தன்னியல்பு ஆகியவற்றை எதிர்த்த

வெற்றிகரமான

# இ.பொ.க. (மா-லெ), த.நா.அ.க.வின் ஆறாவது பிளீனமும் தமிழ்நாடு மார்க்சிய - லெனினியக் கட்சியின் முதல் மாநாடும்

(தி.பி. 2023, நளி, 27-30)

இந்தியப் பொதுவுடைமைக் கட்சி (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்) தமிழ்நாடு அமைப்புக் கமிட்டியின் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆறாவது பிளீனமும், தமிழ்நாடு மார்க்சிய - லெனினியக் கட்சியின் முதல் மாநாடும் திருவள்ளுவர் ஆண்டு 2023, நளித் திங்கள் 27-30ல் (1992, டிசம்பர் 12-15) வெற்றிகரமாக நடந்து முடிந்தது.

கட்சிப் பெயர் தாங்கிய செம்பதாகைகளும், செங்கொடித் தோரணங்களும், மார்க்சிய ஆசான்களின் படங்களும் அணி செய்த அரங்கில், நீண்ட உட்கட்சி விவாதத்திற்குப்பின் தமிழகம் முழுவதிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருந்த பிரதிநிதிகள் நளி, 27 (டிசம்பர் 12) காலை பத்துமணிக்கு ஒருசேர தியாகிகளுக்கு வீர வணக்கம் செலுத்திய பின் த.நா.அ.க. செயலர் தோழர் கார்முகில் அவர்களின் துவக்க உரையுடன் பிளீனம் எழுச்சிகரமாக துவங்கியது. பிளீனத்தில் அரசியல் - அமைப்பு அறிக்கை, கட்சித் தீர்மானம், கட்சி அமைப்பு விதிகள் ஆகிய ஆவணங்கள் சனநாயகப் பூர்வமான விவாதங்களுக்குப் பின் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டன. அரசியல் - அமைப்பு அறிக்கை நிறைவேற்றத்துடன் இ.பொ.க. (மா-லெ) த.நா.அ.க.வின் வரலாற்றுப் பூர்வமான தொடர்ச்சியாக தமிழ்நாடு மார்க்சிய - லெனினியக் கட்சியின் உதயத்தையும் அதன் மாநாட்டையும் பிரதிநிதிகள் அனைவரும் ஒரு மனதாக அங்கீகரித்தனர்.

இந்த மாநாடு இந்தியப் பொதுவுடைமை இயக்கத்தின் ஏகாதிபத்திய பொருளாதாரவாதம், தேசிய சூனியவாதம், தன்னியல்பு வேலைமுறை ஆகியவற்றுக்கு முடிவு கட்டியிருக்கிறது. இந்தியாவை தரகு - பார்ப்பனிய ஏகாதிபத்தியம் என்று சரியாக வரையறுத்திருப்பதுடன் தமிழ்நாடு மார்க்சிய - லெனினியக் கட்சியைக் கட்டி தமிழக விடுதலைப் புரட்சியை முன்னெடுத்துச் செல்லும் தீர்மானங்களை மேற்கொண்டிருக்கிறது.

மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட அரசியல் - அமைப்பு அறிக்கையும், கட்சித் தீர்மானமும் ஏகாதிபத்திய பொருளாதாரவாதம் இந்தியப் பொதுவுடைமை இயக்கத்தின் பொதுப்பண்பாக இருப்பதையும் அது இந்தியப் புரட்சி இயக்கத்தின் தேக்கத்திற்கு அடிப்படைக் காரணமாக இருப்பதையும் தெளிவு படுத்தியுள்ளன. ஏகாதிபத்திய பொருளாதார வாதத்தின் துணை விளைவான தேசிய சூனியவாதமும், தன்னியல்பு வேலைமுறையும் மார்க்சிய - லெனினிய புரட்சியாளர்கள் தமது சொந்த மக்களிடமிருந்து தனிமைப்பட அடிப்படைக் காரணமாக இருப்பதையும் இந்த ஆவணங்கள் தெளிவுபடுத்தியுள்ளன. இந்தியா ஒரு அரைகாலனி அரை நிலபிரபுத்துவ நாடு என்ற இ.பொ.க. (மா-லெ)யின் வரையறுப்பை தரகு - பார்ப்பனிய ஏகாதிபத்தியம் என திருத்தி இந்த ஆவணங்கள் சரியாக வரையறுத்திருப்பதுடன் இந்தியாவில் உள்ள தேசிய இனங்களின் பாட்டாளி வர்க்கங்கள் தமது சொந்த தேசிய விடுதலையுடன் இணைந்த வடிவத்தில் மட்டுமே சனநாயகப் புரட்சியை நிறைவு செய்ய முடியும் - இந்த வழியிலேயே இந்தியாவில் புதிய சனநாயகப் புரட்சி நிறைவுற முடியும் என்பதையும் தெளிவுபடுத்தியுள்ளன. இதன் மூலம் இந்தியப் பொதுவுடைமை இயக்கத்தின் ஏகாதிபத்திய பொருளாதாரவாதம், தேசிய சூனியவாதம், தன்னியல்பு வேலைமுறை ஆகியவற்றுக்கு முடிவு கட்டியுள்ளன.

மேலும் அரசியல் - அமைப்பு அறிக்கை, த.நா.அ.க.வின் கடந்த பனிரெண்டு ஆண்டுகால வரலாற்றைத் தொகுத்து அதன் வேலைமுறையிலும், ஊழியர் கொள்கையிலும் தன்னியல்பு நிலவியதையும் அதற்கு அடிப்படைக் காரணமாக இந்தியப் பொதுவுடைமை இயக்கத்தின் ஏகாதிபத்திய பொருளாதாரவாதம் நிலவுவதையும் சுட்டிக்காட்டியிருக்கிறது; கூடவே த.நா.அ.க.வின் கோட்பாட்டு முடிவுகளில் சரி, தவறுகளைப் பகுத்து சுய விமர்சன ரீதியில் வந்திருப்பதுடன் சரியான அம்சங்களை உயர்த்திப் பிடித்துள்ளது; த.நா.அ.க. கடந்த பனி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ரெண்டு ஆண்டுகளில் இ.பொ.க. (மா-லெ)யின் மூன்றாவது போக்கை மிகச் சரியாக முன்னெடுத்துச் சென்ற தன் மூலம் அடைந்த முன்னேற்றங்களையும் இவ்வறிக்கை தொகுத்துரைத்துள்ளது.

கட்சித் தீர்மானம், இன்றைய மாறியுள்ள சர்வதேச நிலைமைகளில் மூன்றுலகக் கோட்பாடு முடிவுக்கு வந்துவிட்டதையும், அமெரிக்க ஏகாதிபத்தியமே உலகின் ஒரே மேலாதிக்க வல்லரசாக இருப்பதையும் எடுத்து ரைத்திருப்பதுடன் அய்ரோப்பிய பொருளாதார சமூக நாடுகள் குறிப்பாக செர்மனியும், சப்பானும் மேலாதிக் கத்திற்குப் போட்டியிடும் நிலையில் உள்ளதையும், இந்தியா போன்ற துணை ஏகாதிபத்திய நாடுகள் பிற பிராந்திய நாடுகளையும், தேசிய இனங்களையும் மேலாதிக்க நோக்குடன் அடக்கி ஒடுக்கி அல்லது அச்சுறுத்தி வருவதையும் வகை பிரித்து தெளிவுபடுத்தியுள்ளது. மேலும் சோசலிச சமுதாயத்தில் வர்க்கப்போராட்டத்தை பிரதானக் கண்ணியாக கொள்வதன் மூலமே கம்யூனிசத்தை நோக்கி முன்னேற முடியும் என்ற கோட்பாட்டை உறுதியாக பற்றிக் கொண்டுள்ள கட்சித் தீர்மானம், சோசலிச நாடுகள் சோசலிச கட்டுமானத்தில் பெற்ற அனுபவங்கள் பருண்மையாக தொகுக்கப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்தியிருக்கிறது.

தமிழ்நாடு மார்க்சிய - லெனினியக் கட்சியின் உதயமும், இக்கட்சியின் தீர்மானமும், முதலாவதாக, ஏகாதிபத்திய பொருளாதாரவாதத்துக்கு முற்றுப்புள்ளி வைத்திருப்பதன் மூலம் ஊழியர் கொள்கையிலும், வேலை முறையிலும் நிலவிய தன்னியல்புக்கு முடிவு கட்டி கட்சியின் குணாம்ச ரீதியான வளர்ச்சிக்கு வழிவகுத்திருக்கிறது. இரண்டாவதாக, இ.பொ.க. (மா-லெ) புரட்சி இயக்கத்தின் தேசிய சூனியவாதத்திற்கு முடிவு கட்டியிருப்பதன் மூலம் இனியும் இ.பொ.க. (மா-லெ) அதே நிலையில் தொடர முடியாது என்பதையும் புரட்சி இயக்கத்தின் வரலாற்றில் புதிய அத்தியாயம் தொடங்கி விட்டது என்பதையும் முன்னறிவித்திருக்கிறது. மூன்றாவதாக, அரசியல் அரங்கில் அனைத்துவகை அரசியல் சக்திகளும் ஒன்று தரகு - பார்ப்பனிய ஏகாதிபத் திய முகாம் அல்லது சனநாயகப் புரட்சியுடன் இணைந்த தேசிய விடுதலை முகாம் என்ற இரு முகாம்களில் ஒன்றைத் தேர்வு செய்து கொள்ள வேண்டிய புதிய அத்தியாயத்தைத் தொடங்கி வைத்துள்ளது. தமிழ்நாடு மார்க்சிய - லெனினியக் கட்சியின் உதயமும் மாநாட்டின் வெற்றியும் இவ்வாறு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவையாக அமைந்துள்ளன.


இத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க மாநாடு பலம் பொருந்திய தமிழ்நாடு மார்க்சிய - லெனினியக் கட்சியைக் கட்டும் கடமையை முன் வைத்துள்ளது. அதற்கு ஒரு சித்தாந்தத் தளத்தை நிறுவுவதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளது.

மாநாடு முன் வைத்துள்ள பணிகளை நிறைவேற்றுவதற்கு கட்சியின் தலைமைக் கமிட்டியாக மைய அமைப்புக் குழு ஒன்றை மாநாடு ஒரு மனதாக தேர்வு செய்துள்ளது. த.நா.அ.க.வின் தொடக்கத்திலிருந்து கட்சியின் செயலராக தேர்வு செய்யப்பட்டு கட்சிக்கு அரசியல் - சித்தாந்த தலைமையளித்து வழிநடத்தி வந்த தோழர் கார்முகில் தமிழ்நாடு மார்க்சிய - லெனினியக் கட்சியின் பொதுச் செயலராக மாநாட்டில் ஒரு மனதாக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

பொதுச் செயலரும், அவர் தலைமையிலான மைய அமைப்புக் குழுவும் ஒரு மனதாக தேர்வு செய்யப் பட்ட பின்னர் மாநாட்டுப் பிரதிநிதிகள் வாழ்த்துரை வழங்கினர். அவை கட்சி முழுவதும் நிலவும் அரசியல் உணர்வுப் பெருக்கை வெளிப்படுத்துவதாக அமைந்திருந்தன; ஏகாதிபத்திய பொருளாதாரவாதத்திலிருந்தும், தேசிய சூனியவாதத்திலிருந்தும் விடுபட்டு தமது சொந்த மண்ணுடனும், மக்களுடனும் அய்க்கியப்படுவதில் வெற்றி கண்டுவிட்ட மார்க்சிய - லெனினிய புரட்சியாளர்களின் எழுச்சிப் பேருரைகளாக அவை திகழ்ந்தன.

பிரதிநிதிகளின் வாழ்த்துரையைத் தொடர்ந்து நிகழ்ந்த மைய அமைப்புக் குழு உறுப்பினர்களின் ஏற்புரைக் குப் பின் மாநாட்டு நிறைவுரை ஆற்றிய பொதுச் செயலர், தமிழ்நாடு மார்க்சிய - லெனினியக் கட்சி தோன்றியி ருப்பதன் வரலாற்று முக்கியத்துவத்தையும், கட்சியின் எதிர்கால திசை வழியையும் சுட்டிக் காட்டினார். இறுதியாக பன்னாட்டுப் பண் இசைக்கப்பட்டதுடன் முற்றிலும் இரகசியமாக நடைபெற்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க இ.பொ.க. (மா-லெ), த.நா.அ.க.வின் ஆறாவது பிளீனமும், த.நா.மா-லெ கட்சியின் முதல் மாநாடும் வெற்றிகரமாக முடிவுக்கு வந்தது.

**இவண்**



2 சிலை 2023,
(17, டிசம்பர் 1992).

**கார்முகில்**
பொதுச் செயலர்
**தமிழ்நாடு மார்க்சிய - லெனினியக் கட்சி**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கேள்வி

நிலவு கிழிந்து தூங்குகின்றது
வேலியில்.
நள்யாமம்
உதிர்ந்து கொண்டிருக்கும் இலைகளின்
மேல்
நடந்து திரிகின்றனர்
உயிர் திருகும் எமதூதர்கள்

அடி வளவின் கிணற்றுக்குள்
காலங் காலமாகப் புதையுண்டு கிடந்த
பூதங்களும்

இப்போது சிலிர்த்துக் கொண்டு
கிளம்புகின்றன.

துயிலில் தொலையாது
துயரில் கரையும் இன்றைய இரவில்
இதயத்தைப் பிடுங்கி
மேசை மீது வைத்து விடுகின்றேன்
குருதி சொட்டச் சொட்டப்
பெருகும் அதன் ஒலிக்குமுறலில்
கொஞ்ச நேரம் நடுங்குகிறது மேசை....

வெளியுலகின் காற்று வாங்கிக்
குளிர்ந்து போய்விடுகிறது இதயம்

அப்போது,
விட்ட இடத்திலிருந்து என்னுடைய
கவிதையைத் தொடங்குகின்றேன்
இன்றையைப் போல
என்றைக்குமே ஒரு கவிதைக்காக
நான் உழன்றது கிடையாது
வெளியில்
நெடு நாளாய் அலைந்தது இக் கவிதை

அதனுடைய ஆரம்பமே
ஒரு கேள்வி தான்
கொல்லப்பட்ட நண்பர்களைப் பற்றி
காணாமல் போன நண்பர்களைப் பற்றிய
ஒரு பெரிய கேள்வி அது.

கேள்வியில் பிறப்பெடுத்த
இந்தக் கவிதை
திடீரென்று என்னை விட்டுப் பிரிந்து
செல்கின்றது
நெய்யப்படாத வார்த்தைகளுடன்
அறிவால் நெறிப்படுத்தப்படாத
மிகையுணர்ச்சியும் சேர்ந்து
பிரவாகம் எடுக்க
இந்தக் கவிதை பிரிந்து செல்கிறது....

பௌர்ணமி நிலவிலும்
ஒளி தோயாமல் இருளில் கிடக்கிற
அந்த மாடி வீட்டைச் சுற்றிச் சுற்றி
வருகிறது .....
இறுகப் பூட்டியிருக்கும்
அதனுடைய பழங்காலக் கதவின் மீது
மூர்க்கமாக மோதுகிறது
இறுகிய யன்னல்களுக்கு அருகே சென்று
உன்னிப்பாகக் கேட்கிறது....

வெளிச் சுவரில் தெறித்திருக்கும்
குருதிச் சுவட்டருகில் நின்று உருகுகிறது
வீட்டின் வெளிப்புறம்
ஓங்கிய மரங்களில்

இன்னும் ஒட்டிக் கொண்டிருக்கும்
அவலக் குரல்களில் தேடுகிறது
இரவுகளில்
கடற்கரையில் காலடிச்சுவடுகளைப்
பின் தொடர்ந்து செல்கிறது
தாழம் புதர்களுள் ஒளிந்திருந்து
குருதியில் நனைகிறது......

அலைகளுக்கு மேல் அலைகிறது
அவை புரட்டிவிடும் உடல்களைத்
திருப்பித் திருப்பித் தேடுகிறது
கண்கள் இல்லா உடல்களுக்குக்
கண்களையும்
முகம் சிதைந்த உடல்களுக்கு
முகங்களையும் தேடிச் சினக்கிறது...

தெருவில் வீசப்பட்டுள்ள
ஒற்றைச் செருப்பின் மீது
வீட்டுப் படிகளில் வீசியெறியப்பட்ட
மூக்குக் கண்ணாடி மீது
தெரு முனையில் புரட்டிவிடப்பட்ட
மோட்டார் சைக்கிளின் மீது
தயங்கித் தயங்கி நிற்கிறது

தகப்பன் தொலைந்த பிறகு
பிறந்த குழந்தைகளின் பளிங்கு போன்ற
விழிகளில்
எதிரொலிப்பது என்ன என்று தெரியாமல்
குழம்புகிறது....
தாய்மாரின் கண்ணீர்த் துளிகளை
ஏந்திக் கொண்டு செல்கையில்
தலை குப்புற வீழ்கிறது

தூக்கு மரங்களின் கீழ்,
புதை குழிகளின் மேல்,
முகாம்களின் கோடிப்புறங்களில்,
மேசைமீது இப்போதும்,
அப்போது போலவே கிடக்கும்
மூடப்படாத பேனையருகில்,
முற்றுப் பெறாத கடித வரிகளில்
சுவரில் தூங்கும் படங்களில்
அறையில் சிந்தியிருக்கும் ஆடைகளில்
பூவாத பூவரசுகளில்
ஈரப் பனையில்
ஓரக் கூந்தலின் ஒற்றை மலரில்

நின்று பம்பரம் போலச் சுழல்கிறது.......

காற்றிலும் வெளியிலும்
மூடப்பட்ட எல்லா இரும்புக் கதவுகளிலும்
புகை கசியும் எல்லாத் துப்பாக்கிகளிலும்
அறைந்து கேட்கிறது —

எங்கள் குழந்தைகளுக்கு என்ன நடந்தது?

சேரன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வன்முறையை நிறுத்துக!

**காட்சி — 1; சித்திரை 1993**

வெலெஸ்லி/பார்லிமெண்ட் பகுதிக் குடியிருப்புத் தொகுதி ஒன்று; வீடு திரும்பும் தமிழ்ப் பெண் ஒருவர் உயர்த்தியுள் (elevator) நுழைகிறார். அவரைப் பின்தொடர்ந்து சில தமிழ் வாலிபர்கள். 'நல்ல சரக்கு மச்சான்' என்று ஒருவன் கூறுகிறான்; விரசக் கதைகள் தொடர்கின்றன. தன்னுடைய மாடி வந்ததும் தமிழ்ப் பெண் வெளியேற முற்படுகையில் கால் தடம் போட்டு அவரை விழுத்துகிறான் தமிழ் வாலிபன் ஒருவன்.

**காட்சி — 2; வைகாசி 1993**

ஸ்காபரோ, ஆங்கில வகுப்பு முடிந்து வீடு திரும்புகிறார் தமிழ்ப் பெண் ஒருவர். அவரைப் பின் தொடர்ந்து செல்கிறான் தமிழ் வாலிபன் ஒருவன். திடீரென்று பலவந்தமாக அவளைக் கட்டிப் பிடித்து முத்தமிட்டு விடுகிறான். பெண் அலறுகிறார். அருகிலிருந்த தமிழ் ஆண் உதவிக்குச் செல்லவில்லை.

**காட்சி — 3; வைகாசி 1993**

வெலெஸ்லி/பார்லிமெண்ட் , நடந்து செல்கின்றனர் இரண்டு தமிழ்ப் பெண்கள். அவர்களைத் தொடர்ந்து செல்கின்றனர் மூன்று தமிழ் வாலிபர்கள். ஒருவன் சொல்கிறான்: "பாவாடைக்குள் கை விடு மச்சான்!" மற்றவர்கள் பலத்துச் சிரிக்கின்றனர்.

இவை தொடரும் சம்பவங்கள் **இவை பெண்களுக்கு எதிரான வன்முறை.**

இங்கு வாழும் எமது தமிழ்த் தாய்மார், எமது சகோதரிகள், எமது புதல்விகள் மீது நடாத்தப்படும் இந்தப் பாலியல் துன்புறுத்தல் நிறுத்தப்பட வேண்டும்.

பெண்கள் மீது கட்டவிழ்த்து விடப்படும் இந்த வன்முறைகள் சட்ட விரோதமானவை மட்டுமல்லாமல் பாரிய வன்முறைக் குற்றமாகும்.

கோடை காலத்தின் போது தமிழ்ப் பெண்களைத் தெருக்களில் துன்புறுத்துவதும் விரசமான முறையில் கேலி செய்வதும், இம்சிப்பதும் கனடாவில் வழக்கமாகி விட்டது.

***இது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்!***

**பெண்களுக்கு எதிரான வன்முறை மிகவும் மோசமான வன்முறை என்பதை உணர வேண்டும்!**

**கேலி செய்வதும், விரசமாகக் கிண்டலடிப்பதும் ஒன்ராரியோவில் வன்முறைக் குற்றம் என்பதைத் தெரிந்து கொள்வோம்!**

**விழிப்பு**
**தமிழ் பெண்கள் அமைப்பு**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மறுபடியும்

**கதைச் சுருக்கம்:** இயக்குநரான ரவியும் அவர் மனைவியாக வரும் ரேவதியும் நடுவர்க்க குடும்பங்களாக காட்டப்படுகின்றன. குடிபோதையும் வைப்பாட்டியுமாக கணவனை நம்பாது தன் பெண் குழந்தையின் படிப்பிற்காக வேலை தேடும் ஒரு பெண்ணொருவரை வீட்டு வேலைக்கு அமர்த்திக் கொள்கிறார் ரேவதி. ரவிக்கும் நடிகையான ரோகிணிக்கும் இடையில் காதல் மலர்கிறது. காதலியின் நச்சரிப்பால் ரேவதியிடம் உண்மையைக் கூறி அவளிடமிருந்து பிரிந்து நடிகையுடன் வாழ்க்கையைத் தொடங்குகிறார் ரவி. ரேவதி ஒரு பெண் விடுதியில் தன் வாழ்க்கையைத் தொடங்குகிறார். அவளுக்கு ஓர் பாடகனின் நட்புக் கிடைக்கிறது. ரேவதியிடமிருந்து விவாகரத்து செய்வதற்கான ஒப்புதலைப் பெற்றுச் சென்று நடிகையை மணக்கும் ஏற்பாடுகள் முடிந்த நிலையில் நடிகை ரவியை திருமணம் செய்து கொள்ள மறுக்கிறார். வாழ்க்கையின் அனுபவங்களை தனித்து நின்று சந்தித்து மிகவும் தன்னம்பிக்கையுடன் இருக்கும் ரேவதி ரவி தான் மீண்டும் அவளுடன் சேர்ந்து வாழவிரும்புவதாக கூறுகிறார். ரவியின் வேண்டுகோளை மறுக்கிறார் ரேவதி. பாடகனின் நட்பு காதலாக மாறியதை அங்கீகரிக்காத ரேவதி அவனைத் தொடர்ந்தும் ஒரு நல்ல நண்பனாகவே பார்க்கிறார். தன் மகளின் படிப்புக்காக சேர்த்து வைத்த காசை தன் கணவன் குடித்து அழித்ததை பொறுக்க முடியாத வேலைக்காரி கணவனைக் கொலை செய்து விட்டு சிறைக்குச் செல்கிறாள். அநாதையாகி விட்ட அவளின் மகளை வளர்க்கும் பொறுப்பை ரேவதி ஏற்றுக் கொண்டு அவளுக்காக வாழமுற்படுவதாக கூறிகிறார்.

வியாபார நோக்குக்காக மட்டுமே எடுக்கப்படும் படங்களில் இருந்து வித்தியாசமான முறையில் இதை நெறியாள்கை செய்திருக்கிறார் பாலுமகேந்திரா. இன்னுமே பெரும்பான்மை சமூகத்தால் ஏற்றுக் கொள்ள முடியாத ஓர் உண்மையை மிகத் தெளிவாக வடித்திருக்கிறார். ஆணாதிக்க சமூகம் பெண்ணைத் தன் சுயநல நோக்கிறாக எப்படி தன்னைச் சார்ந்து வளர்த்திருக்கின்றது என்பதையும் அப்படி வளர்க்கப்படும் பெண் பிரச்சினைகள் வந்து தான் தனியே வாழ வேண்டும் என்ற கட்டாயத்திற்கு தள்ளப்படும் பொழுது தன்னால் அப்படி வாழ முடியாது என்று நினைத்து தடுமாறுவதையும் ஆனால் முரண்பாடுகளுக்கு முகம் கொடுப்பவளாள் தனியே வாழ முடியும் என்பதையும் எல்லோரும் விளங்கக்கூடிய விதமாக கூறியிருக்கிறார்.

முதலில் நாயகியை வீடு கணவன் குழந்தை என்று கனவுகள் உள்ள சராசரிப் பெண்ணாக காட்டி அத்தோடு வேலைக்காரப் பெண்ணிடம் கணவன் வைப்பாட்டி வைத்திருப்பதை எதிர்க்க வேண்டும் என்று அறிவுரை கூறும் பெண்ணாகவும் கதாநாயகியை அறிமுகம் செய்து அவளின் எதிர்காலப் போராட்டத்தை கிளைக் கதை ஒன்றின் மூலம் பார்வையாளனிடம் கருக்கொள்ள வைப்பதில் வெற்றி காண்கிறார். மூலக் கதையின் கதாநாயகிக்கும்(ரேவதி) படத்தில் வரும் வேலைக்காரப் பெண்ணுக்கு போர்க்குணாம்ச முரண்பாட்டை துல்லியமாக விளக்கும் பாலுமகேந்திரா அந்த முரண்பாட்டின் உந்துதல் எப்படி ரேவதியை பற்றின் கொள்கிறது என்பதை விளக்கத் தவறுகிறார்.

வாழ்க்கையில் நம்பியிருந்த கணவன்(பொருளாதாரம், பாதுகாப்பு, பாலியலுறவு) என்ற ஊன்று கோல் தவறிப் போன நிலையில் தான் தனியே நடந்து பழக்க வேண்டுமென்ற கட்டாயத்திற்கு தள்ளப்படும் பெண் முகம் கொடுக்கும் சில பிரச்சினைகள் அலசப்பட்டிருக்கின்றன. அவள் தன்னால் தனியே வாழ முடியும் என்று கண்ட பின் முடிவுகள் எடுப்பதையும் சின்ன விஷயங்களுக்குக் கூட குழம்பிக் கொண்டிருந்த அப்பெண் பிரச்சினைகள் எல்லாவற்றிற்கும் தன்னால் தனியே முகம் கொடுக்க முடியுமென்ற தன்னம்பிக்கையுடைய ஒரு பெண்ணாக மாறமுடியும் என்பது காட்டுவது வரவேற்கத்தக்கது.

கதாநாகனின் காதலியாக வருபவள் கடைசி நேரம் அவளிடம் கேட்கும் **"இன்று என்னைக் கண்டதால் உன் மனைவியை விட்டனி. நாளை இன்னொருத்தியைக் கண்டு என்னை விடமாட்டாய் என்று என்பதற்கு என்ன நிச்சயம்?"** என்று கேட்கும் கேள்வியும், ரேவதி தன்னிடம் திரும்பி வரும் கணவனிடம் **"நீ ஒரு பெண்ணிடம் இருந்து விட்டு வந்து என்னிடம் திரும்பி வாழ வேண்டும் என்று கேட்கிறாய். அதேபோல் நான் ஒரு ஆணிடம் குடும்பம் நடத்திவிட்டு திரும்ப வந்தால் உன்னால் என்னை ஏற்றுக் கொள்ளமுடியுமா?"** என்று கேட்பதும் சிந்திக்க வைக்கும் சில கேள்விகளாக அமைகின்றன.

முரண்பாடுகளுக்கு முகம் கொடுக்கும் எவருமே சந்திக்கும் வீண் பேச்சுக்கள் பற்றியும், அதையும் நாயகி என்ன விதமாக வெற்றி கொள்கிறாள் என்றும் குறிப்பிடாமல் இரண்டு வீட்டையும் பெண் விடுதியையும் சுற்றி படம் பின்னப்பட்டிருக்கிறது.

ஒரு பெண்ணுக்கு ஆண் நண்பனாக இருப்பது சந்தேகக் கண்ணுடன் பார்க்கும் கண்ணோட்டம் பிழை என்பது மிக அழகாக கூறப்பட்டிருக்கிறது. அத்தோடு கணவனை விட்டு விலகும் பெண்ணுக்கு உடற்பசி இருக்கும் என்ற கண்ணோட்டத்துடன் ஆண்கள் அப்பெண்களை அணுகுவதும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

ஓர் விழாவில் கணவனைக் காதலியுடன் கண்டதைப் பொறுக்க முடியாத ரேவதி குடித்து விட்டு கணவனிடமும் காதலியிடம் கேள்விகள் கேட்டு திட்டுவதாக அமைகிறது. குடித்து விட்டுத்தானா கேள்விகள் கேட்க முடியும்? இது ஆண்களின் மனோபாவத்தின் வெளிப்பாடு! இயல்பாகவே அவளிடம் எழும் போர்க்குணத்தை இயக்குநர் கொச்சைப்படுத்துகிறார்.

— கௌசிகா —



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வோட்டலூா பல்கலைக் கழக தமிழ் மாணவ மாணவிகளினால் மே 1 1993 மாலை 6.30 மணிக்கு ரொரன்ரோ சென்ரல் ரெக்னிக் பாடசாலையில் நடாத்தப்பட்ட கலையமுதம் என்ற கலைநிகழ்வு பற்றிய விமர்சனம்

**வோ**ட்டலூா பல்கலைக் கழக மாணவர்களினால் நடாத்தப்பட்ட கலையமுதம் கலைநிகழ்வானது இலங்கையில் கைதடியில் இயங்கும் அநாதைச் சிறுவர்களின் இல்லத்தின் நிதிக்காக நடாத்தப்பட்டது. ஈழத்தில் தமிழ் மக்களின் விடுதலைக்காக தேவைப்படும் நிதிக்கு, எந்தவொரு வேலைத் திட்டத்தையும் தமிழ் மக்கள் முன்வைக்காமல் இலகுவான வழியாக தூள் பெட்டியை அறிமுகப்படுத்தியவர்களும், கனடாவில் பொதுவேலைக்காக நிதி சேகரிப்பில் ஈடுபடுவோர் அரசிடமிருந்து பொதுச் சேவைகளுக்காக நிதிபெறுதல்(Government Fund) என்ற நிலையில்தான் சில சமூக சேவகர்கள் இயங்கும் நிலையில்; வோட்டலூா பல்கலைக் கழக மாணவர்கள் இவற்றிலிருந்து சற்று மாறுபட்டு தங்கள் சமூகப் பணிக்கான நிதியினை (இலங்கை அநாதைகளுக்கான) கனடாவில் உள்ள தமிழ் பேசும் மக்கள் முன் தங்கள் திறந்த வேலைத் திட்டமான கலை நிகழ்வின் மூலம் சேர்த்த நிதியினை அனுப்ப முயன்றது வரவேற்கப்பட வேண்டியதும் தொடரப்பட வேண்டிய பணியுமாகவே இன்று கனடாவில் உள்ளது. குறிப்பாக மாணவர்கள் தங்களது குறைந்த கால இடைவெளியில் இக்கலை நிகழ்வினை நிகழ்த்தியதும் அதற்காக அவர்கள் வழங்கிய உழைப்பும் என்றென்றும் வரவேற்கப்பட வேண்டியதாகவும் தமிழ் மக்கள் முன் தொடரப்பட வேண்டியதாகவும் உள்ளது.

இனி இவர்களால் செய்யப்பட்ட கலை நிகழ்வு எப்படியிருந்து என்பதற்கு வருவோம். அதற்கு முன் இக்கலை நிகழ்வினை பார்க்க வந்த பார்வையாளர்களை குறிப்பாக மூன்று வகைக்குள் பிரிக்கலாம்.

1. தமிழ்ப் பெண்கள்
2. கனடாவில் இருக்கும் பல்கலைக் கழக மாணவர்கள் தவிர்ந்த மற்றைய தமிழ் மாணவர்கள்
3. கனடா தமிழ்த் தொழிலாளர்கள்

மேலும் இம் மூன்று பிரிவினர்களினாலேயே மண்டபம் நிறைந்து வழிந்தது. எனவே இந்தக் கலை நிகழ்வினை ரசிக்க வந்தவர்களுக்கு வோட்டலூா பல்கலைக் கழக தமிழ் மாணவர்கள் என்ன கருத்துக்களை முன்வைத்தனர் அல்லது அவர்கள் மத்தியில் எப்படிப்பட்ட கருத்துக்களைப் பேச வைத்தனர் என்ற நிலையிலேயே இந்தக் கலை நிகழ்வு பற்றிய விமர்சனம் எங்கள் முன் எழுந்து நிற்கிறது.

நட்புடன் வோட்டலூா மாணவ/மாணவிக்கு

முதலாவதாக உன்னால் நிகழ்த்திக் காண்பிக்கப்பட்ட "தமிழன் யாருக்கும் சளைத்தவன் அல்ல" எனக் கூறி நீ அரங்கேற்றிய ஆடை அலங்கார நிகழ்ச்சி. இதன் மூலம் உனது மேலைத்தேய சிந்தனை அடிமைத்தனத்தின் போக்கையே நீ வெளிக்கொணர்ந்தாய். இதை ஏன் அரங்கேற்றினாய்? தமிழ் மக்களினது வீரமும் அதற்கு சளைக்காத கலாச்சாரமும் பட்டு வேட்டி, சாரி, சல்வார் கமீஸ் . . . . . தங்கியிருக்கிறதா? இந்த நிகழ்வில் நீ எத்தனை மாணவிகளை பங்குபற்ற வைத்தாய், இவர்களின் உழைப்பைக் கொண்டு பார்வையாளர்களாக அமர்ந்திருந்த பெண்களுக்கு நீ என்ன கருத்தை முன்வைத்தாய்? பார் இன்று கனடாவில் தமிழ்ப் பெண்களுக்கு என்ன நடக்கிறது? இதிலும் குறிப்பாக தமிழ்ப் பெண்கள் வீடுகளிலேயே முடங்கிக் கிடக்கிறார்கள். ஒவ்வொரு அப்பார்ட்மெண்டிலும் உள்ள தமிழ்ப் பெண் தினம் தினம் "பட்டு வேட்டித்" தமிழனின் ஆணாதிக்கக் கொடுமைக்கு இலாக்காகிக் கொண்டுதான் இருக்கிறாள். இதற்கு பல்கலைக் கழக மாணவிகள் என்ன விதிவிலக்கா? இப்படியான சூழலில் வாழ்ந்து கொண்டு இவ்வகையான அடக்குமுறைகளை வெளிக் கொணராமல் உனது உழைப்பை ஏன் ஆடை அலங்கார நிகழ்ச்சிக்கு வழங்கினாய்? ஆடை அலங்கார நிகழ்ச்சியை ஸ்பொன்சர் செய்தவர்கள்தான் கலை நிகழ்வை நடத்திக் காட்டியது போன்று அந்தந்த நிறுவனங்களை நீ அதிகம் விளம்பரப்படுத்தினாய். உனது உழைப்புக்கு நீயே சேற்றை அள்ளி வீசினாய். மொத்தத்தில் அங்கு வந்திருந்த பார்வையாளர்களை "இதுதான்ரி உனக்கு வடிவாயிருக்கும்", "இதுதான் மச்சான் மணியாய் இருக்கும்" என்றுதான் நீ பேச வைத்தாய். இது ஸ்பொன்சர் நிறுவனங்களுக்கு கிடைத்த வெற்றியேழிய உனது உழைப்புக்கு அல்ல.

ஆடை அலங்கார நிகழ்ச்சிக்கு பதிலாக இன்று இலங்கையில் அநாதைகள் என்ன உடையில் அலைகின்றார்கள் என்பதை நீ அறிந்து அந்தந்த உடைகளில் மாணவ மாணவிகள் வந்திருந்தால் நினைத்துப் பார் வந்திருந்த பார்வையாளரை நீ என்ன பேச வைத்திருப்பாய் அல்லது என்ன சிந்திக்கத் தூண்டியிருப்பாய்? உனது உழைப்பின் பயனை நீயே கண்டு பூரித்திருப்பாய்! உனக்கு இன்னும் உற்சாகம் பிறக்கும். தொடர்ந்து உனது அடுத்த கலை நிகழ்வு மேலும் சிறப்பாக அமைய வழிவகுத்திருக்கும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அடுத்து நீ "முனகல்" என்ற ஓர் நாடகத்தை அரங்கேற்றினாய். இதன் மொத்தக் கருத்தும் **கணவனுக்காக மனைவி மாறினால் குடும்ப உறவில் பிரச்சினைகள் எழா என்றும் சமூகத்தில் விடுப்புப் பேசுதல் நிறுத்தப்பட்டால் குடும்பங்களில் பிரச்சினை எழா என்றும்.** இதிலும் மாணவ மாணவிகள் கணிசமான அளவு பங்குபற்றினர். இதிலும் என்ன கருத்தை வெளிக்கொணர்ந்தாய்? இதில் நடித்த சாந்தி என்ற பெண் பாத்திரத்தைக் கொண்டு எவ்வளவு அடிமைத்தனமான கருத்துகளைப் பேசவைத்தாய். ஒரு ஆணை பெண் பாத்திரத்துக்கு உடை மாற்றி நடிக்க வைத்திருந்தாய். இந்தக் கதாபாத்திரத்துக்கு ஏன் ஒரு மாணவியும் உடன்படவில்லை ? நாடகம் மேடையேறிய பின்னர்தான் இதற்கான பதில் தெளிவாயிற்று. அந்தக் கதாபாத்திரத்தின் வசனங்களைப் பார்த்தால் எந்த மாணவியால் அந்தக் கதாபாத்திரத்தை ஏற்று நடித்திருக்க முடியும். அவ்வளவு வக்கிரம் பிடித்த வசன ஓட்டங்கள். (நாடகத்தின் கரு இப்படி இருக்க மற்றைய மாணவிளால் எப்படி இதில் பங்குபற்ற முடிந்தது) இதையெல்லாம் நீ நகைச்சுவை என்று எங்கிருந்து கண்டுபிடித்தாய். "கவுண்டமணி — செந்தில்" இன் வாரிசாக நீ ஏன் உருவெடுத்தாய். இதையும் ஒருவகை FASHION SHOW என்றா நினைத்தாய்? நடிப்பதற்கு மாணவ மாணவிகளும் ஏறுவதற்கு மேடையும் இருந்தால் நீ என்ன கருத்தை வேணுமென்றாலும் சொல்லலாம் என்ற துணிவை எங்கிருந்து பெற்றாய். இன்று கனடாவில் எத்தனை மாணவர்கள்(பல்கலைக் கழக) பயிலு நிலைக் காலங்கள் (WORK TERM) வேலை செய்கிறீர்கள். உனது பல்கலைக் கழக வாழ்வின் அவலங்கள், அதிலுள்ள சந்தோஷமான நிகழ்வுகள், ஆகக் குறைந்த உனது மனிதக் காதல் இதையெல்லாம் ஏன் கலையாக வடிக்க முயலவில்லை. எதிர்காலம் பற்றிய கவலையின் இருக்கும் தமிழ் மாணவ மாணவியருக்கு உனது நிகழ்காலம் பற்றி கூற நீ ஏன் மறுத்தாய்? " **வோட்டலு ாவில் நாங்கள் அடிக்காத பியரா"** என்று நாடகத்தில் கூறி, நீ மட்டும்தான் சிரித்தாய். யாராவது பார்வையாளன் சிரித்தானா? எப்படி சிரிக்கமுடியும்? பிறகென்ன மிகுதி உனது பதில் கண்டு!

**எமக்கும் உனக்குமான ஆரோக்கியமான தொடர்புகளுக்கு எம்முடைய வாழ்த்துக்கள்!**

நட்புடன்
தேடல்

23ம் பக்கம் தொடர்ச்சி

சாதாரண நிலைகளில் அவை மணவர் கூடாரங்களாகவும், அதன் மாறுபட்ட நிலைகளில் ***தீயின் சுரங்கமாகவே*** இருக்கும். இதற்கு யாழ்ப்பல்கலைக்கழகமும் விதிவிலக்கல்ல. எனவே யாழ்ப்பாணத்தை ஆண்ட புலிகள் இதன் மீது ஆதிக்கம் செலுத்தியது வியப்பல்ல. புலிகளின் அராஜகத்துக்கு எதிரான கருத்து யாழ்ப்பல்கலைக்கழகத்தில் முளை விடத் தொடங்கிய போது மாணவர் விடுதிகள் இரவு நேரங்களில் புலிகளால் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டன.

1986 நவம்பர் 4ம் திகதி விஜிதரன் கடத்தப்பட்டதற்கு எதிராக யாழ்ப்பல்கலைக் கழக மாணவர் சமூகம் கிளர்ந் தெழுந்து தனது போராட்டங்களை அறிவித்து நடைமுறைப்படுத்தியது.

— ஊர்வலங்கள் அடித்து நொருக்கப்பட்டன.

— பால் வேறுபாடின்றி மண்டைகள் அடித்து பிளக்கப்பட்டன, மாணவர்கள் பின்வாங்கவில்லை, போராட்டம் தொடர்ந்தது. ஊர்வலம், உண்ணாவிரதம் எனப் பரிணமித்தது. இதில் விஜிதரனின் பெற்றோரும் கலந்து கொண்டனர்.

— விஜிதரன் கொலை செய்யப்பட்ட விடயம் ஊர்ஜிதப் படுத்தப்பட்ட வேளை அவனது பெற்றோர் மட்டக்களப்பில் இருந்தனர். இதிலிருந்து ***புலித்தனங்களே மனிதக் கோட்பாடுகள்*** என அறிவித்தவர்களே கிட்டு போன்றோர். எனவே இவர்கள் ஆண்ட காலங்கள் (யாழ்க் குடா நாட்டுக்குள் இராணுவம் நுளைய முடியாத காலங்கள்) தமிழ் மக்களுக்கு பொற்காலங்களே.இக் காலங்களைத் தமிழ் மக்கள் எளிதில் மறந்திருக்க மாட்டார்கள். எனவே செல்வியை(விஜிதரனின் சக மாணவி) விடுதலை செய்! பிரபாகரனிற்கு கிட்டு தகவல் அனுப்பினார் என்று துணிவுடனும், பத்திகா தர்மத்துடனும் எழுத கனடா தமிழ் பத்திரிகையாளர்களால் மட்டுமே முடியும்.

களனியில் செய்த ரயர் கல்வியங்காட்டில் இருந்த T.E.L.O. போராளி மீது சரிபார்க்கப்பட்டபோதும் திருநெல்வேலிச்சந்தி ஓரங்களில் ஒவ்வோர் போராளியாக ரயர் போட்டு எரிக்கப்பட்டபோது அவர்கள் தமது இறுதிக்கணங்களில் கதறிய வார்த்தைகளில்............

வயல்களிலும் தோட்டங்களிலும் தங்களின் உழைப்பைக் காணிக்கையாக்கி தனது மகனைத் தன் கண்மணியாக வளர்த்து அவனுக்கு, நிலாக்காட்டி, அதனுடன் வீரமும் ஊட்டி வளர்த்தெடுத்த பின்பு அவள் காட்டிய நிலவும் அத்தாய் வியர்வை சிந்திய மண்ணும் அடிமைப்படுத்தப்பட்ட போது அந்த அடிமை விலங்குகளை ஒடிக்க தனது மகனைப் போர்க்களம் அனுப்பிவைத்த தாய்க்கு ..........


படுத்த படுக்கையையும் உதறி, உடுத்த உடுப்புடன் வன்னிக்காடுகளிலும் திருகோணமலை அகதி முகாம்களிலும் அவதிப்படும் அந்தத்தாயிடம் தனது பறிபோன நிலங்களையும் அவள் மகிழ்ந்திருந்த நிலவையையும் மீட்டெடுக்கப்போன தன் வீர மைந்தன் அமைதி ததும்பும் யாழ்ப்பாணத்தில் தெருப்பிணமாக உயிருடன் எரிக்கப்பட்ட சேதி கேட்டு அவள் குமுறி அழுத வார்த்தைகளுக்கு சொல் வடிவம் குடுக்க யாரால் முடியும்.

**ஏநபன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# விதைக்குள் புதைந்து ஒரு சுதந்திரம்

பெண்ணினமே உனக்கு விடுதலையா???
உதயவன் கூட உறைந்து போகும் உன்னிடம்
இன்னும் அடிமைத்தளைகளா... இல்லை
சிலர் தம் பொன்னுடைகளுக்கு போட்ட திட்டமா?????

பெண்ணினமே சற்று விழித்துக்கொள்!!
உன் சூரியோதயமே சுதந்திரமாக அமையட்டும்.
உன் சுதந்திரம் சேற்றில் சிக்கிவிட்டதா?
உன் மலர்களையாவது தாமரைகளாகத் மலரவிடு!!

நீ பெற்ற அந்த சுதந்திர உணர்வு
இவ்வையகம் பெற வழி செய்.
அறிவு கொண்ட மனித உயிர்களை
அடிமைகளாக்க முயல்பவர் பித்தராம் என்று புகட்டு.

அந்த எட்டயபுரத்து மீசைக்காரன் மட்டும் தான்
தன் மனைவிக்கு விடுதலை கொடுக்காமல் வாழ்ந்தவன்,
அவனொன்றும் இவ்வையகத்துள் உதயமானவனல்ல!
அவனும் லட்சுமி அம்மாளினால் உருவாக்கப்பட்டவன்தான்.

வரதட்சிணைக் கட்டிட வெடிப்புகளிற்கு சாந்து பூச பழகினோம்-ஏன்
அந்த மனித உயிர் அத்திவார பாகுபாட்டை மறந்து போனோம்??!
மனித உயிர்களையே பாகுபடுத்தும் இந்த கறுப்பு வெற்றிட பிரபஞ்சத்திலே
உன் வரதட்சணை ஒழிப்புக்கான தீப்பந்த ஒளி சுலபமாக விழுங்கப்படும்!!

உன் கரங்கள் தூரிகையால் ஓவியம் மட்டும் வரைவதில்லை!
தேவையேற்படின் உளிகளால் சிற்பங்களும் செதுக்கும் எனக்காட்டு!!
உன் சுவாசக் காற்று கூட மறுக்கப்பட்டாலும்
உன்னை சுவாசித்து உன் கொள்கைகள் வாழும் எனக்காட்டு!!

செந்தில்

www.tamilarangam.net



# இலங்கையர் மீது இனவெறித்தாக்குதல்

அன்மையில் கனடாவில் (Toronto) இரண்டு இனவெறித்தாக்குதல்கள் இலங்கையர்கள் மீது நடாத்தப்பட்டன. வடஅமெரிக்காவின் பிரதான பிரச்சினைகளாகிய நிறரீதியான, இனரீதியான அடக்குமுறைகளின் வெளிப்பாடான இத்தாக்குதல்கள் இதுவரையில் பூர்வீகக் குடிகள், ஆசிய, ஆபிரிக்க என்ற வெள்ளையர் தவிர்ந்த பல்இனத்தவர் மீதும் தொடர்ச்சியக நடாத்தப்பட்டன. இத்தாக்குதல்கள் அரசாங்கத்தாலும், பொலீசாலும், வெள்ளையர்களை மேன்மையாக எண்ணுபவர்களாலும் (நாசிகள்) செய்யப்பட்டன.

சிவராசா விஞசித்தம்பி

6 5 1993 அன்று சிவராசா விஞசித்தம்பி என்ற 41 வயதான இலங்கையர் இரவு வேலை முடிந்து வீடுதிரும்பும் வேளையில் குலான்ஸ் என்ற இனவெறியனால் மிருகத்தனமாக தாக்கப்பட்டு Toronto Western வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். இவரின் தற்போதைய உடல் நிலை 'கோமா' என்ற மயக்க நிலையை அடைந்துள்ளது. இவர் மூன்று பிள்ளைகளின் தந்தையுமாவார்.



குஞளன் முத்துலிங்கன

இத் தாக்குதலை நடத்திய குலான்ஸ் (Jason Robert Hoolans) Heritage front (militant white supremacist groups) இலும் Church of the Creator இலும் தொடர்புள்ளவர் ஆவார். இவரை பிணையில் விடுவிப்பதற்காக Heritage front தலைவராகிய Wolfgang Droege என்பவரும், Church of the Creator தலைவராகிய George Burdi என்பவரும் சென்றிருந்தனர்.

7 5 1993 அன்று குஞளன் முத்துலிங்கம் என்ற 32 வயதான இலங்கை வாலிபர் இரு இனவெறியர்களின் தாக்குதல்களுக்கு இலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மரணமானர். ஒரு ஆணும் பெண்ணுமாகிய இவ் இனவெறியர்களால் இரவு ஒன்பது மணியளவில் இத் தோல் வெறித்தாக்குதல் நடத்தப்பட்டது. இவ் இனவெறியர்கள் தேடப்பட்டுவருகிறார்கள்.

விஞசித்தம்பி சிவராசாவைத் தாக்கிய குலான்ஸ் நீதிமன்றத்தில்: "எனது இனத்தையும் , நாட்டையும், என் முயற்சியாலும், திறமையாலும் வெற்றிகரமாக நான் செய்தவைகளையும் குறித்து நான் மிகவும் பெருமைப்படுகிறேன்.

இந்த இன வெறி நடவடிக்கைகள் தொடர்பாக இங்குள்ள இலங்கை சமூகத்தவர்களது அமைப்புகள் குறிப்பிடக்கூடிய முறையில் நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளவில்லை. பாரியளவில் தங்களை பிரபலியப்படுத்தும் தமிழர் அமைப்புக்கள் எதற்காக மௌனித்தன? இங்குள்ள வெள்ளையர்களிடமும், அவர்களின் நிர்வாகத்திடமும் நல்ல பெயர்வாங்கி பிழைப்பு நடாத்தி இலங்கை அரசின் இனவாதத்திற்கு எதிராக மாத்திரம் அவ்வப்போது கூக்குரலிடுவார்கள்.

இங்குள்ள இலங்கை மக்களிடையே நிலவும் பிளவுகளான குழுவாதம், ஊர்வாதம், போன்வற்றிற்கு அப்பால் இன்று கனடாவில் யாதார்த்த வாழ்வின் பிரச்சனைகளுக்கு எதிராக முகங்கொடுப்போம்